பக்கங்கள்: இருபத்துநான்கு + A,B

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 23 புதன்கிழமை (07.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 223

-7 JUL 2010

# ஐ.நா. அலுவலகம் முற்றுகை சிறிது நேரத்தில் பிசுபிசுத்தது!

## சத்தியாக்கிரகம் இருந்தோரைப் பொலிஸார் அகற்றினர்

கொழும்பு, ஜூலை 07

கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ நேற்றுக் காலை ஆரம்பித்தார். எனினும், பிற்பகல் பொலிஸார் அங்கு பெரும் எண்ணிக்கையில் திரண்டு வந்து அவர்களைப் பலவந்தமாக வெளியேற்றினர்.

எனினும் நள்ளிரவிலும் மூன்று மேடைகளிலும் ஒரு சிலர் காணப்பட்டனர். (24 ஆம் பக்கம் பார்க்க)




கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிடப்போவதாக சில தினங்களுக்கு முன்பு அறிவித்த அமைச்சர் விமல் வீரவன்ஸ தனது போராட்டத்தை நேற்று திடீரென ஆரம்பித்தார். அமைச்சர் ஆயிரக்கணக்கானோருடன் வந்து பொலிஸ் தடையை உடைத்துக்கொண்டு வர முயற்சிப்பதையும், பான் கீ - மூனின் கொடும்பாவி எரிக்கப்படுவதையும், இளம் பிக்குகள் முன்னால் வர, பின்னால் ஊர்வலம் வருவதையும் படங்களில் காணலாம்.

# ஐ.நா. நிபுணர்குழு ஒருபோதும் கலைக்கப்பட மாட்டாது இலங்கை அமைச்சரின் கோரிக்கையையும் ஏற்கோம்!!

லண்டன், ஜூலை7

இலங்கை அமைச்சரின் கோரிக்கைக்கு இணங்க ஒரு போதும் ஐ.நா. நிபுணர்குழு கலைக்கப்படமாட்டாது. அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளரான பாரன்ஹக் நேற்றிரவு பி.பி. ஸிக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தவை வருமாறு

## தலைமைச் செயலகப் பேச்சாளர் ஆவேசம்

கொழும்பு ஐ.நா. அலுவலகத்தில் பணியாற்றும் எமது ஊழியர்களின் பாதுகாப்பு குறித்து நாம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம். அத்துடன் இது குறித்து அவதானித்து வருகின்றோம். இதேவேளை இலங்கை அரசுடன் இது தொடர்பாக (24 ஆம் பக்கம் பார்க்க)

# முற்றுகையில் இருந்து ஐ.நா. பணியாளர்கள் பொலிஸாரின் பாதுகாப்புடன் வெளியேறினர்!

## வதிவிடப் பிரதிநிதியை வெளிவிவகாரச் செயலாளர் வந்து மீட்டார்

கொழும்பு, ஜூலை 7

கொழும்பு, பம்பலப்பிட்டி பௌத்தலோக மாவத்தை, தும்முல்ல சந்தியில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகம் நேற்றுக்காலை முதல் முற்றுகையிடப்பட்டிருந்த நிலையில்- ஐ.நா. அதிகாரிகள் உட்பட அங்கு பணியாற்றும் ஊழியர்கள் நேற்று மாலை அங்கிருந்து வெளியேறினர்.

அங்கு பணியாற்றும் உள்ளூர், வெளிநாட்டு ஊழியர்கள் நேற்று மாலை 4.30 மணியளவில் தமது பணிகளை முடித்துவெளியேறமுற்பட்டபோது, அங்குகளேபரம்ஆரம்பமானது.

அங்கிருந்து எவரும் வெளியே செல்ல முடியாதவாறு அலுவலக வாயிலை அடைத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டம் நடத்தினர். அங்கு (24 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.செயலரின் நிபுணர் குழு இம்மாத இறுதியில் கூடவுள்ளது

ஜெனீவா, ஜூலை 7

ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ-மூனுக்கு இலங்கை விவகாரம் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக அவரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு திட்டமிட்டபடி இம்மாத இறுதியில் கூடவுள்ளது என அந்தநிபுணர் குழுவின் தலைவர் மர்சுகி தருஸ்மன் தெரிவித்தார். (24 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கட்சி எம்.பிக்கள் நேற்று நாடாளுமன்று முன் ஆர்ப்பாட்டம்

## குடும்ப ஆட்சிக்கு எதிராகக் கோஷம்

கொழும்பு, ஜூலை 07

சர்வாதிகாரத்துக்கு எதிரான ஒரு குடும்பத்தின் நலனுக்காகக் கொண்டுவரப்படவுள்ள அரசமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நாடாளுமன்றத்துக்கு முன்னால் ஆரம்பித்தது.

ஐ.தே.கட்சி எம்.பிக்கள் அனைவரும் நேற்றுக்காலை நாடாளுமன்றத்துக்கு முன்னால் சுலோக அட்டைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னர் நேற்றுக்காலை இந்த ஆர்ப்பாட்டம் நாடாளுமன்றத்துக்கு முன்னால் இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்கள் அனைவரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுவதற்கு முன்னர், (24 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் நிலைமைகள் சுமுகம் அடைகின்றன

# தமிழருக்கு இனிமேல் உடனடிப் புகலிட அந்தஸ்து வெளிநாடுகளில் கிடையாது!

கொழும்பு, ஜூலை 07

இலங்கைத் தமிழர்களுக்கு உடனடி புகலிட (அகதி) அந்தஸ்து வழங்கப்பட மாட்டாது என ஐக்கிய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தால் வெளியிடப் பட்டுள்ள சர்வதேச அகதிகள் தொடர்பான புதிய விதிமுறைக்கு அமைய இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலைமைகள் சுமுகமடைந்து வருகின்றன (24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்திக் கடல் நீரேரி சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கப்படமாட்டாது என்று அமைச்சர் ராஜித வாக்குறுதி



கொழும்பு, ஜூலை 7

உத்தேச மீன்பிடித்துறை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு நந்திக்கடல் நீரேரி சீனாவுக்குக் குத்தகை அடிப்படையில் வழங்கப்படமாட்டாது. அது மட்டுமன்றி வடக்குப் பிரதேசத்தின் கடல்வளம் நிறைந்த பகுதிகள் இனங்காணப்பட்டு நவீன தொழில்நுட்ப மீன்பிடி முறைகள் அறிமுகம் செய்யப்படும்.

இவ்வாறு உறுதி அளித்தார் மீன்பிடித்துறை நீரியல் வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன.

வடக்கு, கிழக்கின் வளம் நிறைந்த கடற்பிரதேசங்களில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் பொருட்டு அவற்றை சீனாவுக்குக் குத்தகைக்கு கொடுக்க முடிவாகியுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்தன.

இது சம்பந்தமாக மீன்பிடித்துறை நீரியல் வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்னவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சந்தித்து, உத்தேச திட்டத்தால் வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை விளக்கமாக எடுத்துரைத்தார்.

1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டின் மொத்த கடலுணவுத் தேவையில் பெரும்பகுதியை வடபகுதி மீனவர்கள் நிறைவேற்றிவந்தனர். ஆனால் கடல்வலயச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் அந்த நிலை மாறி, அவர்கள் காலத்துக்குக் காலம் இடம்பெயர்ந்து, இ போது அவர்களில் மிகப் பெரும்பாலானோர் தொழில் இழந்து வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் மீண்டும் தமது சொந்தக்காலில் வாழக் கூடிய நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

அவரின் கருத்துக்களை செவிமடுத்த அமைச்சர் ராஜித சேனாரத்னா, வடக்கு, கிழக்கு மீனவர்களின் தொழில் நிலையை முன்னைய நிலைக்குக் கொண்டுவருவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உதவப்படும் என்று நடாளுமன்ற உறுப்பினரிடம் உறுதியளித்தார்.

வடக்கில் உள்ள நீரேரிகள், குடாக் கடற்பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்கு உதவுவதற்கு ஏற்பாடு செய்வதாகவும் அமைச்சர் கூறினார். (அ)

## பாடசாலைகள் இன்று ஒரு மணியுடன் மூடப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 7

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் தடகள விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள்நிகழ்வுகள்இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளன.

இதனை முன்னிட்டு இன்று பிற்பகல் ஒரு மணியுடன் குடாநாட்டுப் பாடசாலைகள் அனைத்தையும் மூடி, மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் நிகழ்வில் பங்குபற்றுமாறு வடமாகண கல்விப் பணிப்பாளர் வி.இராசையா அறிவித்துள்ளார்.

(ஓ-6-23)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 07 ★ 06 ★ 1961 |  | 07 ★ 06 ★ 2010 |

### தம்பிமுத்து தர்மலிங்கம் (ரூபன்)

கடந்த 07.06.2010 திங்கட்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் பிரிவு அறிந்து எமக்கு ஆறுதல் கூறிய மற்றும் பிற வழிகளிலும் உதவிய அனைத்து அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (07.07.2010) புதன்கிழமை கீரிமலையில் இடம் பெற்று, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (09.07.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவபூதராயர் வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
021 321 9317 (100380)

குடும்பத்தினர்.


## தற்போது யாழ்ப்பாணத்திலும்!

CIMA

யாழ் மாணவர்களின் கல்விக்கனவு இன்று நனவாகிறது.

- சர்வதேசதர கற்கைநெறியுடன் நீங்களும் இணையுங்கள்
- கொழும்பின் முன்னணி விரிவுரையாளர்களின் விரிவுரைகள்



- 2 1/2 வருடங்களில் முழுமையாக கற்கை நெறியைப் பூர்த்திசெய்யமுடியும்.
- நீங்கள் CIMA கற்பதற்கு A/L பெறுபேறுகள் ஒரு தடையல்ல.

புத்தம் புதிய ஆரம்பம்- (Foundation)
10th July 2010

CAPSTONE
No. 01, Brown Road, Jaffna.
Contact: 077 9148753, 0777 883084



## புலமைச் சுடர் 2010 - 2011

8

தற்பொழுது பரபரப்பாக விற்பனையாகின்றது. 08.07.2010 - 14.07.2010

ஒரு வார ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் முன்னோடிக் கைசேடு

தரம் - 5, 4 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்கான சிறப்பு வழிகாட்டி

விநியோகப் பிரிவு
தொலைபேசி: 0215677222

### இவ்வாரக் கையேட்டில் ...

- தரம்-5 மாதிரிப்பரீட்சை வினாத்தாள்: I
  தொகுத்து வழங்குபவர்: N.S.தீபன் வவுனியா/பூந்தோட்டம் மகா வித்தியாலய ஆசிரியர்.
- தரம்-5மாணவர்களுக்கான மாதிரிப்பரீட்சை வினாத்தாள்: II
  தொகுத்து வழங்குபவர்: வே. அன்பழகன் யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை.
- பொது உளச்சார்பு- தொகுதியை ஒழுங்கமைக்கும் ஆற்றல்.
  தொகுப்பு: P.அம்பிகைபாகன்-கொழும்பு.
- தமிழ்மொழி கற்றல் குறிப்புக்கள்
  தொகுப்பு: பூ. பரமதயாளன், சம்மாந்துறை
- சுற்றாடல் கல்வி பயிற்சிகள்.
  தொகுப்பு: A.S.ஜெபர்-மட்டக்களப்பு.
- கணித பாடத்திற்கான விடை எழுதும் வழிகாட்டி
  தொகுப்பு: கலாபூஷணம் புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன்
- மூளைக்கு வேலை தரும் தந்திரக்கணக்குகள்
  தொகுப்பு: தர்மராஜ் ஜோசப் (இந்தியா)
- அற்புத விஞ்ஞான விளையாட்டு
  தொகுத்து வழங்குபவர்: நெல்லை சு.முத்து, (இந்தியா)
- சங்கமம்
  2010 அரச பரீட்சை எதிர்பார்க்கை வினாக்களின் அலசல்.

இவையனைத்தும் 10 ரூபா விலையில்

உங்கள் பிரதிகளை பிரதி வியாழன் தோறும் அருகிலுள்ள பத்திரிகை முகவர்களிடமும், புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


உ
சிவமயம்



## சங்கத்தானை அருள்மிகு வைரவசுவாமி கந்தசுவாமி கோயில்
## வருடாந்த மஹோற்சவம்
## 6 ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

இன்று (07.07.2010) புதன்கிழமை மாலை விஷேட நாதஸ்வர தவில் கச்சேரி

### நாதஸ்வர வித்துவான்கள்

- N.R.சந்தானகிருஷ்ணன் - இணுவில்
- VSR.இளையராஜா - இந்தியா
- P.இரஜீந்திரன் - நல்லூர்
- NR.மாக்கையா - இணுவில்
- NR.வாகீசன் - இணுவில்
- R.செந்தன் - கோண்டாவில்
- K.உதயநாதன் - இணுவில்
- K.K.கிருஷ்ணதாசன் - கோண்டாவில்
- K.பவப்பிரியன் - காரைநகர்

### தவில் வித்துவான்கள்

- NRS.இரவீந்திரன் - இணுவில்
- NRS.சுதாகரன் - இணுவில்
- PS.இரவீந்திரன் - நல்லூர்
- R.ஆனந்தகணேஸ் - கோண்டாவில்
- N.ஆனந்தராஜா - இணுவில்
- S.இராமதாஸ் - இணுவில்

★ ராகவன் குழுவினர் - சங்கத்தானை
★ பருத்திநகர் - விஜயகுமார், சதீஸ்குமார் குழுவினர்
★ சித்தார்த்தன், பிரதித்தன் குழுவினர் - சங்கத்தானை

(சி/568896)

6 ஆம் திருவிழா உபயகார[illegible], சங்கத்தானை, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழரின் உரிமைப் பசிக்கு உணவு புல்லுத்தானா?

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரண்டு தடவைகளுக்கு மேல் எத்தனை தடவைகளுக்கும் வகிக்கலாம் என்ற அரசாங்கத்தின் உத்தேச திட்டத்தை நிறைவேற்றுவதில் அரசாங்கம் அவசரப்படமாட்டாது என்று தகவல் கசிந்துள்ளது. அரசாங்கத்தின் புதிய முடிவை மூத்த அமைச்சர் ஒருவரே வெளிவிட்டிருக்கிறார் என்பது செய்தி.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு- செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டதும் அரசின் முதல் வேலை ஜனாதிபதியின் பதவிக் காலத்தை அதிகரிக்கும் விதத்தில் அரசமைப்பைத் திருத்துவது தான் என்று இதுவரை பிரசித்தப்படுத்தப்பட்டு வந்தது.

ஆனால், இப்போது அதனை அடக்கி, அமுக்கி வாசிக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. நாட்டின் இனப்பிரச்சினை மற்றும் நல்லாட்சி, அபிவிருத்தி, பொருளாதாரம், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், சாதாரண பிரசையின் அன்றாடச் சீவியத்துக்கான நிலையை மேம்படுத்துதல் போன்ற எத்தனையோ விடயங்கள் அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டியிருக்க –

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை அதிகரிக்கும் விடயத்துக்கு மட்டும் முக்கியத்துவமும், முன்னுரிமையும் தரப்படவேண்டுமா என்ற கேள்வி நாட்டு மக்களில் பெரும் எண்ணிக்கையினரிடம் எழுந்தது.

அதனைக் கவனத்தில் கொண்டுதான், ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிக்கும் அரசின் திட்டம் பின்தள்ளப்பட்டதாக நினைக்க வேண்டாம். உடனிருந்து கொல்லும் வியாதியாக ஜனாதிபதியின் பதவிக் காலத்தை அதிகரிக்கும் விவகாரம் குணம்குறி கண்டுள்ளது குறித்து இப்பத்தியில் விரிவாக, விலாவாரியாக எடுத்துரைத்திருந்தோம். ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இப்போதுள்ளதைவிட அதிகரிக்கும் யோசனைக்கு அல்லது திட்டத்துக்கு உள்வீட்டிலிருந்தே எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. அவரது சொந்தக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் - அமைச்சர்கள் சிலரே - இவ்விடயத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள் என்பதனையும் தெரியப்படுத்தி இருந்தோம்.

அதனால் இப்போதுள்ள வெப்பியாரம் தணிவதற்கு சிறிது காலம் பொறுப்பதே உகந்தது என்று மேலிடம் புத்திசாலித்தனமாகப் பின்தள்ளி வைத்துள்ளதாக அனுமானிக்கலாம். அது நிற்க.

உள்ளூராட்சித் தேர்தல் சட்டவிதிகளில் திருத்தம் கொண்டுவருவது, மூதவை (மேல்சபை) - இரண்டாவது சபை - ஒன்றை நிறுவுதல் ஆகிய இரண்டு விடயங்களிலேயே அரசு உடனடிக் கவனம் செலுத்த உள்ளதாக மூத்த அமைச்சர் தகவல் சொல்லியுள்ளார். அரசாங்கத்தின் மூதவையை உருவாக்கும் முயற்சி அல்லது முடிவு, தேசியப் பிரச்சினைக்கு - இனப்பிரச்சினைக்கு - தீர்வுகாணும் முயற்சியின் ஒரு பகுதி என்று அரசுத் தரப்பு கிளிப்பிள்ளை போன்று திரும்பத் திரும்பக் கூறிவருகிறது.

மாகாணத்திலிருந்து நியமிக்கப்படும் அல்லது தெரிவாகும் அங்கத்தவர்களைக் கொண்டதாக மூதவை அமையும் என்றும், மாகாண அபிவிருத்தி தொடர்பான விடயங்களை அது கவனத்தில் எடுக்கும் என்றும் சொல்லப்படுகிறது. மாகாண சபைகள் இயங்கும் போது - அந்தந்த மாகாணத்தை அபிவிருத்தி செய்து, மக்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும், மேம்படுத்துவதற்கும், மாகாணங்களின் அபிவிருத்தியைத் திட்டமிட்டுச் செயற்படுத்தவும் மாகாண சபைகள் இயங்கும்போது - அவற்றின் பணிகளை கண்காணிக்கவும், மேற்பார்வை செய்யவும் உருவாக்கப்படும் மேல்சபை ஒன்று தேவைதானா? அதுவே நோக்கம் என்றால் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் செயற்பாடுகளைத் தணிக்கை செய்யும் ஒரு நிறுவனமாக மூதவை மாறும் சாத்தியம் பெரிதும் உண்டு. ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் தலா ஐந்து உறுப்பினர்கள் மூதவையில் அங்கத்துவம் பெறும் பட்சத்தில், மூதவை, தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளை நோண்டிப் பார்த்துத் தடைபோடும் சந்தர்ப்பங்களே அதிகமாக இருக்கும். மொத்தத்தில் அரசாங்கம் பிரமாதமாகப் படம் வரைந்து காட்டும் மூதவை, ஒரு வெள்ளை யானையாக மாறும் அபாயக்கமே வெளிப்படும் - தென்படும்.

தமிழ்மக்களின் பிரச்சினைக்கு உகந்த அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்கும் பயனுள்ள பணியைப் புறமொதுக்கி விட்டு, மூதவை என்ற பம்மாத்துத் திட்டத்தை அரசு முதன்மைப்படுத்துவது, எந்தவிதத்திலும் தமிழர்களின் உரிமைகளை வழங்க ஏதுவாக இருக்கமாட்டாது. அதனை உருவாக்குவதில் காலத்தையும் பணத்தையும் செலவிடுவது அர்த்தமற்றது.

தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய அளவுக்கு அதிகாரத்தைப் பரவல் செய்யும் ஓர் உகந்த, நியாயமான அரசியல் பொறிமுறையை உருவாக்குவதில் முழுமையான புலனையும் செலுத்த வேண்டிய தேவை அவசியமானதாகவும், அவசரமாகவும் இருக்கும்போது, மூதவை, ஜனசபா என்ற அமைப்புகள் குறித்து அலட்டிக் கொள்வது நனைத்துச் சுமக்கும் ஒவ்வாத, அரசியல் ஏய்க்காட்டலாகும். இது, பசிக்கிறது என்று சாப்பாடு கேட்பவனுக்கு, 'பொறு பொறு சிறந்த உணவு தருகிறேன்' என்று கூறிப் புல்லுப் பிடுங்கிக் கொடுக்கும் வம்புத்தனமே அன்றி வேறென்ன?!

# தொண்டு நிறுவனங்கள் கைவிடுவதாக கிழக்கு மாகாண மக்கள் கவலை

## அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் திருமலையில் தொடர்ந்து பணியாற்றும்

திருகோணமலை, ஜூலை 7

தொண்டு நிறுவனங்கள் எல்லாம் தமது நிவாரண வேலைகளை வடக்கு நோக்கி நகர்த்தி வருவதால் கிழக்கு மாகாணத்தில் போரினால் பாதிப்பிற்குள்ளான மக்கள் தாம் கைவிடப்படுவதாக உணரத் தொடங்கியிருக்கிறார்கள்.

உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட பத்து லட்சத்து 50 ஆயிரம் மக்கள் இன்னமும் கிழக்கு மாகாணத்தில் கஷ்ட நிலையிலேயே இருந்து வருகிறார்கள்.

வேலைவாய்ப்பு இல்லை, கிடைப்பதை வைத்து எனது குடும்பத்தைப் பராமரித்து வருகிறேன் என்றார், புல்லுமலையிலுள்ள 18 வயது ரவீந்திரநாதன் வளர்மதி என்பவர். அவரது தந்தையாரால் தொழில் செய்ய முடியாது. தாயார் சிறு வேலைகளைச் செய்து உழைத்து வருகிறார். இளைய சகோதரர் பாடசாலை மாணவன். வாரம் ஆறு நாள்கள் பால் சேகரித்து வழங்குவதன் மூலம் சுமார் 17 அமெரிக்க டொலர் சம்பாதிக்கிறார் வளர்மதி.

மூன்று ஆண்டுகளுக்கு முன் கிழக்கு மாகாணத்தில் புலிகளை அப்புறப்படுத்திய அரசபடைகள் வடமாகாணத்தில் புலிகளை அழிக்க புறப்பட்டார்கள். கடைசியில் கடந்த மே மாதம் அவர்களை தோற்கடித்தார்கள். வடமாகாணத்தில் பெரும்பாலும் 300 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்தார்கள். அங்கு உதவிகளை அதிகப்படுத்த வேண்டிய காரணம் இதுதான்.

கிழக்கு மாகாணத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த பல சர்வதேச அரசு சார்பற்ற அமைப்புகள் கடந்த வருடம் தமது பணிமனைகளை மூடிவிட்டார்கள். செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவும் இதில் அடங்கும். மனிதநேய பணிகளுக்கான ஐ.நா. அலுவலகமும் மூடப்பட்டுவிட்டது.

கடந்த 2002ஆம் ஆண்டு முதல் கிழக்கில் பணியாற்றிவந்த அகதிகளுக்கான ஐ.நா. தூதரகமும் தனது அலுவலகத்தை மட்டக்களப்பில் மூடவிருக்கின்றது.

எமது பணிகள் மட்டக்களப்பில் சுருங்கிவந்தது. கட்டம் கட்டமாக பணிகளைக் குறைத்தது திட்டமிடப்பட்ட எமது செயற்பாடாகும் என்று அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தைச் சேர்ந்த ஜெனிபர் பகோனிஸ் தெரிவித்துள்ளார். இவர் இலங்கையிலுள்ள அந்நிறுவனத்தின் வதிவிட பிரதிநிதி ஆவர்.

இந்தப் பணிகளையெல்லாம் எமது திருகோணமலை காரியாலயம் கவனித்துக்கொள்ளும். எமது செயற்பாடுகளைக் குறைக்கும் நோக்கம் கிடையாது. எமது அலுவலகங்கள் மூடப்படவும் மாட்டா என்றார் அவர். (ஒ-ப)

# யாழ். ஆஸ்பத்திரியில் 3 தினங்கள் விழிவெண்படல சத்திர சிகிச்சைகள்

## நாளை பல இடங்களில் நோயாளர் தெரிவு முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

இந்திய கண்சிகிச்சை நிபுணர்களினால் விழிவெண்படல ("கற்றாக்") சத்திரசிகிச்சை முகாம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் நடத்தப்படவுள்ளது.

இதற்கான நோயாளர் தெரிவு நாளை வியாழக்கிழமை காலை 9 மணியிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை நிபுணர்களால் பருத்தித்துறை, தெல்லிப்பழை, சங்கானை, சாவகச்சேரி, வேலணை ஆகிய வைத்தியசாலைகளில் நடத்தப்படும்.

விழிவெண்படல சத்திரசிகிச்சை தேவையுடைய நோயாளர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-1)

## புனர்வாழ்வு நிலையங்களில்

# தடுத்து வைக்கப்பட்டிருப்போர் பிரச்சினை; தெல்லிப்பழையில் சனியன்று நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 07

வவுனியா உட்பட பல இடங்களிலும் புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களின் பிரச்சினைகள் குறித்து நடமாடும் சேவை எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர மற்றும் பிரதி அமைச்சர், அமைச்சு அதிகாரிகள் இந்தச் சேவையில் கலந்துகொள்வர்.

தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் இந்த நடமாடும் சேவையில் தங்கள் பிரச்சினைகளை முன்வைத்து அவற்றுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளுமாறு அரச அதிபர் கே.கணேஷ் கேட்டுள்ளார்.

அமைச்சர் டியூ குணசேகர குழுவினர் அன்று நண்பகல் ஒரு மணியளவில் யாழ். சிறைச்சாலைக்குச் செல்லவுள்ளனர். (ஒ-1)

# கைதடி சிறுவர் இல்லத்தில் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை7

கைதடி சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் வெற்றிடமாகவுள்ள குறிப்பிட்ட சில பதவிகளுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இல்லப்பொறுப்பதிகாரி, இல்லத் தாய், காவலாளி ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை ஆணையாளர் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம், கன்னியாவீதி, வரோதயநகர், திருகோணமலை என்னும் முகவரிக்கு எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வடமாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி வி.ரமேஷ் அறிவித்துள்ளார். (ஒ-207)

## விநியோகக் கடமைக்குச் சென்று திரும்பிய வேளை

# பத்திரிகை நிறுவனத்தின் ஊழியர் மிருசுவில் பகுதி விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

வன்னிப்பகுதிக்கு பத்திரிகை விநியோகம் செய்துவிட்டு மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தவர் நேற்று மிருசுவில், உசன் பகுதியில் பஸ் விபத்தில் சிக்கி அவ்விடத்திலேயே உயிரிழந்தார்.

கல்லூரி வீதி, இளவாலையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான பேரம்பலம் ஜெயச்சந்திரன் (வயது 32) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது :-

நேற்றுக்காலை வழமைபோல் யாழ். தினக்குரல் பத்திரிகையை வன்னிப் பகுதியில் விநியோகித்துவிட்டு யாழ்ப்பாணத்துக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தார் அந்நிறுவன ஊழியர். அதேசமயம் யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்தது வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ். அந்த பஸ்ஸுடன் மிருசுவில், ஆசைப்பிள்ளை ஏற்றத்தடியில் காலை 7.30 மணியளவில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது. சம்பவத்தில் பத்திரிகை நிறுவன ஊழியர் உயிரிழந்தார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற சாவகச்சேரி நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

விபத்தில் சிக்கி உயிரிழந்த பேரம்பலம் ஜெயச்சந்திரன் யாழ். தினக்குரல் பத்திரிகை நிறுவனத்தில் ஆரம்பகாலம் முதல் பணியாற்றி வந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 24 | : 08.07.2010 |
| | : வியாழக்கிழமை |
| திதி | : ஏகாதசி காலை 07.02 வரை |
| நட்சத்திரம் | : கார்த்திகை மாலை 06.42 வரை |
| சுபநேரம் | : 07.28-08.58 வரை |
| ராகுகாலம் | : 01.28-02.58 வரை |

கார்த்திகை விரதம்
ஏகாதசி விரதம்

# தமிழியல் விருதுக்கு படைப்பாளிகள் ஆக்கங்களை அனுப்பிவைக்கலாம்

கொழும்பு, ஜூலை 07

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் ஆண்டு தோறும் வழங்கும் "தமிழியல் விருது-2010" இற்கு படைப்பாளிகளிடமிருந்து ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வாழும் படைப்பாளிகள், 2009 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதிவரை வெளிவந்த தமது ஆக்கங்களைத் தேர்வுக்கு அனுப்பி வைக்கலாம்.

நாவல், சிறுகதை, கவிதை, குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம், விடலை இலக்கியம் நாடகம், அறிவியல், ஆய்வியல், வரலாறு, பழந்தமிழ் இலக்கியம், மொழிபெயர்ப்பு, இன மத நல்லுறவு இலக்கியம், தொழில் நுட்பம் எனப் பல்துறை சார் நூல்களையும்-

30 நிமிடங்கள் ஒளிபரப்பாகக் கூடிய குறுந்திரைப்பட இறுவட்டுகளையும் தேர்வுக்காக அனுப்பி வைக்கலாம்.

தேர்ந்தெடுக்கப்படும் 13 நூல்களுக்கும், மூன்று குறுந்திரைப்படங்களுக்கும் மற்றும் இலக்கிய மேம்பாட்டுக்கு உரமிட்ட மூத்த படைப்பாளி ஒருவருக்கும் பொற்கிழியுடன் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படும். சிறந்த வெளியீட்டகம், பதிப்பகம், நூல்வடிவமைப்பு, அட்டை வடிவமைப்புக்கும் விருதுகள் வழங்கப்படும்.

படைப்பாளிகள் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் உட்பட்ட விவரங்களைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விவரப் பட்டியலுடன், ஆக்கங்கள் நூலாயின் 4 பிரதிகளையும், இறுவட்டாயின் 2 பிரதிகளையும் இணைத்து 10.08.2010 இற்கு முன்னர் அனுப்பவேண்டும். ஒரு படைப்பாளி எத்தனை படைப்புகளையும் தேர்வுக்கு அனுப்பலாம். விருது வழங்கும் விழா இவ்வருடம் ஒக்டோபரில் நடை பெறும்.


ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:-

ஓ.கே.குணநாதன், மேலாளர், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல. 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு, இலங்கை -- தொலைபேசி இலக்கம் 0776041503. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரவிழிகளுடன் ஈராறு மாதங்கள்...

அன்னையாக
24.12.1935



தெய்வமாக
18.06.2009

### திருவாட்டி வரதலெட்சுமி இராசேந்திரம்

(2ஆம் வட்டாரம், மண்டைதீவு)

திதி:- தசமி 07/07/2010

மாதம் பத்தும் வயிற்றில் சுமந்து வாழ் நாள் முழுவதும் உன் மனதில் எமை - நினைந்து
வாழவைத்த பேசும் தெய்வமே! - எங்கள் அம்மா!. நீங்கள் பேசாது சென்றதெங்கே?
பேதைகள் நாம் அறுவருடன் அனைவருமே கலங்குகிறோம்.
அருகிருந்து அனுதினமும் ஆறுதலைத்தரவேண்டி அன்னையவள்
நயினைஅருள் நாடி நிதம் பூசிப்போம்.
ஓடி நீங்கள் வாரும் அம்மா ஒப்புயர்வாய் வாழ்ந்திடவே

இன்று நடைபெறும் முதலாம் வருடத்திதியில் அன்னாரின் ஆத்ம ஈடேற்றப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு பற்றும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

தகவல்:
இ.உதயதாஸ் (மகன்)
''மஞ்சுளா பவனம்''
4ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(100365)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராஜேஸ்வரி நவரத்தினம் (கிளி)

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது பம்பலப்பிட்டி கொழும்பில் வசிப்பவருமாகிய திருமதி இராஜேஸ்வரி நவரத்தினம் நேற்று (06.07.2010) செவ்வாய்க் கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நாகலிங்கம் அப்பாக்குட்டி - சௌந்தலை அம்மாள் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற முத்து - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற முத்து நவரத்தினத்தின் அன்பு மனைவியும், அசோகன், சித்திரா, Dr.அமரா, நீத்திரா, மீரா ஆகியோரின் அன்புத் தாயும், Dr.சிறீதேவி (நந்தா), பரமேஸ்வரன், குணசிங்கம், ரகுநாத், சிவபிரான் ஆகியோரின் அன்பு மாமியும், அரவிந், ஆர்த்தி, ஆரபி, அகலி, ஆரணி, சாரங்கன், கிரண், பூமாலட்சுமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சற்குணேஸ்வரி, காலஞ்சென்ற குகதாஸ், யசோதரா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (07.07.2010) புதன்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 7 மணிவரையும், நாளை வியாழக்கிழமை (08.07.2010) முற்பகல் 11 மணி முதல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் பிற்பகல் 3 மணியளவில் ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று, 5 மணியளவில் பொரளை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*M.N.அசோகன்*
*19- 3/5, மிலாகிரிய அவனியூ,*
*கொழும்பு - 4*

தகவல்:
**M.N.அசோகன் (மகன்)**
**கொழும்பு.**
**தொலைபேசி: 2595860**

### திருமதி கந்தவனம் கனகம்மா



அல்வாய் வடக்கு, விளாப்புக்கூடலைச் சேர்ந்த திருமதி கந்தவனம் கனகம்மா நேற்று 06.07.2010 செவ்வாய்க்கிழமை அமரரானார்.

அன்னார் நாகலிங்கம் - பாறுபதிப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், சுப்பர் - தெய்வானை தம்பதியினரின் மருமகளும், சுப்பர் கந்தவனத்தின் அன்பு மனைவியும், க.திருவருட்சோதி (கனடா), தி.சகுந்தலாதேவி, ந.விமலாதேவி, ப.தவமணிதேவி, சி.சுசிலாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், க.கதிராசிப்பிள்ளை, நா.கணபதிப்பிள்ளை, நா.கனகசபை, நா.சதாசிவம், நா.சந்திரசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் செ.திருச்செல்வம், தி.பரமேஸ்வரி (கனடா), ச.நவரத்தினசாமி, வே.பரராசசிங்கம், த.சிவகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2010) புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

விளாப்புக்கூடல்,
அல்வாய் வடக்கு.

## துப்பாக்கி தவறுதலாக வெடித்துச் சிப்பாய் பலி!

தென்மராட்சி, ஜூலை 7

வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக் கேணிப் பகுதியில் தவறுதலாகத் துப்பாக்கி வெடித்த சம்பவத்தில் படைவீரர் பலியானார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

நீதிமன்ற நீதிவான் ஏ.எம்.எம்.ரியால் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டு சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை நடத்திய பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார். (ஓ-207)

## கச்சாய்க் கடலேரியில் மீனவர் நீரில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

கச்சாய்க் கடலேரியில் மீன்பிடிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி மரணமானார்.

கடந்த வார இறுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த குணசிங்கம் குணசீலன் என்பவரே மரணமானவராவார்.

வலை போடுவதற்காக மாலையில் கடலுக்குச் சென்ற இவர், வீடு திரும்பாததால் காலையில் தேடிச் சென்ற போது சடலமாக கடலில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (ஓ-207)

## மர்மப் பொருள் வெடித்து சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

குப்பையை எரித்தபோது மர்மப் பொருள் வெடித்ததில் அப்பகுதியில் விளையாடிக்கொண்டிருந்த 6 வயதுச் சிறுவனுக்கு கையில் காயம் ஏற்பட்டது.

கடந்த சனிக்கிழமை கச்சாயில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சி.நஜந்தன் (வயது 6) என்ற சிறுவனே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றான். (ஓ-207)

## உயர்தர மாணவருக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 7

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தால் இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

தமிழ் பாடத்திற்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும்.

இந்துநாகரிக பாடக்கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அளவையியல் பாடத்திற்கான கருத்தரங்கு எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமையும், புவியியல் பாடத்திற்கான கருத்தரங்கு எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் காலை 9 மணிக்கு துன்னாலை அல்லையம்பதி வடிவேலன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ஓ-6)


**வாடகைக்கு**

170, கஸ்தூரியார் வீதியில் ஒரு கடையும், வெறும் வளவும் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 0776156051

**விற்பனைக்கு**

அரைக்கும் ஆலை இயந்திரம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0789402791

**அறைகள் வாடகைக்கு உண்டு**

இல. 148/12, புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள வீட்டில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் பெண்கள் விரும்பத்தக்கது.


## மனைப் பொருளியல் கருத்தரங்கு நாளைமுதல் இராமநாதன் கல்லூரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 7

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வலிகாமம் வலய மனைப் பொருளியல் மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை வியாழக்கிழமையும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ச.சிவசக்தி அறிவித்துள்ளார். (ஓ-6)

## மரண அறிவித்தல்கள்

### இராசேஸ்வரி நவரத்தினம்



மூளாய் வீதி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசேஸ்வரி நவரத்தினம் 04.07.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நவரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- சின்னம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னம்மா, மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் விக்கினேஸ்வரி (லண்டன்), முருகதாஸ் (லண்டன்), ரூபாநந்தி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் ஸ்ரீகரன், தயாநிதி, திருவாதவூரர் ஆகியோரின் அன்பு மாமியும் துர்க்காயினி, தாட்சாயினி, சோபிதன், அனுஷன், குணாளன்,ஷாருதி, மாதவன், ரம்மியா ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.07.2010) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

(சி/568892)

தகவல்
மு.நவரத்தினம்
(கணவர்)

### நன்னியர் நாகமணி



சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் மட்டுவில் கிழக்கு, சேர்வீதி, சாவகச்சேரியை நிரந்தர முகவரியாகவும், நவகம்புர II, கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நன்னியர்நாகமணி (04.07.2010) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னியர்-சின்னம்மா தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வனும், இராசம்மாவின் பாசமிகு கணவரும், ஜீவன் (ஜேர்மனி), சுதர்சன் (லண்டன்), மதிர்சன், மகிந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மீலாஜினி, வினோதினி (கொழும்பு) ஆகியோரின் பெரிய தந்தையும், சுந்தர்லிங்கம், காலஞ்சென்றவர்களான பரிமளம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாநிதி, காஞ்சனா, சங்கீதா, சுதர்சன், நளீம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காவியா ஜொடன், தனுஸ், அனுஸ்கீர்த்திகன், வேனுஜா, டானியா ஆகியோரின் அன்புப் பேரனும், சின்னம்மா, நடராசா, சின்னத்தம்பி, கிருஸ்ணர், சறோஜினிதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான சின்னையா துரைராசா, பூரணம் செல்லத்துரை ஆகியோரின் மைத்துனரும், நல்லம்மா,பவளம்மா, குணம், செல்வம், ஞானரட்ணம், சிவலிங்கம், செல்வராணி, ரஞ்சிதமலர், காலம்சென்ற கந்தசாமி ஆகியோரின் உடன்பிறவாச் சாகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2010) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மட்டுவில் கிழக்கு, சேர் வீதி,*
*சாவகச்சேரி.*

(10037/)

தகவல்:
**குடும்பத்தினர்.**
**0779576749**

### மேரி யோசப்பின் மனுவேல்ப்பிள்ளை



இளவாலையைப் பிறப்பிடமாகவும் ஜமுனா காடின், கல்லூரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரியோசப்பின் மனுவேல்ப்பிள்ளை (04.07. 2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அகஸ்ரீன் பிள்ளை மனுவேல் பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சுவாம்பிள்ளை யக்கோமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, யோசவ் மற்றும் ஞானரட்ணம் மேரிபற்றிமா ஆகியோரின் சகோதரியும், சத்தியவாணி (ஆசிரியை, யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி), வரதன் (கனடா), உதயன்(பிரான்ஸ்), யூடினா (லண்டன்) ஆகியோரின் தாயும், நாகேஸ்வரன்(ஈசன்), சாந்தி, சுமதி, நேசன் ஆகியோரின் மாமியும், கிழைநீதன், சுலக்சிகா, கிறிஷிக்கா, கிறிஸ்ரன், கல்வின், சோனியா, சரண், சஞ்சித், மிறோன் ஆகி யே ாரின் பேர்த்தியுமவார்.

இவரது இறுதிப் பயண இரங்கற் திருப்பலி நாளை (08.07.2010) வியாழக்கிழமை பி.ப 3.30மணியளவில் இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜமுனாகாடின், கல்லூரி வீதி,
இளவாலை.

(100376)

தகவல்:
**N.சத்தியவாணி**
**(மகள்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று அதிதீவிரப் பிரிவு திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட யுனிசெவ் அமைப்பின் யாழ்.அலுவலக அதிகாரி மெஹா டாமெஜ் மங்கள விளக்கேற்றுவதை முதல் படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யுனிசெவ் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி பிலிப் டுமெல்லி நாடாவெட்டித் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும், திறந்து வைக்கப்பட்ட அதிதீவிரப் சிகிச்சைப் பிரிவுக்கான திறப்பை பிரதம விருந்தினர், வைத்திய நிபுணர் பிரேமகிருஷ்ணனிடம் கையளிப்பதை மூன்றாவது படத்திலும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: ரட்ணம்)*

# யாழ்.ஆஸ்பத்திரியின் மகப்பேற்று விடுதிக்கு உதவிகளைத் தொடர்ந்தும் யுனிசெவ் வழங்கும்

## இலங்கைக்கான பிரதிநிதி டுமெல்லி தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை 7

யாழ்.போதனா வைத்தியசாலை மகப்பேற்று சிகிச்சைப் பிரிவின் அபிவிருத்திக்கு யுனிசெவ் அமைப்பு தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என அந்த அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி பிலிப் டுமெல்லி தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று அதிதீவிர சிகிச்சைப் பிரிவைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சிறுவர்கள், குழந்தைகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்பதில் யுனிசெவ் அமைப்பு அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. வட பகுதி மக்கள் பல்வேறு அழுத்தங்களையும் நெருக்கடிகளையும் கடந்த காலங்களில் சந்திக்க வேண்டியிருந்தது. அதன் போது சிறுவர்களுக்கும் அதிக பாதிப்பு ஏற்பட்டது.

தற்போது யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் இந்த நிலைமை ஓரளவு நீங்கி விட்டது.

நாம் இலங்கையின் கிழக்கு மாகாணத்திலும் மகப்பேற்று அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு உதவி வழங்கியிருக்கிறோம். தற்போது யாழ்.மாவட்டத்தில்அந்த வசதியை ஏற்படுத்த உதவி வழங்கியிருக்கிறோம்.

இது போன்று வடபகுதியின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் மக்களுக்கும் இவ்வாறான வசதிகள் தேவை என்பதையும் நாம் அறிவோம் - என்றார்.

இந்த நிகழ்வில் சத்திரசிகிச்சை நிபுணர் எஸ்.ரவிராஜ், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், மகப்பேற்று வைத்திய நிபுணர் ஜி.பவானி, யுனிசெவ் அமைப்பின் யாழ்.அலுவலக அதிகாரி மெஹா டாமெஜ் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்கள்.

(50-14-டி)

# படுக்கையில் பாம்பு தீண்டிய குடும்பப் பெண் மரணமானார்

வடமராட்சி,ஜூலை 7

படுக்கையில் பாம்பு தீண்டிய குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மரணமானார்.

வரணி, கரம்பைகுறிச்சியைச் சேர்ந்த திருமதி இரத்தினமலர் சுதாகரன் என்பவரே (வயது - 40) இவ்வாறு மரணமானவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு படுக்கையில் இவரை விசப்பாம்பு ஒன்று தீண்டியுள்ளது. அந்தப் பாம்பும் எங்கும் செல்லாமல் படுக்கையிலேயே மயங்கிக் கிடந்தது.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த இந்தக் குடும்பப் பெண் திடீரென நெஞ்சு வலிப்பதாகக் கூறிக் கூக்குரலிட்டுள்ளார். இதனையடுத்து அயலவர்கள் அங்கு சென்று பார்த்தபோது பாம்பு தீண்டிய விடயம் தெரியவந்தது.

இதனையடுத்து அயலவர்கள் அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர். படுக்கையில் மயங்கிக் கிடந்த பாம்பும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

குடும்பப் பெண் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் மரணமானார். அவரைத் தீண்டிய பாம்பு வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் பார்வைக்கு வைக்கப்பட்டது.

(50-236)

# அரியாலையில் மலசல கூடம் அமைக்கும் படையினர்

யாழ்ப்பாணம் அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகில் உள்ள படையினர் வீதியின் அருகில் மலசலகூடம் அமைத்து வருகின்றனர்.

சுற்றுலாப் பயணிகளின் நலன்கருதி அமைக்கப்பட்டு வரும் இந்த மலசலகூடம் வீதியில் செல்வோருக்கு சுகாதார சீர்கேட்டினை ஏற்படுத்துமெனவும் வீதி அருகில் அமைக்கப்பட்டு வரும் இம்மலகூடத்திற்கு சுகாதாரப் பகுதியினர் அனுமதி வழங்கியுள்ளமை குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர்.

# தொழில் பயிற்சி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை தீவக மாணவர்களின் நன்மை கருதி புதிய கற்கை நெறிகளை ஆரம்பிக்கவுள்ளது.

காரைநகர் இளைஞர் தொழிற்பயிற்சி வளாகத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கும் இக்கற்கை நெறி 6 மாத காலம் நீடிக்கும் என்பதுடன் அலுமினியம் பொருத்துதல், வீட்டு மின் இணைப்பு ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இணைந்துகொள்ள விரும்பும் இளைஞர்கள் தமது பெயர், விலாசங்கள் மற்றும் கல்வித் தகைமை தொடர்பான சுய விவரக்கோவையைத் தாமே தயாரித்துக் கொண்டு காரைநகர் வலந்தலையிலுள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு நேரில் சமுகம்தருமாறு இணைப்பாளர் இரா. அகிலன் அறிவித்துள்ளார். (ப)




# கொடிகாமம், கோப்பாய் பகுதிகளில் தேசிய சேமிப்பு வங்கியின் கிளைகள்

காரைநகர்,ஜூலை 7

கொடிகாமம் மற்றும் கோப்பாய் பிரதேசங்களில் தேசிய சேமிப்பு வங்கி தனது கிளைகளை விரைவில் திறக்க உள்ளதாக தேசிய சேமிப்பு வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் பி.எஸ். ரபீக் தெரிவித்துள்ளார்.

தேசிய சேமிப்பு வங்கியின் காரைநகர் கிளை திறப்புவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய சேமிப்பு வங்கியானது அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம் போன்ற பிரதேசங்களில் தனது கிளைகளை ஆரம்பித்தமை போன்று காரைநகரிலும் ஊர்காவற்றுறையிலும் தனது இருகிளைகளை இன்று திறந்துள்ளது. அதேபோன்று கொடிகாமம், கோப்பாய் பிரதேசங்களிலும் தனது கிளைகளை விரைவில் ஆரம்பித்து உள்ளது-என்றார்.

இந்த காரைநகர் கிளைத் திறப்பு விழாவில் இலங்கை மத்திய வங்கி பிரதி ஆளுநர் டி.தீரசிங்க, தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் பிரதீப் காரியவசம், தேசிய சேமிப்பு வங்கியின் பொதுமுகாமையாளர் தென்னாயக்க பண்டார உள்ளிட்ட வங்கியின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

புதுவீதிச் சந்தியில் இருந்து விருந்தினர்கள் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய மாணவர்களின் பாண்ட் வாத்திய அணியுடன் அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

(50-250)

# ஏப்ரல், மே மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூலை 7

கடந்த ஏப்ரல், மே மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரண விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரண விநியோகப் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரிசி, மா, சீனி, பருப்பு போன்ற பொருள்கள் இந்த நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படுகின்றன.

நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படும் பொருள்களின் விவரம் வருமாறு:

**ஏப்ரல் மாதம்**

| | | 1500/= | | 615/= | | 350/= | | 250/= | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொருள் | விலை ரூபா | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி |
| அரிசி(நாடு) | 55.60 | 11.000 | 611.60 | 4.500 | 250.20 | 4.200 | 233.52 | 2.400 | 133.44 |
| மா | 53.90 | 8.000 | 431.20 | 2.000 | 107.80 | 1.000 | 53.90 | 1.000 | 53.90 |
| சீனி | 80.94 | 0.500 | 40.47 | 0.500 | 40.47 | 0.250 | 20.24 | 0.250 | 20.24 |
| பருப்பு | 122.50 | 0.500 | 61.25 | 0.500 | 61.25 | 0.250 | 30.63 | 0.250 | 30.63 |

**மே மாதம்**

| | | 1500/= | | 615/= | | 350/= | | 250/= | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொருள் | விலை ரூபா | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி |
| அரிசி (நாடு) | 59.52 | 10.500 | 624.96 | 4.250 | 252.96 | 3.950 | 235.10 | 2.300 | 136.90 |
| மா | 51.95 | 8.000 | 415.60 | 2.000 | 103.90 | 1.000 | 51.95 | 1.000 | 51.95 |
| சீனி | 80.94 | 0.500 | 40.47 | 0.500 | 40.47 | 0.250 | 20.24 | 0.250 | 20.24 |
| பருப்பு | 122.50 | 0.500 | 61.25 | 0.500 | 61.25 | 0.250 | 30.63 | 0.250 | 30.63 |

# ஊனமுற்றோரில் 59 பேர் வாகனம் செலுத்தக் கூடியவர்கள்

நாவற்குழி,ஜூலை 7

யாழ். மாவட்டத்தில் ஊனமுற்றோர் 59 பேர் வாகனம் செலுத்தக்கூடிய திறமையும் சொந்த வாகனமும் உள்ளவர்களாக உள்ளனர்.

இவர்களுக்குச் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுப்பதற்கு நடமாடும் சேவையொன்று சென்ற வருட நடுப்பகுதியில் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது திடீரெனப் பிற்போடப்பட்டது. பின்பு நடக்கவேயில்லை.

அது நடத்தப்படுவதற்குரிய சாத்தியக் சந்தர்ப்பம் இன்று வரை இடம் பெறவில்லை.

ஊனமுற்றோரும் சாரதி அனுமதிப் பத்திரம் பெறலாம், அவர்களுக்கும் அந்த உரிமை வழங்கப்படுமென அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.ஆனால் அது இன்று வரையும் நடை முறைப் படுத்தப்படவேயில்லை. இது குறித்து அவர்கள் மிக மிக வருத்தமடைந்துள்ளனர்.

தற்போது போக்குவரத்துப் பொலிஸார் முழத்துக்கு ஒருவராக நிற்பதால் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி யாருமே வாகனம் செலுத்த முடியாதுள்ளது.

ஊனமுற்றோர் தமது வாழ்வாதாரத்திற்கு உழைக்க முடியாமல் வறுமை நிலைக்கு ஆளாகியுள்ளனர். இது குறித்து உரிய அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(50-1-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறப்பு விழா அழைப்பு

சங்கானை, மல்லாகம் வீதியில் இன்று (07.07.2010) புதன்கிழமை காலை 7 மணி முதல் 9 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

**Quick Net** (Computer Service)

எனும் ஸ்தாபனம் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்த ஸ்தாபனத்தில் Browsing, Photocopy, Fax, Laminating, Printing, Telephone Calls, Computer Games, Internet Calls, Chatting (முகம் பார்த்து கதைத்தல்) போன்ற பல சேவைகள் நடைபெறவுள்ளன. அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நல்வரவை நாடும்:
அரசடி வீதி,
சங்கானை.
திரு.திருமதி ரமணன் குடும்பம்

# கண்ணீர்க் காணிக்கை



லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி நிர்வாக, லங்கா சுதேச வைத்தியசபை முன்னாள் தலைவர்

வைத்திய கலாநிதி **துரையப்பா சண்முகராசா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி நிர்வகிக்கும்
லங்கா சுதேச வைத்திய சபை, யாழ்ப்பாணம்.
(100366)

# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் செல்வி கேதார கௌரி இராசரத்தினம் அவர்களின் அன்புத் தந்தை



**சரவணமுத்து இராசரத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள் வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

NIIT கணனி நிறுவனம்,
யாழ்ப்பாண முகாமையாளர்,
விரிவுரையாளர்கள்,
ஊழியர்கள், சக மாணவர்கள்.
(100363)

# சங்காபிஷேகம்

கோப்பாய்,ஜூலை7

புத்தூர், காளியானை ஞானவைரவர் ஆலய மண்டலாபிஷேக சங்காபிஷேக பூர்த்தி நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

அன்றையதினம் இரவு பூந்தண்டிகையில் சுவாமி வீதி வலம் வருதலும் இடம்பெறும். (204- 72)

# படைமுகாம் இடமாற்றம்

வண்ணை,ஜூலை7

யாழ்.தட்டாதெரு சந்தி, படையினர் மினி முகாம் அந்த இடத்திலே மற்றொரு திசைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 15 வருடங்களாக மினி முகாம் இருந்த இடம் காணி உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இப்பொழுது ஐயனார் வீதி, கே.கே.எஸ்.வீதி முடக்கில் கலாஜோதிசன் சமூக நிலையம் மற்றும் திறந்தவெளி அரங்கு அமைந்திருந்த இடத்துக்கு கடந்த வாரத்தில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (50-160)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

## மாடி வீடு விற்பனைக்கு

அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் யாழ். பருத்தித்துறை வீதியில் 3 பரப்புக் காணியில் அமைந்துள்ள மாடி வீடு விற்பனைக்கு உள்ளது. (முன் பகுதியில் 4 கடை கட்டக்கூடிய வசதியுள்ளது). விலை விவரம் நேடியாகப் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
தொலைபேசி இல:- 0213735135

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II இற்கு பதவி உயர்வு பெற்ற எமது வலயக் கல்விப் பணிப்பாளர்

உயர்திரு
**G .V.இராதாகிருஸ்ணன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேன்மேலும் அவரின் பணி சிறக்க எமது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தீவக கல்விவலய
அலுவலர்கள்.
(100372)

## கனரக வாகன சாரதி தேவை

முன் அனுபவம் உள்ள கனரக வாகன சாரதி தேவை. தகுதி உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை 12.07.2010 ஆம் திகதிக்கு முன்பாக கீழ்வரும் முகவரியில் கீழ்வரும் ஆவணங்களுடன் நேரடியாக ஒப்படைக்கவும்.

1. செல்லுபடியாகும் கனரக வாகன சாரதி அனுமதிப் பத்திரம்
2. கௌரவமான இருவரது நற்சான்றிதழ் பத்திரம்
3. வயதெல்லை 25 - 45

உதவி நிர்வாக முகாமையாளர்,
யூரோவில்,
866, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி



**திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரை**

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய முன் னாள் அதிபர் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்க ளின் பாரியார் திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்கள் 03.07.2010 சனிக்கிழமை காலமானதையிட்டு அவரின் பிரிவில் வருந்தும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதோடு, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

தேவநாதன் குடும்பம்,
நாதன் நகைமாளிகை.

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் கணித ஆசிரியரும் சதுரங்கக் கழகப் பொறுப்பாசிரியரும் தற்பொழுது கொழும்பு D.S.சேனநாயக்க கல்லூரியின் ஆசிரியருமான

**கந்தசாமி அருளானந்தசிவம்**



அவர்கள் 06.07.2010 அன்று அமரத்துவம் அடைந்தார். அவரது குடும்பத்தின் பிரிவுத்துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
துணையாளணியினர்,
மாணவர்கள்,
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**

# மரண அறிவித்தல்

**செல்வி லூசி ஞானப்பிரகாசம் (லூசி அக்கா)**

(பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் விடுதி மேற்பார்வையாளர்)



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது அராலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி லூசி ஞானப் பிரகாசம் (லூசி அக்கா) தமது 100 ஆவது வயதில் நேற்று (06.07.2010) செவ்வாய்க் கிழமை மறுமைக்குட்பிரவேசித்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி ஞானப்பிரகாசம் தம்பதியரின் மகளும் காலஞ் சென்றவர்களான மேவல் டேவிற் கிளாடிஸ், பேபி, சாம், ஏணஸ்ற், எட்வேட் இரத்தினசிங்கம், பத்மநாதன், சோதி நாதன், அதி மற்றும் பற்பம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை அராலி வடக்கில் இன்று (07.07.2010) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பிற்பகல் 2 மணிக்கு பண்டத்தரிப்பு பெண்கள் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
(100371)
தகவல்:
ந.சத்தியமூர்த்தி.


# இப்பொழுது கிளிநொச்சியிலும் நாம்...

**STP COMPUTER WORLD (PVT) LTD.**

கடந்த 12 ஆண்டுகளாக யாழ் மக்களுக்கு சேவையாற்றிவருகின்ற நாம் விரிவடைந்த A9 இல் விருட்சமாக – கிளிநொச்சியில் எமது மற்றுமொரு காட்சியறையினைத் திறந்து வைப்பதில் மகிழ்வடைகின்றோம்.

குதூகல ஆரம்பம்

**STP**

One Stop Showroom for your all Office Automation Needs

*Your partner in IT solutions*

இல. 57 புகையிரத நிலைய வீதி கிளிநொச்சி எனும் முகவரியில் அமைந்துள்ள எமது புதிய காட்சியறை. இன்று (07.07.2010) காலை 7.45 முதல் 8.30 வரையான சுபவேளையில். மதிப்புக்குரிய கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி. ஆர். கேதீஸ்வரன் அவர்களினால் மங்களகரமாகத் திறந்து வைக்கப்படுகின்றது.

இதுவரை எமது வெற்றியில் பங்காற்றி வருகின்ற அரச நிறுவனங்கள் திணைக்களங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைத்துக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள். தொடர்ந்தும் தங்களது மேலான ஆதரவினை வேண்டி நிற்கின்றோம்.

Authorized Dealer for

**TOSHIBA**

**DELL**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




கல்வி அறிவு மூலமாக சமூகங்களைக் கட்டியெழுப்புதல் என்ற திட்டத்தின்கீழ் மலேஷியன் நிறுவனங்களின் ஒன்றியமும் கொழும்பு மேற்கு றோட்டறிக் கழகமும் இணைந்து யாழ்.பொது நூலகத்துக்கான நூல்களை நேற்றுக் கையளித்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவதுபடத்திலும் பொது நூலகத்துக்கான நூல்களை மலேஷியாவிலிருந்து வருகைதந்த குழுவின் தலைவர் பட்டோ எஸ்.குலசேகரன் யாழ்.பொது நூலகப் பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கத்திடம் வழங்குவதை இரண்டாவது படத்திலும், யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண் டோரில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

*(படங்கள்: சுகந்தன்)*

# யாழ்.ஆஸ்பத்திரியின் கண்சிகிச்சைப் பிரிவில் ஆளணிப் பற்றாக்குறை; நோயாளர்கள் அவதி

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

வண்ணை,ஜூலை 7

யாழ். போதனா வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவுக்கு வைத்தியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டின் கேந்திர நிலையமாக இயங்கும் பிரதான வைத்தியசாலையை நோக்கி நாலா பக்கமும் இருந்து நூற்றுக்கணக்கில் வருகைதரும் நோயாளர்கள் தமது உபாதைகளைத் தீர்க்க முடியாதவர்களாகத் திரும்பிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

இப்பொழுது கண் சிகிச்சைப் பிரிவின் பிரதான வைத்திய நிபுணர்களில் ஒருவர் விரைவில் மாற்றம் பெற்றுச் செல்ல இருப்பதாகவும், அந்த இடத்திற்கு நியமனம் பெற்றவர் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதால், அந்த வெற்றிடம் நிரப்பப்படாமல் போகும் நிலைமை தோன்றியுள்ளதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் மூலம் தெரிய வருகின்றது.

ஏற்கனவே கண் வைத்திய நிபுணர்களினதும் உதவி வைத்தியர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், தாதியர்கள், உதவியாளர்கள் பற்றாக்குறை காணப்படும் யாழ். போதனா வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவில் பெருகி வரும் நோயாளர்களின் தேவைகளை நிறைவேற்ற சுகாதார அமைச்சு புதியவர்களை நியமிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (50-160)

# மின் பட்டியல் கட்டணங்கள் அறவிடுவதில் வடமாகாண அஞ்சல் அலுவலகம் முதலிடம்

தென்மராட்சி கிழக்கு,ஜூலை 7

அஞ்சல் திணைக்களம் மூலம் மின் பட்டியல் கட்டணங்கள் அறவிடுவதில் திணைக்கள ரீதியில் வடமாகாணம் முதலிடத்தில் உள்ளதாக வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வீ.குமரகுரு தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 7ஆம் திகதி அஞ்சல் தலைமை அலுவலகத்தில் பிரதி அஞ்சல் மா அதிபர்கள், மற்றும் பிராந்திய கணக்காளருக்கான கலந்துரையாடலில் அஞ்சல் மா அதிபரினால் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுப் பாராட்டப்பட்டதுடன், வடபிராந்திய சேவையின் வளர்ச்சியும் முன்னேற்றமும் மற்றவர்களுக்கு ஒரு முன் உதாரணமாக அமையவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டது.

இந்த விடய சார்பில் வடபிராந்திய பிரதி அஞ்சல்மா அதிபர் வீ.குமரகுரு சகல அஞ்சல் அதிபர்கள் மற்றும் உப அஞ்சல் அதிபர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளதுடன் மேலும் தொய்வில்லாமல் இவ்விடயம் முதலிடம் வகிக்க சகலரினதும் ஒத்துழைப்பும் விடாமுயற்சியும் அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இது சார்பில் அஞ்சல் தலைமையகம் தயாரித்த திட்ட மதிப்பீடு பற்றிய குறிப்பு ஒன்றும் சகலரினதும் பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50-122)

# ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களில் நிலவுகின்ற ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வட மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களிலும் ஆங்கிலம், சிங்களம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கும், தென்மராட்சி கல்வி வலயத்தில் உடற்கல்விப் பாடத்துக்குமான ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் இலங்கை ஆசிரிய சேவை 1,2-I இனைச் சேர்ந்த யாழ்.மாவட்ட ஆசிரியர்கள் இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (50-16)

# மீளக்குடியமர்ந்த தென்னைச் செய்கையாளருக்கு விசேட மானியம் வழங்குவதற்கு நடவடிக்கை

மூளாய்,ஜூலை7

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கான விசேட மானியத் திட்டம் ஒன்றை தென்னை அபிவிருத்திச் சபை மேற்கொள்ளவுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை தென்னை அபிவிருத்திச் சபையின் யாழ். அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

மீள்நடுகை செய்வதற்கும், புதிய நடுகைக்கும், பசளையிட மற்றும் நீர்பாசனம் போன்ற நோக்கங்களுக்காகவும் மேற்படி விசேட மானியம் வழங்கப்படவுள்ளது.

மேலும் மானிய விலையில் தென்னங் கன்றுகளை விநியோகிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (50-99)

# அனலைதீவில் சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

நல்லூர்,ஜூலை 7

அனலைதீவு ஐயனார் கோயில் பகுதியை அண்டிய வடக்கு, கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் மணல் அகழப்படுவதாகவும் இப்பகுதிகளில் கூடுதலாக மணல் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அனலைதீவு மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பொது மக்கள் குறிப்பிட்ட பகுதிகளில் மணல் அகழப்படுவதைத் தடைசெய்ய அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-[illegible])

# வியாழனும் சனியும் மின்வெட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை7

பருத்தித்துறைப் பிரதான வீதி அகலமாக்கும் பணிகளுக்காக மின்விநியோகத் தூண்கள் இடமாற்றப்படவுள்ளதால் நாளை வியாழன் மற்றும் சனி ஆகிய தினங்களில் பின்வரும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் பிரகாரம் நாளை வியாழக்கிழமை மற்றும் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு மற்றும் வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. (50-16)

# சுகாதாரக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை7

மானிப்பாய் சிவத்தமிழ் மானிட விடியற்கழகத்தின் சுகவாழ்வு மையத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான சுகாதாரக் கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.கல்வி வலய பாடசாலை சிறுவர் போசாக்கு, கட்டிளமைப்பருவ ஆளுமை விருத்தி, டெங்கு ஆகிய விடயங்களில் சமுதாய மருத்துவர்களான வைத்திய கலாநிதி என்.சுரேந்திரகுமார், எஸ்.சிவ கணேஸ், சி.எஸ். யமுனானந்தா ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். இக் கருத்தரங்கில் தமது பாடசாலை சுகாதாரமன்ற உறுப்பினர்கள் ஐவரையும் பொறுப்பாசிரியரையும் கலந்து கொள்ளுமாறு மானிடன் சுகவாழ்வு மைய இயக்குனர் அறிவித்துள்ளார். (50-201)

# மக்கள் நடமாட்டம் கூடிய பகுதியாகக் கோப்பாய் சந்தி

கோப்பாய்,ஜூலை7

கோப்பாய் சந்திப் பிரதேசத்தில் படிப்படியாக வர்த்தக முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் இப்பிரதேசம் மக்கள் நடமாட்டம் கூடிய இடமாக மாறிவருகின்றது.

யுத்தகாலத்திற்கு முன்பு இவ்வாறு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக கோப்பாய் சந்தி விளங்கி வந்தது. யுத்த காலத்தில் படிப்படியாக இப்பிரதேசத்தின் வர்த்தக நவடிக்கைகள் சீர்குலைந்து பொலிவிழந்து காணப்பட்டது.

தற்போது இப்பிரதேசம் படிப்படியாக மேம்பாடு அடைந்து மக்கள் தமது வர்த்தக முயற்சிகளைத் தொடங்கி வருகின்றனர். (50-72)




# படையெடுக்கும் பன்றிகளால் பாதிக்கப்படும் விவசாயிகள்

கோப்பாய்,ஜூலை 7

நீர்வேலி, அச்செழுப் பிரதேசங்களில் காட்டுப் பன்றிகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் விவசாயிகளுக்கு நட்டமேற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் குடியேறாத உயர் பாதுகாப்பு வலயத்தின் பற்றைக் காடுகளில் ஒதுங்கி இருக்கும் பன்றிகளே இவ்வாறு கூட்டமாக வந்து பயிர்களை சேதப்படுத்தி வருவதாக விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது இப்பிரதேசங்களில் தீவிர விவசாய செயற்பாடு நடைபெறுவதால் இங்கு இப்பன்றிகள் தங்குவதில்லை என தெரிவிக்கப்படுகிறது. (50-72)

# டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் உலக உணவுத் திட்டப் பயனாளிகள்

மூளாய்,ஜூலை 7

வலிகாமம் மேற்குப் பகுதியில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் உலக உணவுத் திட்டப் பயனாளிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

டெங்கு நோய்க்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு மேலும் வலுவூட்டுவதற்காகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீதிகள், பொது மைதானங்கள் மற்றும் வெற்றுக்காணிகள் ஆகியவற்றை துப்புரவு செய்யும் முகமாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் இலகுவேலையில் ஈடுபடும் பயனாளிகள் முன்னுரிமை அடிப்படையில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையிலும் ஈடுபடுத்தப்படவுள்ளனர். வலி.மேற்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற டெங்கு கட்டுப்பாட்டுக் கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது. (50-99)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. செயலாளரின் விசாரணைக் குழு; தப்பிக்க வழிதேடுகிறது இலங்கை அரசு

ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராக இலங்கையிலிருந்தும் - இலங்கைக்குச் சார்பாக வக்காளத்து வாங்கும் நாடுகளிலிருந்தும் எதிர்வலைகள் எழுந்துகொண்டிருக்கின்றன.

இலங்கையிலிருந்து அமைச்சரவை அந்தஸ்து பெற்றுள்ள இரண்டு அமைச்சுகளின் கட்சிகள்



போர்க்கொடி தூக்கியுள்ளன. இவையெல்லாம் ஏன் தெரியுமா?

இலங்கையில் யுத்தத்தின்போது ஐ.நா. சாசனத்தை மீறும் வகையில் - மனித உரிமைகள் மீறப்பட்ட வகையில் - இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. செயலர் பான் கீ-மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவுக்கு எதிராகவே!

சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்படுகின்றனர். ஆனால், உண்மையில் குற்றம் செய்தவர்கள் தாம் நீதிமன்றத்தின் தண்டனைகளில் இருந்து தப்பிக்க முடியாது என்று எண்ணி சிறைக் கம்பிகளை உடைத்து தப்பிக்க முயல்கின்றனர். அதேமாதிரியான செயற்பாட்டில்தான் இன்று இலங்கையும் இருக்கின்றது போல் அதன் செயற்பாடு உணர்த்துகிறது.

ஐ.நாவின் நிபுணர் குழு நியமனத்துக்காக சில சர்வதேச நாடுகளைக் கூட்டுச்சேர்த்து அதற்கு எதிராக செயற்பட வைக்க அது எத்தனிக்கிறது இலங்கை. இதனூடாகவாவது தான் தப்பிக்கலாம் என்று அது எண்ணுகிறது போலும்.

இந்நியமனத்துக்கு எதிராக இரண்டு கட்சிகளிடமிருந்தே பகிரங்கமாக எதிர்வலைகள் எழுப்பப்படுகின்றன. அமைச்சரவை அந்தஸ்துப் பெற்ற அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் விரவன்ஸவும், அமைச்சரவை அந்தஸ்தைப் பெற்ற அமைச்சர் ஒருவரை தன்னகத்தே வைத்துக்கொண்டுள்ள ஜாதிக ஹெல உறுமயவுமே இந்த பகிரங்க எச்சரிக்கைகளையும், ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொண்டுள்ளன.

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்துக்கு முன்பாக கடந்த 28 ஆம் திகதி ஐ.நா. நிபுணர் குழு நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜாதிக ஹெல உறுமய ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகரும், மேல் மாகாண சபை அமைச்சருமான உதய கம்மன்பில தான் நாட்டுப்பற்றாளன் என்ற தொனியில் சில கருத்துகளை முன்வைத்தார்.

''சர்வதேச மட்டத்தில் கொடூர பயங்கரவாதிகளிடமிருந்து எமது படையினர் எம்மையும் - எமது நாட்டையும் மீட்டுள்ளனர். இதற்காக 24 ஆயிரம் படையினர் தமது உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். 70 ஆயிரம் படையினர் அவயவங்களை இழந்துள்ளனர். அத்தகைய படையினரைக் காப்பாற்றுவதற்காக உயிரைக் கொடுக்கவும் தயார்.

''அத்துடன், எம்மைப் பாதுகாத்த குற்றத்திற்காகத் தண்டனையை எதிர்கொண்டிருக்கும் படையினரைக் காப்பாற்ற உயிர்த்தியாகம் செய்வதற்கு முன்வருமாறு நாட்டு மக்களை அழைக்கிறேன்.

''ஒருவர் பின் ஒருவராக உயிர் துறந்தேனும், பான் கீ-மூனின் நிபுணர் குழு இலங்கைக்கு அடியெடுத்து வைக்கும் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.''

- இப்படி உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



இதிலிருந்து உதய கம்மன்பில எதனைக் கூறவருகிறார்?

படையினருக்கு ஐ.நாவின் நிபுணர் குழுவால் தண்டனை கிடைத்து விடும் என்பதையா? படையினர் குற்றம் செய்தனர் என்பதையா?

படையினர் குற்றம் செய்தால்தானே தண்டனை கிடைக்கும். ஆனால், படையினர் குற்றங்களை மேற்கொள்ளவில்லை என்றுதானே நாம் அறிகின்றோம். பின்னர் ஏன் தண்டனையை எதிர்நோக்கியுள்ள படையினரைக் காப்பாற்ற வருமாறு உதய கம்மன்பில மக்களை அழைக்கிறார்? இது ஏன் என்று மக்களுக்குப் புரிந்திருக்கும்.

ஐ.நாவால் தடைசெய்யப்பட்ட கொத்துக்குண்டு, எரிகுண்டு வன்னிப் பிரதேசத்தில் பாவிக்கப்பட்ட சமயத்தில் உதய கம்மன்பிலவின் மனிதநேயம் எங்கே போனது?

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சரவை அந்தஸ்து பெற்ற அமைச்சருமான விமல் வீரவன்ஸ அண்மையில் ஊடகவியலாளர் மாநாடு சர்வதேச மட்டத்தில் அதிர்ச்சியடையக்கூடிய வகையில் ஓர் எச்சரிக்கை விடுத்தார்.

''இலங்கையின் இறைமைக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள ஐ.நாவின் நிபுணர் குழுவைக் கலைக்காவிட்டால் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகம் முற்றுகையிடப்படும். அத்துடன், அங்குள்ள ஊழியர்கள் பணயக் கைதிகளாக்கப்படுவர்.

''இலங்கையின் தலைவர்களைக் கைதுசெய்து அவர்களைச் சர்வதேச நீதிமன்றின் முன் குற்றவாளிகளாக நிறுத்துவதே இந்த நிபுணர் குழு நியமிக்கப்பட்டிருப்பதன் பிரதான நோக்கமாகும்.

''இந்த நிபுணர் குழு அடுத்த கட்டமாக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள், யுத்தக் குற்றச்சாட்டு ஆகியவற்றை விசாரிப்பதற்கு என விசாரணைக்குழு ஒன்றை நியமிக்கும்.''

- இப்படி விமல் வீரவன்ஸ எச்சரிக்கை விடுத்திருந்தார்.

விமல் வீரவன்ஸவின் கருத்துகளில் எச்சரிக்கையுடன் கூடிய இறைஞ்சல்களும் உள்ளனவாகவே இது புலப்படுகிறது. ஏனெனில், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள், யுத்தக் குற்றச்சாட்டுகள் பின்னர் நிரூபிக்கப்பட்டுவிடும் என அவர் அஞ்சுகிறார் போலத் தெரிகிறது.

அதே தருணத்தில் இலங்கை அரசு விமல்வீரவன்ஸவின் கருத்துக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை, இது அவரின் தனிப்பட்ட கருத்தாகும் என்று ஐ.நாவுக்கு உடனடியாகத் தெரிவித்துவிட்டது.

அமைச்சரவை அந்தஸ்து பெற்ற அமைச்சர் ஒருவர் ஒரு விடயம் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போது அதை அரசின் கருத்தாகவே கொள்ளவேண்டும்.

இது தனிப்பட்ட கருத்து என்பதை விமல் வீரவன்ஸ அன்றே கூறியிருக்க வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு கூறவில்லையே?

ஆனால், இதில் அரசு ஏதோ பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகின்றமை போன்று புலப்படுகிறது.

சர்வதேச நாடுகளால் ஒன்றிணைந்து நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராக இலங்கையிலுள்ள இரு கட்சிகள் தன்பாட்டில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதையும் அரசு பார்த்துக்கொண்டு இருப்பது முறையானதா?

இது சர்வதேச மட்டத்தில் எவ்விதமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை இலங்கை புரிந்து வைத்திருக்கவில்லை



என்பது தான் கவலைக்குரிய விடயமாகும்.

சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு தற்போது உள்ள நற்பெயர் அனைவருக்கும் தெரிந்ததே. இருந்தும் தொடர்ச்சியாக இந்தக் கட்சிகளால் மேற்கொள்ளப்படும் எச்சரிக்கை விடுப்புகளும், ஆர்ப்பாட்டங்களும் இலங்கையை எங்கோ கொண்டு செல்லப்போகின்றன.

**- ஜே.ஜே -**

அதி உச்சமாக மனித உரிமைகள் மீறப்படும் நாடுகளில் கூட எந்த அமைச்சர்களும் ஐ.நாவை மிரட்டவில்லை. நெருக்கடிகளும் கொடுக்கவில்லை.

தேசப்பற்று என்ற போர்வையில் நாட்டு மக்களைத் தூண்டி சர்வதேச சபையில் நாட்டின் நன்மதிப்பை சூறையாடவே இவர்கள் எண்ணுகின்றனர்.

இப்படியானவர்கள் மீது அரசு அழுத்தங்களை - நடவடிக்கைகளை மேற்கொண்டால் தானே இலங்கை சர்வதேச



அளவில் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியும்.

ஐ.நாவுக்கு இது அரசின் கருத்தல்ல. தனிப்பட்டவரின் கருத்து என்ற கூறி அரசு தப்பித்துக்கொள்வதா நாட்டுக்கு அழகு.

தனிநபர் ஐ.நாவுக்கு எதிராக இவ்விதமான அறிவிப்புகளை விடுத்தால், அரசு என்ன செய்திருக்கும் என்பதும் ஐ.நாவுக்குத் தெரியும்.

''ஐக்கிய நாடுகள் சபையை

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுப் பிரதேசத்தில் இம்முறை கடும் வரட்சி; மடுமாதாவின் திருவிழா மூன்று தினங்களே!

## யாத்திரிகர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் முடிவு

மன்னார்,ஜூலை7

எதிர்வரும் ஆவணி மாத மடுமாதா ஆலய உற்சவங்கள் மூன்று தினங்களுக்கு மட்டுப் படுத்தப்பட்டுள்ளதாக மடுப்பரிபாலன சபை அறிவித்துள்ளது.

போதிய அளவு குடிதண்ணீர் வசதிகள் இப் பகுதியில் இல்லையென்று காரணம் கூறப்படுகின்றது.

வழமையாக இத் திருவிழாவில் நாட்டின் சகல பகுதிகளிலுமிருந்து பல லட்சம் பக்தர்கள் இங்கு வந்து முகாம் அமைத்துப் பல நாள்கள் தங்கியிருந்து அன்னை யைத் தரிசித்துச் செல்வதே வழமையாகும்.

ஆயினும் இம்முறை திருவிழா மூன்று தினங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் மடுப் பரிபாலனசபை மிகக் குறைந்த மக்கள் தொகையையே எதிர்பார்ப்பதாகத் தெரிகின்றது.

வழமையாகப் பத்துத் தினங்கள் நடைபெறும் மடுமாதா திருவிழா வரட்சி காரணமாக மூன்று நாள்களுக்கு மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. (1-80)

# முரசுமோட்டை உப அலுவலகம் மீண்டும் செயற்படத் தொடங்கியது

கிளிநொச்சி,ஜூலை 7

கரைச்சி பிரதேச சபையின் முரசு மோட்டை உபஅலுவலகம் மீண்டும் முன்னர் இயங்கிய இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கரைச்சி பிரதேச சபையானது கரைச்சி பிரதேச செயலர் பிரிவினையும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவினையும் தனது எல்லைகளாகக் கொண்டுள்ளது. இதனால் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் தனது செயற்பாடுகளை இலகுவாக மேற்கொள்வதற்காகவே இந்த உப அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப் படுகின்றது.

விரைவில் ஸ்கந்த புரத்திலும், வட்டக்கச்சியிலும் இயங்கிய உப அலுவலகமும் ஆரம்பிக்கப்படும் எனவும் பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கரைச்சிப் பிரதேச சபையின் முரசு மோட்டை உப அலுவலகத்தின் பொறுப் பதிகாரியாக திருமதி எம்.அருட்சோதி செயற்பட்டு வருகின்றார். (50-405)




# இடம் பெயர்ந்த முஸ்லிம்களின் காணிகள் இனங்காணப்படும்

முல்லைத்தீவு,ஜூலை 7

இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம்களில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் காணிகளை இனம்காண்பதற்காக அவர்களை அங்கு அழைத்துச் செல்லவும், விரைவில் அப்பிரதேசங்களில் அவர்களை மீள்குடியேற்றவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

வடக்கில் இருந்து 1990ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் புத்தளம், அநுராதபுரம், குருநாகல் மற்றும் களுத்துறை ஆகிய பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து 67 குடும்பங்களைச் சேர்ந்த 250 பேர் இடம் பெயர்ந்துள்ளமை பதிவு செய்யப்பட்டுள்ளதாக திட்டப் பணிப்பாளர் எஸ். ஸ்ரீரங்கன் கூறினார். இவர்களுள் 23 குடும்பங்களைச் சேர்ந்த 92 பேர் கடந்த வாரம் கரைத்துறைப்பற்றில் மீள்குடியேற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கான செயலகத்தினூடாக இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

ஆனால் முல்லைத்தீவில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் கடந்த 20 வருடங்களாக தமது சொந்த இடங்களுக்கு சென்றிராததாலும் சிலர் அங்கு செல்ல தயங்குவதாலும் முல்லைத் தீவில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை இந்த மாதத்திற்குள் சொந்த இடங்களுக்கு நேரில் அழைத்துச் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது. (50)

# யாழ் – பூநகரி கடல் போக்குவரத்தில் 150 பயணிகள் செல்லக் கூடிய படகு

## விரைவில் சேவையில் என்கிறார் ஆளுநர்

பூநகரி,ஜூலை7

யாழ்ப்பாணம் - பூநகரிக்கான கடல் வழிப் போக்குவரத்துக்கென 150 பேர் பயணிக்கக் கூடியதான புதிய படகு ஒன்றைச் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இத்தகவலைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கடந்த மாதம் கிளிநொச்சிப் பகுதிக்கு வருகை தந்த போது யாழ்ப்பாணம் - பூநகரிக்கான படகுச் சேவையை ஆரம்பித்து வைத்தார்.

தற்சமயம் இச் சேவையில் தினமும் மூன்று படகுகள் ஈடுபட்டுள்ளன.

அண்மையில் மணியந்தோட்டம் இறங்கு துறைக்கு வருகைதந்திருந்த ஆளுநர் சந்திரசிறி இந்தச் சேவைக்கென புதிய படகு ஒன்றைத் தருவிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார். (1-111)

# வரவு செலவுத் திட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு எந்தவித வசதிகளும் அறிவிக்கப்படவில்லை

## மன்னார் ஊடகவியல் நிறுவனம் கவலை

மன்னார்,ஜூலை7

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்தவும் பொதுத் தேர்தலில் அரசாங்கமும் இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர்களுக்கு அளித்த கவர்ச்சியான வாக்குறுதிகளில் எதுவுமே இந்த வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்பதோடு அனைத்து ஊடகவியாளர்களும் மீண்டும் ஒருமுறை ஏமாற்றப்பட்டுள்ளனர்.

மன்னார் ஊடக வலைப் பின்னல் நிலையம் மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்துள்ளது.

சில ஆண்டுகளாக இலங்கை ஊடகவியலாளர்கள் கடத்தப்படுதல், காணாமல் போதல், குற்றவாளிகளாக்கப்படுதல், கொன்றொழிக்கப்படுதல், நாட்டைவிட்டு தப்பியோடுதல் என்பவற்றிலிருந்து விரைவில் விமோசனம் கிடைக்கும் என ஜனாதிபதியின் வாக்குறுதியில் நம்பியிருந்தனர். அந்த நம்பிக்கை தற்போது பொய்த்து விட்டது.

''ஊடகவியலாளருக்கு அதிகரித்த கொடுப்பனவு, வீடமைப்பு மானியம், ஓய்வூதியம், வாகனக் கடன் ஊடக உபகரணங்கள் எனப் பல்வேறு ஆசைவார்த்தைகள் கூறப்பட்டன எதற்கும் ஏமாறாத ஊடகர்கள் இவ்வார்த்தைகளில் ஏமாந்து போயினர். இனிமேல் ஊடகர் நலன் பாடும் ஐந்து தொழிற்சங்கங்களும் என்ன செய்யப் போகின்றன?''

நடந்தவை நடந்தவைகளாக விருக்கட்டும். இனிநடப்பவைகள் நல்லவைகளாக அமையட்டும். அடுத்த ஆண்டு 'பட்ஜட்டிலாவது வாக்குறுதிகளை நிறைவேற்றுவாரா? மேதகு ஜனாதிபதி அவர்கள்!'' என அந்த நிலையம் கேள்வி யொழுப்பியுள்ளது. (1-80)

# வன்னியில் நீண்டகாலம் பணியாற்றிய ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றுவதற்குத் திட்டம்

## அவர்களது இடங்களுக்கு குடாநாட்டு ஆசிரியர்கள்

மன்னார்,ஜூலை7

வன்னிப் பெருநிலப்பரப்பில் நீண்டகாலம் தொடர்ந்து கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு விரும்பிய வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் கிடைக்கவிருக்கிறது.

அவர்களின் இடங்களை நிரப்பு வதற்கு யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களில் 45 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இடமாற்றம் மூன்றாம் தவணை ஆரம்பத்தில் இருந்து வழங்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டம் உட்பட வவுனியா வடக்கு கல்வி வலயம், மடுக் கல்வி வலயம் ஆகிய பகுதியில் நீண்டகாலம் தொடர்ந்து கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை வடக்குமாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

இந்தப்பிரதேசங்களில் கடமையாற்றிய ஆசிரியர்கள் காலத்துக்கு காலம் இடமாற்றம் கோரி விண்ணப்பித்த போதிலும் இடமாற்றம் வழங்கப்படாமல் இருந்து வந்தது.

இந்த வருடம் வடக்கு மாகாண நிர்வாகம் உயர்மட்டத்தில் மேற்கொண்ட ஒருமித்த தீர்மானத்துக்கு அமைய இடமாற்றம் கோரி விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

இவர்களின் இடங்களை நிரப்புவதற்கு யாழ். மாவட்டத்தில் வெளிமாவட்ட சேவை யாற்றாது தொடர்ந்து பணியாற்றும் 45 வயதுக்கு உட்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

மேற்படி இடமாற்றம் பெறுவதற்கு நிபந்தனை அடிப்படையில் தகைமை பெற்ற ஆசிரியர்களின் பட்டியல் தயார் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (1-11)

# முல்லைத்தீவு டிப்போவை மீள இயக்க நடவடிக்கை; ஆளணி வளமும் 25 பஸ்களும் தேவையாகவுள்ளன

## பிராந்திய பொது முகாமையாளர் தெரிவிக்கிறார்

கிளிநொச்சி,ஜூலை 7

இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் டிப்போவை முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள இயக்குவதற்கு துரித நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்கென 25 பஸ்களும் தேவையான ஆளணி வளங்களும் பற்றாக் குறையாக இருக்கிறன.

இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் க.கணேசபிள்ளை இந்தத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் போக்குவரத்து சேவைகளை முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் விஸ்தரிக்க வேண்டிய சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது. அங்கு பஸ் டிப்போவை மீள இயக்குவதற்கு துரித கதியில் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அதன் முன் ஏற்பாடாக கடந்த வாரம் இலங்கை மத்திய போக்குவரத்து சபையின் சிவில் பொறியியலாளர், பிரதம இயந்திரமுகாமையாளர் ஆகியோர் சகிதம் நான் அங்கு விஜயம் மேற்கொண்டிருந்தோன்.

பஸ் டிப்போ மீள ஆரம்பிக்கப்படவுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைச்சி குடியிருப்பு பகுதியின் நிலைமைகள் குறித்து விரிவாக ஆராய்ந்தோம்.

முல்லைத்தீவு பஸ் டிப்போவை மீள இயக்குவதற்கு உடனடியாக 25 பஸ்களும் அதற்கான ஆளணி வளமும் தேவையாக உள்ளன.

இந்தத் தேவைகுறித்து இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் தலைவருக்குத் தெரிவித்திருக்கிறேன்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்துக்கான பஸ் டிப்போ தற்காலிகமாக கிளிநொச்சி நகரிலுள்ள சேர் பொன். இராமநாதன் வளாகத்திலே இயங்கி வருகிறது. இந்த டிப்போவில் 17 பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன - என்றார். (1-14)

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

# 10 வருடங்களாகத் தொடர்ந்து பணியாற்றிவரும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் இல்லை

## அதிருப்தி தெரிவிக்கிறார்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 7

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் பத்து வருடங்களுக்கு மேலாக தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியோர் தமக்கு இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவாகளில் தகுதியுடையவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

எனினும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு தற்போது நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

கடந்த யுத்த அனர்த்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளும் தொடர்ச்சியாக சேவையாற்றிய கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் பாதிக்கப்பட்டவர்கள் தரப்பிலிருந்து விசனம் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த இரண்டு மாவட்டங்களிலுமுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jaffna College
## Prize Giving 2010

will be held on Thursday 8th July at 4.30 p.m.
In the Quadrangle
Chief Guests :

**Prof. N.Shanmugalingan,**
*B.Ed (Hons), M.A,Ph.D.*
Vice- Chancellor, University of Jaffna.

**&**

**Mrs, Gowri Shanmugalingan,**
*B.Com, P G. Dip in Ed, M. Phil.*
teacher, Vembadi Girls' High School, Jaffna

***You are cordially invited.***

Jaffna College
Vaddukoddai. (சி/568877) Principal.

## போதனாசிரியர், பயிலுநர்களுக்கு விண்ணப்பங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் மூன்று மாதங்கள் கொண்ட வீட்டு மின்னிணைப்புப் பயிற்சி நெறியினை வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறிக்கான போதனாசிரியர் மற்றும் பயிலுநர்கள் ஆகியோரை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. வீட்டு மின்னிணைப்பு போதனாசிரியருக்கான தகைமை**
1. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் மேற்படி பயிற்சி நெறியினை பெற்றமைக்கான சான்றிதழ்.
2. மேற்படி பயிற்சி நெறியினை நடத்தியமைக்கான 2 வருடத்திற்கு குறையாத முன் அனுபவம்.
3. கிளிநொச்சி மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
4. மாதாந்தக் கொடுப்பனவு ரூபா 20,000/= வழங்கப்படும். தங்கள் சுயவிவரங்களுடன் தகைமைச்சான்றிதழ், அனுபவசான்றிதழ் பிரதிகளுடன் சுயமாக தயாரித்து எமக்கு 15.07.2010 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பிக்க வேண்டும்.

**02. பயிற்சி நெறி - வீட்டு மின்னிணைப்பு**
வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் மேற்படி பயிற்சி நெறியினை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியினைப் பெற விரும்பும் கீழ்வரும் தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
**விண்ணப்ப முடிவு திகதி 15.07.2010.**

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிவரத்தை மாதிரிப் படிவத்தில் குறிப்பிட்டதன் பிரகாரம் தாங்களாகவே தயாரித்து **''பிரதேச செயலர், பிரதேச செயலகம், கண்டாவளை''** தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கவேண்டும்.

1. கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டிருத்தல்.
2. 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல்.
3. க.பொ.த.சாதாரண தரம் வரை கல்வி கற்றிருத்தல் விரும்பத்தக்கது.
4. மேற்படி பயிற்சி நெறியினை தொடரக்கூடிய உடல் ஆரோக்கியம், நற்பண்பும், ஆர்வமும் உடையவராக இருத்தல்.

**பயிற்சி நெறி தொடர்பான விபரம்**
1. பயிற்சி நெறி வாரத்தில் சனி,ஞாயிறு, விடுமுறை தவிர்ந்த நாள்களில் மூன்று மாதங்கள் நடைபெறும்.
2. பயிற்சியாளருக்கு நாளொன்றுக்கு 100/= ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.
3. பயிற்சி நெறி 2010 ஓகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.
4. பயிற்சி முடிவில் பெறுமதிமிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

மேற்படி பயிற்சி நெறிக்கான மாதிரி விண்ணப்பமும் அறிவுறுத்தல்களும் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அனைத்து கிராம சேவையாளர் அலுவலகங்களிலும் மற்றும் கிராம/ மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களிலும் பெற்று 15.07.2010இற்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்.

சி.சத்தியசீலன்,
பிரதேச செயலர்,
கண்டாவளை. (சி/56880)

## Nimovi Readymix Pvt (LTD)



தற்போது யாழ்.மண்ணில் உங்களுக்காக...!

தயார் நிலையில் தரமான கொங்கிறீற் கலவை விநியோகம்
தேவையான இடங்களுக்குக் கொண்டு வந்து தரப்படும்.

கேரதீவு றோட்,நாவற்குழி.
0713680291, 0777252722

## மணமகள் தேவை

இந்து குருகுலத்தைச் சேர்ந்த 1982இல் பிறந்த, 28 வயது 5' 4'' உயரம், வெள்ளை, அழகான, கும்பராசி, செவ்வாய்க் குற்றமற்ற கிரக பாவம் 16½ உடைய கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று (Soft - ware Engineer) சொப்வெயர் என்சினியர் சிங்கப்பூரில் உயர் பதவியிலிருக்கும் நற்பண்புள்ள மணமகனுக்கு ஏற்ற நன்கு படித்த பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற (வைத்தியர், எஞ்சினியர் I.T, B.Com) அழகான மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: 077 5474670, 021 2226679

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிற்லைன், பைரகா, புறோயிலர் குஞ்சுகள் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். விவரங்களுக்கு:
எஸ்.கிருஸ்ணகுமார்,
மானிப்பாய், தொ.பே.0772338084

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகர சபைக்குள் அல்லது அதற்கு அண்மையில் வியாபார ஸ்தாபனம் நிறுவனத்திற்கான சகல வசதியுடன் கூடிய மற்றும் வாகனத் தரிப்பிட வசதியுடன் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு : 0789487419

## பெயர் மாற்றம்

கம்பர்மலை, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செல்லத்துரை காந்தீபன் ஆகிய நான் இன்று 07.07.2010 முதல் எனது பெயரை செல்லத்துரை காண்டீபன் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

செல்லத்துரை காண்டீபன்
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

## New Vision Optical
### மூக்குக் கண்ணாடி விநியோகஸ்தர்

சிறியோர் முதல் பெரியோர் வரை விசேட விலைக் கழிவுடன் மூக்குக்கண்ணாடி வழங்கப்படும். அதிகூடிய விலை 2000/= மட்டுமே. கையிருப்பு உள்ளவரை மட்டுமே.
17, பலாலி றோட், யாழ்ப்பாணம்.
(அப்பலோ வைத்தியசாலை முன்பாக)
தொ.பே. 0772395775

## வீடு, வளவு விற்பனைக்கு

மானிப்பாய், மெமோறியல் வீதியில் 4 பரப்பு 7 குழியையுடைய காணியில் சகல வசதிகளுடனும் கூடிய புதுவீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0717353524

## கடை விற்பனைக்குண்டு

பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் கடை விற்பனைக்குண்டு.
கிணறு வசதியும் உண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்:-
0770760856

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை 7

சண்டிலிப்பாய், கல்வளை வீதியில் உள்ள காளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 9 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பொங்கல் உற்சவம் இடம்பெறும்.
(204-9)

* * *

அல்லைப்பிட்டி புனித உத்தரிய அன்னை ஆலய வருடாந்த திருவிழா இன்று புதன் கிழமை பி.ப. 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் நவநாள் வழிபாடுகள் பி.ப. 4.30 மணிக்கு நடைபெறும்.

எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (204)

# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 661 திகதி 05-07-2010

வெற்றி எண்கள்

**01 13 40 47 E** (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. **25,651,000/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 25,651,000/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 2,000/= | 30,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 401 | 1,000/= | 401,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 654 | 1,000/= | 654,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16034 | 60/= | 962,040/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7512 | 40/= | 300,480/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 189023 | 20/= | 3,780,460/= |
| | | மொத்தம் ரூ. | 6,927,980/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| பொலன்னறுவை | 600164540-3-23 |
| காலி | 600175829-9-19 |
| இரத்தினபுரி | 600173892-9-39 |
| நுவரேலியா | 600160827-3-13 |
| திருகோணமலை | 600172355-4-44 |
| வவுனியா | 600175281-3-43 |
| மட்டக்களப்பு | 600171609-3-43 |
| கொழும்பு | 600165988-1-21 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **7,327,980/=**

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
**ரூ. 26,162,530/=**
செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2010 ஜூலை 08 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய
இளைப்பாறிய அதிபர் சைவப்புலவர்
கலாபூஷணம் சு.செல்லத்துரை
அவர்களின் பாசமிகு துணைவி
**திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரை**
அவர்களின் திடீர் மறைவைக் கேட்டு அதிர்ச்சியும் கவலையுமடைவதுடன் அன்னாரின் ஆத்மா அரனடியில் அமைதி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

*இளவாலை வடக்கு.* (100358) பா.தர்மபாலா குடும்பம்.

## முக்கிய அறிவித்தல்
### பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பளை
### 31.12.2009இல் நிதிக் கூற்றுத் தயாரித்தல்

மேற்படி எமது சங்கம் மீளக் குடியமர்ந்த பின் 31.12.2009இல் கணக்குகளை ஒழுங்குபடுத்தி நிதிக் கூற்றுத் தயாரிக்க வேண்டியுள்ளது. இதற்கமைய கீழ்வரும் விடயங்களை மேற்படி திகதியில் உறுதிப்படுத்தி உறுதிப் பத்திரங்களை 12.07.2010இற்கு முன் தலைவர்/ பொது முகாமையாளர், பச்சிலைப்பள்ளி ப.நோ. கூ.சங்கம், பளை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் அல் லது நேரடியாக கையளிக்க முடியும்.

I. சங்கத்திற்கு வருமதியானது
1. வியாபாரக் கடன் பெற்றோர்
2. முற்பணம் பெற்றோர்
3. மற்றும் ஏனைய வருமதிகள்

II. சங்கத்திடமிருந்து செலுத்த வேண்டியவை.
1. வியாபாரச் சென்மதிகள்
2. முற்பணம்
3. ஏனைய சென்மதிகள்

III. கிராமிய வங்கியில் வைப்புச் செய்தோர்
மேற்படி எமது சங்கத்திலுள்ள கிராமிய வங்கியில் சேமிப்பு நிலையான வைப்பு மற்றும் ஏனைய வைப்புச் செய்தவர்கள் தமது சேமவைப்புப் புத்தகங்கள், நிலையான வைப்புச் சான்றிதழ் கள் பரிசீலனைக்காக சங்கத்திற்கு சமர்ப்பித்து 31.12.2009இல் மீதியை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

IV. இடம்பெயர்வு தொடர்பில் சங்கம் தொடர்பாக ஏதும் தகவல்கள் இருப்பின் அதனையும் சங்கத்திற்குச் சமர்ப்பிக்கவும்.

V. அங்கத்தவர் பங்கு தொடர்பான உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் இருப்பின் அவற்றினை சமர்ப்பித்து அங்கத்துவத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

தலைவர்,
பச்சிலைப்பள்ளி பலநோக்குக்
கூட்டுறவுச்சங்கம், பளை. *05.07.2010*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சிக்கு வழி

இந்த உலகில் நாம் மட்டுமே சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று நினைப்பது சாத்தியமில்லாத விஷயம். அக்கம்பக்கத்தில் இருக்கும் மற்றவர்களுடன் மகிழ்ச்சியாக இருந்தால்தான் மகிழ்ச்சியாக இருக்க முடியும்.

புற உலகில் நமது வாழ்க்கை பிறரைச் சார்ந்திருப்பது போலவே, அக வாழ்விலும் நமது வாழ்க்கை பிறரைச் சார்ந்தே இருக்கிறது. இதைப் புரிந்து கொள்ள உதவுவதுதான் இந்தக் கதை.

முன்னொரு காலத்தில் ராஜ்ய வர்த்தன் என்ற அரசர் இருந்தார். அவர் ஏழாயிரம் ஆண்டுகள் தன்னுடைய நாட்டை மிகச் சிறப்பாக ஆட்சி செய்து வந்தார்.

(ஏழாயிரம் ஆண்டுகள் எப்படி ஒருவர் உயிருடன் இருக்க முடியும் என்ற சந்தேகம் உங்களுக்குத் தோன்றலாம். இது புராணக்கதை. கதைகளில் சொல்லப்படும் பல நிகழ்ச்சிகள் இந்தக் காலத்துக்குப் பொருந்தாதுதான். 'ஏழாயிரம்' என்றால் நீண்ட காலம் என்று பொருள் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும், புராணக் கதைகள் மூலம் சொல்லப்படும் கருத்தைத்தான் நாம் முக்கியமாகவும் சாரமாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும்).



அரசாட்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றதால் மக்களுக்கு அரசன் மீது மிகுந்த மரியாதை இருந்தது.

ஒரு நாள் -

ராணி அரசனுக்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று அரசியின் கண் கலங்கியது. இதைப் பார்த்த அரசர், அரசியிடம் அவள் கலங்குவதற்குரிய காரணத்தை விசாரித்தார்.

''உங்கள் தலையில் ஒரு முடி நரைத்திருக்கிறது! அப்படியென்றால் உங்களுக்கு வயதாகிவிட்டது என்றுதானே அர்த்தம். நான் கண் கலங்க அதுவே காரணம்'' என்று அரசி வருத்தத்துடன் கூறினாள்.

''இதற்குப் போய் யாராவது கலங்குவார்களா? இது காலன் எனக்கு விடுத்திருக்கும் எச்சரிக்கை! எனவே நான் உடனே காட்டிற்குச் சென்று எஞ்சியுள்ள காலத்தைத் தவத்தில் கழிக்க வேண்டும்'' என்றார் அரசர். அப்படியானால் நானும் உங்களுடன் வருவேன் என்றாள் அரசி.

அரசனும் அரசியும் காட்டிற்குப் போய் விட்டால் அரசாங்கம் என்னாவது?

பொதுமக்கள் பார்த்தார்கள் அவர்கள் அரசனிடம் சென்று ''நீங்கள் இருவருமே காட்டுக்குப் போக வேண்டாம். கொஞ்சம் பொறுங்கள் நாங்கள் சிறிது காலம் கழித்து உங்களிடம் வந்து மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று கூறுகிறோம்'' என்று சொல்லிவிட்டு வெகு தொலைவில் இருந்த சூரியனின் ஆலயத்திற்குச் சென்று தவம் செய்ய ஆரம்பித்தார்கள்.

மூன்று மாதம் கழிந்தது.

சூரிய பகவான் அவர்களுக்குக் காட்சியளித்து, ''உங்களுக்கும் என்ன வரம் வேண்டும்? என்று கேட்டார்.

''எங்கள் அரசர் இன்னும் 10,000 ஆண்டுகள் எந்த நோய் நொடியும் இல்லாமல் இளமையோடிருந்து எங்கள் நாட்டை நன்றாக ஆட்சி செய்ய வேண்டும்'' என்று வரம் கேட்க ஆரம்பித்தார்கள். சூரிய பகவானும் அவர்கள் விரும்பியபடியே வரம் கொடுத்து மறைந்தார்.

அரசனுக்கு இந்த விஷயம் தெரிய வந்தது. அவர் சந்தோஷப்படுத்துவதற்குப் பதிலாக வருத்தப்பட்டார்.

இதைக் கண்ட அரசி ''இந்தச் செய்தியினால் மகிழ்ச்சி அடைவதற்குப் பதிலாக வருத்தப்படுகிறீர்களே ஏன்?'' என்று வினவினாள்.

''இந்த வரத்தினால் நான் எப்படி சந்தோஷப்பட முடியும்? நான் பத்தாயிரம் வருடங்கள் உயிரோடு இருக்கலாம்? ஆனால் நீயும் இந்த வரத்தைப் பெற்றுத் தந்த நம்முடைய நாட்டு மக்களும் உயிரோடு இருக்க மாட்டீர்களே! என்னுடைய ராணியாகிய நீயும் என் அன்பிற்குரிய இந்த ஜனங்களுடன் இல்லாமல் நான்மட்டும் எப்படி பத்தாயிரம் ஆண்டுகள் சந்தோஷமாக இருக்க முடியும்? என்றார் அரசர்.

பின்பு அரசனும் அரசியும் அதே சூரியனின் ஆலயத்திற்குச் சென்று தவம் புரிந்தார்கள். சூரிய பகவான் அவர்களின் தவத்திற்கு மகிழ்ந்து அவர்களுக்குத் தரிசனம் தந்தார்.

அப்போது அரசனும் அரசியும் ''நாட்டில் இப்போதிருக்கும் எல்லோருமே பத்தாயிரம் ஆண்டுகள் சீரும் சிறப்புமாக மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும்'' என்ற வரத்தை சூரிய பகவானிடம் வேண்டிப் பெற்றார்கள்.

இந்தக் கதை மார்க்கண்டேய புராணத்தில் மார்க்கண்டேயர் சொல்வதாக அமைந்துள்ளது.

நம்முடைய மகிழ்ச்சியில் மற்றவர்களின் மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது; மற்றவர்களின் மகிழ்ச்சியில் நம்முடைய மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது. இதைத்தான் இந்தக் கதை நமக்கு உணர்த்துகிறது.

கோ.சுவாமிநாதன்

# கடவுளாக வேண்டாமா

வலதுகை இடதுகை என்ற இரண்டு கைகளோடு
முகத்தில் புன்னகை அகத்தில் நம்பிக்கை
என்கிற மூன்று நான்கு கைகளும் நமக்கு
முளைத்துவிட்டால் நிச்சயம் நாம் கடவுள்தான்

கடவுள் என்றால் சிரித்த முகத்துடன் இருக்க வேண்டும் என்று உலகம் அர்த்தம் பண்ணியிருக்கிறது. நீங்களும் கடவுளாக முடியும் எப்படி? எப்போதும் சிரித்த முகத்துடன் இருந்தால் கடவுளாக முடியும். ஆம்! நமக்கெல்லாம் இரண்டு கை, வலது கை இடது கை ஆனால் சாமிப்படங்களைப் பாருங்கள் அவர்களுக்கு மட்டும் நான்கு கைகள். வலது கை இடது கை இவற்றோடு முகத்தில் புன்னகை. அகத்தில் நம்பிக்கை என்கிற கூடுதல் கைகள் பெற்று நான்கு கைகளுடன் நடமாடினால் நீங்களும் கடவுள்தான்.

வாழைப்பூ முகத்தோடு உம்மென்று நீங்கள் வந்தால் யாருக்கு உங்களைப் பிடிக்கும்? எப்போதும் புன்னகையுடன் இருங்கள். பலருக்கும் உங்களைப் பிடிக்கும். எத்தனை பிரச்சினை, துன்பம் வந்தாலும் உதட்டுப் பூவை மட்டும் உதிர்த்து விடாத புன்னகை மன்னர்களை உலகம் எப்போதும் மிதிக்கும்.

என் பள்ளிக் காலத்தில் ஒரு மாணவனை என்னால் மறக்கவே முடியாது. ஆசிரியர் அம்மாணவனை பிரம்பால் எத்தனை அடி அடித்தாலும் அழுததே இல்லை. ஒருநாள் வெறியோடு, அடித்துப் பார்த்தார். அந்த மாணவன் துயரத்தைக் கொஞ்சம் கூட வெளிக்காட்டாது சிரித்தபடி நின்றான். ''ஏன்டா மரம் மாதிரி நிக்கிற'' என்று ஆசிரியர் கேட்டார்.

''என் சிறு வயதில் அம்மா இறந்து போனாள். இறக்கும் போது சத்தியம் வாங்கினார், அழக்கூடாது உன் வாழ்க்கையில் எப்போதுமே அழக்கூடாது. சத்தியம் வாங்கிவிட்டு அம்மா இறந்து விட்டார். சத்தியத்தை காப்பாற்றத்தான் நான் அழுவதே இல்லை என்றான்''

''இறந்து போன அம்மாவின் சத்தியத்தை உயிரோடு வைத்திருப்பதற்காக'' என்ற செய்தியைக் கேட்டதும் ஆசிரியர் செத்துப் போன மாதிரி மௌனமாகிவிட்டார். பிரம்பு மட்டும் உடையவில்லை அவரே உடைந்துவிட்டார். முகம் வாடிவிட்டது. எங்களை அன்றிலிருந்து அடிப்பதில்லை, எத்தனை துயரத்திலும் திடமாக இருக்க அந்த பள்ளித் தோழனை என்னால் மறக்கவே முடியாது.

**இன்னொரு அருமையான செய்தி**

கடலில் அடித்த புயலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் இறந்து விட்டார். ஆறுதல் சொல்ல வந்த மீனவர், மகனைத் தேடினார். அவரோ மீன்பிடிக்கச் சென்று கொண்டிருந்தார். அப்போதும் கடலில் புயல் உருவாகி இருந்தது. இப்படியொரு புயலில் போய்த்தானே இறந்து போனார். மறுபடியும் போறாயே என்று கேட்டார். ''அதனால் என்ன என் தாத்தா கூட கடலில் மீன் பிடிக்கும் போதுதானே இறந்தார். அதன் பின் என் தந்தை போகவில்லையா? என் தந்தை கடலில் இறந்தாலும் நான் கடலுக்குப் போகிறேன்''என்றார்.

தாத்தாவும் சரி, அப்பாவும் சரி கடலில் இறந்த பின்பும் உனக்கு கடலுக்குள் போகப் பயமில்லையா? என்றார் வந்தவர்.

''அதுசரி உங்கள் தாத்தாவும் அப்பாவும் எப்படி இறந்தார்கள். இருவரும் படுத்திருக்கும் போது தூக்கத்திலேயே உயிர் பிரிந்தது'' என்றார் வந்தவர்.

உங்கள் தாத்தாவும் அப்பாவும் படுக்கையில் தூக்கத்திலேயே இறந்து விட்டார்கள் என்கிறீர்கள். அதன் பின் நீங்கள் எப்படித் தைரியமாகப் படுக்கையில் தூங்கப் போகிறீர்கள் என்று மடக்கினார் மீனவர்.

நம்பிக்கைதான் வாழ்க்கை. நம்பிக்கையோடு தான் ஒவ்வொருநாளும் வாழ்ந்தாக வேண்டும். ஒவ்வொரு பிரச்சினையையும் சந்தித்தாக வேண்டும்.

முகத்தில் புன்னகை என்பதோடு அகத்தில் நம்பிக்கை என்கிற நான்காவது கையும் நமக்கு முளைத்து விட்டால் நிச்சயம் நாம் கடவுள் தான்.

# உலக மகா கஞ்சர்கள்

உலக மகா கஞ்சர் ஒருவன் இருந்தான்.

ஒருநாள் இரவு கஞ்சனுக்கு ஒரு கனவு வந்தது. அந்தக் கனவிலே ''மகனே.. நம் வீட்டுத் தோட்ட புங்கை மரத்தின்கீழ் ஒரு புதையல் இருக்கு. அதைத்தேடி எடுத்துக்கொள்'' என்று ஒரு கிழவி வந்து சொன்னார்.

அதைக் கேட்டதும் அடித்துப்பிடித்து எழுந்தான் கஞ்சன். பகலில் தோண்டினால் பலர் கண்களில் பட்டுவிடும் என்பதால் இரவோடு இரவாக ஒரு விளக்கைக் கொளுத்தி வைத்துக் கொண்டு போய் மண்ணைத் தோண்ட ஆரம்பித்தான். அப்போது ஒரு நல்ல பாம்பு அவனைத் தீண்டியது. விஷம் ஏற ஆரம்பித்தது.

விஷக்கடி மந்திரவாதியிடம் ஓடினான் கஞ்சன். இவர் தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு மந்திரம் சொல்லியே நோயைக் குணமாக்குவார். பூரான் கடிக்கு ஐந்து ரூபாய், தேள் கடிக்கு பத்து ரூபாய், பாம்புக் கடிக்கு இருபத்து ஐந்து ரூபாய் என்று கட்டணம் வாங்குவார்.



அந்த நேரத்திலும் கஞ்சனது மூளை யோசித்தது. எந்தக் கடியாக இருந்தாலும் ஒரே மந்திரம்தானே சொல்லப் போகிறார். இதற்கு எதற்கு பாம்பு கடித்தது என்று சொல்லி இருபத்தைந்து ரூபாயை இழக்க வேண்டும் என்று நினைத்து பூரான் கடித்து விட்டது என்றான்.

வைத்தியர் பூரான் கடிக்கு மந்திரத்தைச் சொன்னார். ஆனால், விஷம் ஏறிக் கொண்டிருந்தது.

''வைத்தியரே எனக்குத் தேள்தான் கடித்தது. நான் தவறாகச் சொல்லி விட்டேன்'' என்றார்.

''அப்படியா எடு பத்து ரூபாயை'' என்றார்.

பணத்தைக் கொடுத்த பிறகு தேள்கடி மந்திரத்தைச் சொன்னார். இப்போதும் பலன் இல்லை. பயந்து போன கஞ்சன் ''ஒவ்வொன்றுக்கும் பா.. பாம்பு கடித்தது' என்றான். அவன் சொல்லி முடிப்பதற்குள் விஷம் தலைக்கு ஏறி அதே இடத்தில் உயிரை விட்டான் கஞ்சன்.

கஞ்சத்தனம் உயிரையே காவு வாங்கிவிட்டது.

வி.வி.செங்கல்வராய செட்டியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பரீட்சை நோக்கிலான பல்வேறு வினாக்களின் தொகுப்பு

## கணக்கீடு — பகுதி - I

**SPECIAL GUIDE FOR 2010 A/L COMMERCE STU-**

நேற்றைய (06.07.2010) தொடர்ச்சி.....

76. ஆரம்பப் பதிவேடுகளில் அல்லது பேரேட்டுக் கணக்குகளில் உண்மைப் பெறுமதியையும் விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பதியப்பட்ட பெறுமதியை,
   1) விடுபடு வழுக்கள் (Errors of Omission)
   2) ஈடுகட்டும் வழு (Compansating Error)
   3) செய்யப்படு வழுக்கள் (Errors Commission)
   4) கொள்கை வழுக்கள் (Errors of Principles) எனலாம்.

77. உரிமை மூலதனம் கணிக்கப்படும் முறை,
   1) எஞ்சிய இலாபம் + சொத்துக்கள்.
   2) சொத்துக்கள் - பொறுப்புக்கள்.
   3) இலாபம் + பொறுப்புக்கள்.
   4) இலாபம் + சொத்துக்கள்.

78. ஒரு வியாபாரத்தின் ஏனைய நாட்குறிப்புக்களுடன் காசேட்டை ஒப்புநோக்கும்போது காசேடு வேறுபடும் அம்சமாவது,
   1) வியாபாரம் ஒன்றைக்கொண்டு நடத்தும்போது காசேட்டில் பதியப்படும் காசும், நடவடிக்கைகளும் முக்கியம் என்பதாகும்.
   2) வியாபாரம் ஒன்றில் பெரும்பான்மையாக நடைபெறும் நடவடிக்கைகள் காசை அடிப்படையாகக் கொண்டது என்பதாகும்.
   3) காசுப் புத்தகமானது ஒரு தனித்துவமான நிதி முகாமையாளரின் கீழேயே பராமரிக்கப்படுகின்றது என்பதாகும்.
   4) இது ஒரு ஆரம்பக் குறிப்பேடாகவும் அதேவேளை ஒரு பேரேட்டுக் கணக்காகவும் தொழிற்படுகின்றது என்பதாகும்.

79. வியாபாரம் ஒன்றின் தொழிற்பாடு பெறுபேற்றினை (Operational Results) மதிப்பிடுவதற்கு நீங்கள் பயன்படுத்த வேண்டியது,
   1) கணக்கீட்டுக் காலத்துக்கான வருவாய் வருமானத்தையும் (Revenue Income) செலவீட்டினையும் மட்டுமே.
   2) காசு வரவுகள் மற்றும் கொடுப்பனவுகளை மட்டுமே.
   3) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மட்டுமே.
   4) இலாபநட்டக் கணக்கினது மீதிகளை

80. பெரியளவு வியாபார நிறுவனங்களுக்கு, சில்லறைக் காசேடு ஒன்றைப் பராமரிப்பதனால் பல நன்மைகள் உண்டு. சில்லறைக் காசேட்டிலிருந்து பேரேட்டுக்கு மாற்றும்போது அவற்றுள் என்ன நன்மை கிடைக்கிறது?
   1) அடிக்கடி ஏற்படும் வழுக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.
   2) வியாபாரத்திலுள்ள அனைத்துக் காசுக் கொடுப்பனவுகளையும் சில்லறைக் காசேட்டின் மூலமே மேற்கொள்ளலாம்.
   3) பேரேட்டிற்கான பெருமளவான பதிவுகளை சொற்பமாகக் குறைத்துக்கொள்ளலாம்.
   4) பகுப்பாய்வு நிரலில் காட்டப்படும் மொத்தத் தொகைகளிலிருந்து பேரேட்டுக்கு மொத்தங்களை மாற்றுவது இலகுவாக இருக்கும்.

81. கீழ்வரும் நடவடிக்கைகளிலிருந்து எதிர்த்தீர்வு விடயம் (Contra item) ஒன்றைத் தெரிவு செய்க.
   1) வாடிக்கையாளர் ஒருவரால் அனுப்பப்பட்ட காசோலை ஒன்று அவரால் மறுக்கப்படல்.
   2) அலுவலக நோக்கத்துக்காக வங்கியிலிருந்து மீட்கப்பட்ட பணம்.
   3) எவ்வித தரகும் இன்றி காசாக்கப்பட்ட ஒரு நண்பனின் காசோலை.
   4) கடன்பட்டோருக்கு அனுமதிக்கப்பட்ட கழிவும் கடன்கொடுத்தோரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கழிவும்.

82. ''வருமானச் செலவீட்டினை'' விளக்குவதற்கு மிகப்பொருத்தமான கூற்று,
   1) வியாபாரம் ஒன்று ஆரம்பிக்கும்போது நிகழும் செலவீடுகள்.
   2) நீண்டகாலப் பாவனைக்கான சொத்துக்களின் கொள்வனவுக்காக நிகழும் செலவீடுகள்.
   3) வருமானம் உழைக்கும் எண்ணத்துடன் நாளாந்தம் நடைபெறும் வியாபாரத்தைக் கொண்டு நடத்துவதற்காக நிகழும் செலவீடுகள்.
   4) வியாபாரம் ஒன்றின் தாபன ரீதி, நிர்வாக ரீதி மற்றும் ஏனைய செலவீடுகள்.

83. வியாபாரம் ஒன்று ரூபா 75,000இற்குப் பொருட்களைக் கடனாகக் கொள்வனவு செய்தது. பின்வருவனவற்றுள் இருப்புக்கள் மற்றும் தேறிய இலாபம் மீது இந்த நடவடிக்கையின் தாக்கத்தினைச் சரியாக விளக்குகின்ற கூற்று எது?
   1) இருப்பு ரூபா 75,000 இனால் அதிகரிப்பதுடன் தேறிய இலாபத்தில் எவ்வித மாற்றமும் காணப்படவில்லை.
   2) கொள்வனவு ரூபா 75,000 இனால் அதிகரிப்பதுடன் தேறிய இலாபத்தில் ஒரு மாற்றமும் காணப்படுகிறது.
   3) இருப்பு ரூபா 75,000 இனால் அதிகரிப்பதுடன் தேறிய இலாபமும் ரூபா 75,000 இனால் அதிகரிக்கின்றது.
   4) இருப்பு ரூபா 75,000 இனால் அதிகரிப்பதுடன் தேறிய இலாபம் ரூபா 75,000 இனால் குறைகின்றது.

84. வங்கியாளர் ஒருவர், நிறுவனம் ஒன்று தன்னிடம் பெற்றுக்கொண்ட வங்கிக்கடன் மீதான வட்டியைக் காலாண்டுக்கு ஒரு தடவை காசோலை மூலம் செலுத்துவதற்கு அனுமதியளித்தார். வட்டிக் கொடுப்பனவைப் பதிவதற்கான ஆரம்ப பதிவேடு,
   1) பொது நாளேடு.
   2) காசேடு.
   3) கொள்வனவு நாளேடு.
   4) சில்லறைக் காசேடு.

85. கீழ்வருவனவற்றிலிருந்து பொது நாளேட்டில் பதியப்படுவதற்கான நடவடிக்கையை தெரிவு செய்க.
   1) சாகார விடமிருந்து உட்திரும்பியவை ரூபா 1,200
   2) அலுவலக பாவனைக்காக கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்கள் ரூபா 4,000
   3) விற்பனை செய்யும் எண்ணத்துடன் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் ரூபா 6,000
   4) செலுத்தப்படவேண்டிய மின்சாரக்கட்டணம் ரூபா 400இன் கொடுப்பனவு.

86. நடவடிக்கை ஒன்றின் விளைவாக ''வருமானம் அதிகரிப்பதுடன் சொத்துக்களும் அதிகரிக்கின்றன'' இக்கூற்றுக்குப் பொருத்தமான நடவடிக்கையினைத் தேர்ந்தெடுக்குக.
   1) பெற்றுக்கொண்ட கழிவு.
   2) கடன் கொள்வனவுகள்.
   3) காசு விற்பனைகள்.
   4) நண்பர் ஒருவருக்கு வழங்கப்பட்ட கடன் மீது பெற்றுக்கொண்ட வட்டி.

87. கணக்கீட்டுக் காலப்பகுதி ஒன்றின் முடிவிலுள்ள வியாபார இருப்புக் கணக்குக்குரிய இரட்டைப் பதிவு எது?
   1) இருப்புக் க/கு செலவு வியாபாரக் க/கு வரவு.
   2) இருப்புக் க/கு வரவு வியாபாரக் க/கு செலவு.
   3) கொள்வனவுகள் க/கு வரவு இருப்புக் க/கு செலவு.
   4) இருப்புக் க/கு வர்வு கொள்வனவுக் க/கு செலவு.

88. பொருள் விற்பனையிலீடுபட்டுள்ள வியாபார நிறுவனம் ஒன்றினது பெறுபேற்றினைப் (இலாபம்) பெறுவதற்கான விற்பனைக் கிரயத்தினைக் கணிப்பதற்கு மிகப்பொருத்தமான கூற்று.
   1) ஆரம்ப இருப்பு + (கொள்வனவு - வெளித்திரும்பல்) + உட்சுமை - இறுதி இருப்பு.
   2) ஆரம்ப இருப்பு - எடுப்பனவுகள் + கொள்வனவுகள் - உட்திரும்பல்கள் - இறுதி இருப்பு.
   3) ஆரம்ப இருப்பு + (வெளித்திரும்பல் - உட்திரும்பல்கள்) + கொள்வனவுகள் - இறுதி இருப்பு.
   4) ஆரம்ப இருப்பு + (வெளித்திரும்பல் + எடுப்பனவுகள்) + கொள்வனவுகள் - இறுதி இருப்பு.

89. வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினை விளக்குவதற்கு மிகப்பொருத்தமான கூற்று,
   1) குறித்த வங்கியினால் அனுப்பப்படும் மாதாந்த வங்கிக்கூற்றின் பகுப்பாய்வு.
   2) வியாபார நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் வைக்கப்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறிவது.
   3) ஏன் காசேட்டிலுள்ள வங்கி நிரலின் மீதி, வங்கிக்கூற்று மீதியுடன் ஒத்துப் போகவில்லை என்பதைக் கண்டறிவதற்குத் தயாரிக்கப்படும் ஒரு கூற்று.
   4) காசேட்டில் பதியப்பட்டிராத நடவடிக்கைகளைப் பதிந்துகொள்வதற்காக வங்கியாளரால் அனுப்பிவைக்கப்படும் ஒரு கூற்று.

90. பின்வருவனவற்றிலிருந்து இருப்பினும், தேறிய இலாபத்திலும் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தும் நடவடிக்கையினைத் தெரிவு செய்க.
   1) [illegible]முதனு அ[illegible].கோ.வடமிருந்து ரூபா 15,000 இற்கு கடன் கொள்வனவுகள்.
   2) சொந்தப் பாவனைக்காக உரிமையாளர் எடுத்துக்கொண்ட ரூபா 1,500 பெறுமதியுடைய பொருட்கள்.
   3) சொந்தத் தொலைபேசிக் கட்டணத்தைத் தீர்த்துவைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட ரூபா 1,500
   4) ரூபா 1,500 கிரயமுடைய பொருட்கள் ரூபா 1,800 இற்கு கடனாக விற்பனை செய்யப்பட்டன.

91. வியாபாரம் ஒன்றில் முதன்முதலாக ஐயக்கடன் ஒதுக்கக் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்படும் போது, அதற்கான நாட்குறிப்புப் பதிவு,
   1) ஐயக் கடன்களுக்கான ஒதுக்கக் கணக்கு வரவு, ஐயக்கடன் கணக்கு செலவு.
   2) இலாப நட்டக்கணக்கு வரவு, ஐயக் கடன்களுக்கான ஒதுக்கக் கணக்கு செலவு.
   3) ஐயக்கடன் கணக்கு வரவு, ஐயக்கடன்களுக்கான ஒதுக்கக் கணக்கு செலவு.
   4) ஐயக்கடன் கணக்கு வரவு, இலாபநட்டக் கணக்கு செலவு.

92. வியாபாரம் ஒன்றின் கடன்பட்டோர் மீதிகளாக, சரத் ரூபா 5,000, அமீன் ரூபா 1,200, குமார் ரூபா 4,500 என்பன காணப்பட்டன. குமார் இறந்துவிட்டார். வியாபாரமானது அவரிடமிருந்து வரவேண்டிய தொகையை அறவிடமுடியாக்கடனாகப் பதிவழித்துவிடத் தீர்மானித்தது. அமீர், கொடுக்க வேண்டிய ஒவ்வொரு ரூபாவுக்குமாக 30 சதத்தைக் கொடுத்து கடனைச் சரிசெய்துகொள்வதற்கு உடன்பட்டார். மேற்படி தரவுகளை அடிப்படையாகக்கொண்டு அறவிடமுடியாக்கடனைப் பதிவழிப்பதற்காக பேரேட்டில் காணப்படும் சரியான அறவிடமுடியாகக்கடன் கணக்கு,

1) அறவிடமுடியாக் கடன் கணக்கு

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| குமார் | 4,500 | இ.ந.கணக்கு | 5,340 |
| அமீர் | 840 | | |
| | 5,340 | | 5,340 |

2) அறவிடமுடியாக்கடன் கணக்கு

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| குமார் | 4,500 | இ.ந.கணக்கு | 4,860 |
| அமீர் | 360 | | |
| | 4,860 | | 4,860 |

3) அறவிடமுடியாக் கடன் கணக்கு

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| அமீர் | 1,200 | இ.ந.கணக்கு | 5,700 |
| குமார் | 4,500 | | |
| | 5,700 | | 5,700 |

4) அறவிடமுடியாக்கடன் கணக்கு

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| குமார் | 4,500 | இ.ந.கணக்கு | 10,700 |
| அமீர் | 1,200 | | |
| சரத் | 5,000 | | |
| | 10,700 | | 10,700 |

93. வியாபார நிறுவனம் ஒன்றின் கட்டடத்தின் ஒரு பகுதி 2001 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து மாதாந்த வாடகையாக ரூபா 2,000இற்கு வாடகைக்கு விடப்படுகிறது. 2001 டிசம்பர் 31ஆம் திகதி, இறுதிக் கணக்குகள் தயாரிக்கும்போது பதிந்துகொள்வதற்கான பொருத்தமான ரூபா 20,000 ஐ மட்டுமே பெற்றுக்கொண்டுள்ளது. குறித்த செம்மையாக்கலை பதிந்துகொள்வதற்கான பொருத்தமான பொது நாட்குறிப்புப் பதிவுகள்,
   1) பெற்ற வாடகை க/கு வரவு 24,000/=, வாடகை வருமானக் க/கு 24,000/=
   2) பெறவேண்டிய வாடகைக் க/கு வரவு 4,000/=, வாடகை வருமானக் க/கு 4,000/=
   3) வாடகைக் க/கு வரவு 2,000/=, பெற்ற வாடகைக் க/கு 2,000/=
   4) வாடகைக் க/கு வரவு 20,000/=, இலாபநட்டக் க/கு 20,000/=

94. 2001ஆம் ஆண்டுக்கான இறைகள் ரூபா 16,000 ஆகும். இத்தொகை காலாண்டு ரீதியாக செலுத்தப்படவேண்டும். கொடுப்பனவு விவரம் கீழே காணப்படுகிறது.

| தொகை | கொடுக்கவேண்டிய திகதி | கொடுத்த திகதி |
|---|---|---|
| ரூபா 4,000 | 2001.03.31 | 2001.03.31 |
| ரூபா 4,000 | 2001.06.30 | 2001.07.02 |
| ரூபா 4,000 | 2001.09.30 | 2001.10.04 |
| ரூபா 4,000 | 2001.12.31 | 2001.01.16 |

விவரங்களிலிருந்து சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
   1) இறைகள் ரூபா 12,000, இலாபநட்டக்கணக்கு மாற்றப்படவேண்டும்.
   2) 2001ஆம் ஆண்டுக்குரிய பொருத்தமான இறைத்தொகை குறித்த வருடத்துக்குள்ளேயே செலுத்தப்பட வேண்டும்.
   3) ரூபா 4,000 முன்னரே செலுத்தப்பட்ட இறைகளாகும்.
   4) 2001ஆம் ஆண்டுக்கு செலுத்தப்படவேண்டிய இறைகள் ரூபா 4,000

95. மதுரா வியாபாரிகளது வாடகை வருமான விவரம் கீழே காட்டப்படுகிறது. 31.12.2001இல் முடிவடைந்த வருடத்துக்கான வாடகை வருமானம் ரூபா 24,000 ஆக இருக்கவேண்டும். பெற்றுக் கொள்ளப்பட்ட வாடகை பின்வருமாறு:-

   03.01.2001 பெற்றுக்கொள்ளப்பட்டது ரூபா 6,000
   02.04.2001 பெற்றுக்கொள்ளப்பட்டது ரூபா 6,000
   30.06.2001 பெற்றுக்கொள்ளப்பட்டது ரூபா 6,000
   04.10.2001 பெற்றுக்கொள்ளப்பட்டது ரூபா 12,000

பின்வருவனவற்றுள் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
   1) 2001ஆம் ஆண்டுக்கான வாடகை வருமானத்தைக் கணிப்பிடும்போது நான்கு படிமுறைகளுக்குமான மொத்த பெறுவனவுகளும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.
   2) 2001ஆம் ஆண்டு காலத்தின்போது முற்பணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை ரூபா 6,000 ஆகும்.
   3) 2001ஆம் ஆண்டுக்கான செல்மதியான வாடகை ரூபா 6,000 ஆகும்.
   4) இலாபநட்டக் கணக்குக்கு வாடகையாக செலவு வைக்கப்படவேண்டிய தொகை ரூபா 30,000 ஆகும்.

96. இயந்திர நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 100,000 இயந்திரங்களில், இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்தமைக்காக இன்னும் ரூபா 20,000 செலுத்தப்படவேண்டியுள்ளது. இயந்திரத்தின் பயனுறு வாழ்காலம் 10 வருடங்களாகும். இதன் எஞ்சிய (Residual) பெறுமதி ரூபா 10,000 ஆகும். நேர் கோட்டுமுறையை அடிப்படையாகக்கொண்ட பெறுமானத் தேய்வினைக் கணிப்பிடுவதற்கான சரியான சூத்திரம்:
   1) 120,000 - 10,000 / 10
   2) 100,000 - 20,000 / 10
   3) 100,000 - 10,000 / 10
   4) 130,000 / 10

ஆசிரியர்: K.Masilan, B.Com (Hons), H.N.D.A.PGDE,
St.Anne's B.M.V. T.P.No- 0777286098

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. 01.01.1999இல் ரூபா 100,000இற்கு இயந்திரம் ஒன்று வாங்கப்பட்டது. பெறுமானத் தேய்வு வருடாந்தம் 20%த்தில் கழிக்கப்படுகின்றது. முதல் மூன்று வருடத்துக்கு பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படுவதற்கு ஒடுங்கு மீதி முறை பயன்படுத்தப்படுமாயின் கணிப்பிடப்பட்ட சரியான தொகையானது:

| | ஆண்டு-1 | ஆண்டு-2 | ஆண்டு-3 |
|---|---|---|---|
| 1) | ரூபா 20,000 | ரூபா 16,000 | ரூபா 12,800 |
| 2) | ரூபா 2,000 | ரூபா 1,600 | ரூபா 1,280 |
| 3) | ரூபா 20,000 | ரூபா 40,000 | ரூபா 60,000 |
| 4) | ரூபா 20,000 | ரூபா 16,000 | ரூபா 12,000 |

98. முதலீடுகள் மீதான வரவேண்டிய வட்டியைப் பதிந்துகொள்வதற்கு அவசியமான இரட்டைப் பதிவு,
1) காசுக் க/கு வரவு, மூதலீடுகள் மீதான வரவேண்டிய வட்டிக் க/கு செலவு.
2) முதலீடுகள் மீதான வரவேண்டிய வட்டிக் க/கு வரவு முதலீட்டு வட்டிக் க/கு செலவு.
3) முதலீடுகள் மீதான வரவேண்டிய வட்டிக் க/கு வரவு, முதலீட்டுக் க/கு செலவு.
4) முதலீடுகள் மீதான வட்டிக் க/கு வரவு வரவேண்டிய முதலீட்டு வட்டிக் க/கு செலவு.

* 2002 மே மாதத்துக்காக வரை.ரெலிகொம் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொ [illegible] பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டியல கீழ்வரும் தகவல்களை உள்ளடக்கியுள்ளது. இத்தகவல்களை அடிப்படையாகக்கொண்டு வினாக்கள் 99, 100 ஆகியவற்றுக்கு விடையளிக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

தேசிய அழைப்புக்கள் ரூ. 1,219.00
சர்வதேச அழைப்புக்கள் ரூ. 100.00
இயக்குநர் உதவியுடனான அழைப்புக்கள் ரூ. 00.00
மாதாந்த வாடகை ரூ. 200.00
தேசிய பாதுகாப்பு வரி ரூ. 177.38
மானியில் ஓடிய அலகுகள் - 594
முன்னைய மானி வாசிப்பு- 1,178
மீதி கீழ் கொண்டுவந்தது ரூ. 2,881.42
2002 ஏப்ரலுக்கான நிலுவை ரூ. 1443.84
2002 மார்ச்சுக்கான நிலுவை ரூ. 1,437.58

99. மே மாதத்துக்கான வரை. ரெலிகொம் நிறுவனத்துக்குச் செலுத்தவேண்டிய தொகை,
1) ரூ. 4,688.77 2) ரூ. 4,588.77
3) ரூ. 2,881.42 4) ரூ. 1,807.35

100. நிறுவனமானது 2002 ஏப்ரல் 30இல் ஒரு ஐந்தொகையைத் தயாரிக்குமாயின் அத்தேதிக்குரிய சென்மதி செலவீடுகள்,
1) தொலைபேசிக் கட்டணம் கொடுபட வேண்டியது ரூ. 1,443.84
2) தொலைபேசிக் கட்டணம் கொடுபட வேண்டியது ரூ. 1,437.58
3) தொலைபேசிக் கட்டணம் கொடுபட வேண்டியது ரூ. 2,881.42
4) சென்மதி செலவீடுகள் இல்லை.

101. வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்காக நிகழும் நிதிச்செலவீடுகள், வருமானத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட வேண்டியது,
1) வியாபாரக் க/கிலாகும். 2) இலாபநட்டக் க/கிலாகும்.
3) உற்பத்திக் க/கிலாகும். 4) ஐந்தொகையிலாகும்.

102. வியாபாரம் ஒன்றின் தேறிய இலாபத்தை அல்லது தேறிய நட்டத்தை கணிப்பிடும்போது பின்வருவனவற்றுள் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாத விடயம்,
1) வட்டி வருமானம். 2) நிலையான சொத்து விற்பனையிலான இலாபம்.
3) இன்னொரு முதலீட்டில் பயன்படுத்தப்பட்ட மேலதிகக் காசிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம்.
4) பங்குகளை வழங்குவதன் மூலம் பெற்றுக்கொண்ட இலாபம்.

* கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி வினா இலக்கங்கள் 103,104 என்பனவற்றுக்கு விடையளிக்குக.

விளம்பரங்களை அச்சிடுவதில் ஈடுபட்டுள்ள கம்பனி ஒன்று ரூபா 50,000 இற்கான விற்பனை ஒப்பந்தம் ஒன்றின் செயற்பாட்டினை அடுத்த வருடத்திலிருந்து ஆரம்பிக்கின்றது. குறித்த தினத்தில் கம்பனி ஒரு முற்பணக் கொடுப்பனவாக ரூபா 20,000 ஐயும் பெற்றுக்கொண்டுள்ளது. இந்த நடவடிக்கை தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளும்போது கம்பனி முழுப்பெறுமதியான ரூபா 50,000 ஐ விற்பனைக்கணக்கில் செலவிலும், காசுக்கணக்கில் ரூபா 20,000 ஐ வரவிலும், கடன்பட்டோர் கணக்கில் ரூபா 30,000 ஐ வரவிலும் வைக்கின்றது.

103. மேற்படி தவறை பொது நாட்குறிப்பேட்டில் திருத்துவதற்கான பதிவு,
1) விற்பனைக் க/கு வரவு ரூபா 50,000, காசேடு ரூபா 50,000.
2) விற்பனைக் க/கு வரவு ரூபா 50,000, கடன்பட்டோர் க/கு ரூபா 30,000, முற்பணக் க/கு ரூபா 20,000.
3) முற்பணக் க/கு வரவு ரூபா 10,000, விற்பனைக் க/கு ரூபா 10,000.
4) காசேடு க/கு வரவு ரூபா 20,000, முற்பணமாகப் பெற்றுக்கொண்ட வருமானக் க/கு ரூபா 20,000.

104. மேற்படி தவறின் திருத்தமானது எந்தக் கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக வெளிப்படுத்தப்பட்டது?
சொத்துக்கள் = பொறுப்புக்கள் + உரிமை
1) (30,000) = 20,000 + (50,000) 2) (20,000) = 50,000 + (30,000)
3) 50,000 = - + 50,000 4) 20,000 = 30,000 + 10,000

105. ''பெறுமானத்தேய்வின்'' கணக்கீட்டு முறையினை விளக்குவதற்குரிய கூற்று,
1) சொத்து ஒன்றின் பயனுறு பாவனைக்காலத்தினுள் அச்சொத்தின் தேய்ந்து போகும் பெறுமதியினது பரம்பல்.
2) பெறுமானத்தேய்வு என்பது சொத்து ஒன்றின் தேய்ந்து போகக்கூடிய பெறுமதியின் கணிப்பீடு என்பதுடன் அதனது, பயனுறு பாவனைக் காலப்பகுதியினுள் அதனைப் பகிர்ந்தளிப்பதும், குறித்த காலப்பகுதிக்கான இலாபத்துக்கெதிராக அப்பெறுமானத்தேய்வினை அறவிடுதலுமாகும்.
3) பயன்பாடு காலப்பகுதியின்போது, சொத்தின் தேய்ந்து போகக்கூடிய பெறுமதியின் பயனுறு பாவனைக்காலத்தை சமமான விகிதத்தில் பரவச் செய்தலாகும்.
4) பயன்பாடற்றுப்போதல், பொருளாதாரக்காரணிகள் மற்றும் தேய்தல், அழிதல் காரணமாக ஒரு சொத்தின் பெறுமதி குறைந்துசெல்லல்.

106. கணக்கீட்டில் ''ஏற்பாடு'' என்பதன் பொருள்,
1) தேறிய இலாபத்தைச் சரியாகக் கண்டுகொள்வதற்காக சொத்து ஒன்றுக்கு எதிராக குறித்த ஒரு வீதத்தினைக் கணிப்பிடும் ஒரு செம்மையாக்கலாகும்.
2) நிதிக் கூற்றினைத் தயாரிப்பதிலுள்ள அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன், பெறுமானத் தேய்வு போன்றவற்றுக்கான ஒரு செம்மையாக்கல்.
3) சொத்து ஒன்றின் குறைந்து செல்லும் பெறுமதிக்கு எதிராக, ஒரு ஏற்பாட்டினை உருவாக்குவதற்காக கணக்காளரால் எடுக்கப்படும் ஒரு தீர்மானம்.
4) தேறிய இலாபத்தினைக் கணிப்பிடுவதற்கு முன்னதாக எதேச்சையாக ஏற்படும் பொறுப்புக்கள் அல்லது மதிப்பிடப்பட்ட நட்டம் என்பவற்றுக்கு எதிராக இலாபத்திலிருந்து கழிக்கப்படும் தொகை.

107. வியாபாரம் ஒன்றின் மூலதனத்திலான குறைவினைப் பாதிக்கும் நடவடிக்கையானது,
1) அலுவலக தளபாடங்களின் கொள்வனவுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 500
2) கடன்கொடுத்தோர் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட கழிவு ரூபா 75
3) தீர்க்கப்பட்ட வங்கி ஒன்றின் மேலதிகப்பற்று ரூபா 1050
4) வியாபாரத்திலிருந்து ரூபா 1500 பெறுமதியான பொருட்கள் சொந்தப் பாவனைக்காக எடுக்கப்பட்டமை.

108. உற்பத்தி கணக்குத் தயாரிக்கப்படுவது,
1) விற்கப்பட்ட பொருட்களின் கிரயத்தைக் கணிப்பிடுவதற்கு.
2) குறித்த காலப்பகுதியில் முடிவடைந்த பொருட்களினதும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைப்பொருட்களினதும் கிரயத்தினைக் கணிப்பிடுவதற்கு.
3) குறித்த வருடகாலப் பகுதியில் செலுத்தப்பட்ட உற்பத்திக்கிரயத்தைக் கணிப்பிடுவதற்கு
4) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களது மேந்தலைக் கிரயத்தைக் கணிப்பிடுவதற்கு.

109. ஆரம்பக்கிரயத் தொகையின் கருத்தைக் கொடுக்கும் சொற்கூட்டத்தினைத் தெரிவு செய்க.
1) தொழிற்சாலைக்கிரயம் + மேந்தலைக் கிரயம் + உற்பத்திக் கிரயம்.
2) மேந்தலைக் கிரயம் + உற்பத்திக்கிரயம் + திரவியக்கிரயம் (Material Cost)
3) நேர் திரவியக்கிரயம் + நேர் ஊழியக்கிரயம் + ஏனைய நேர் செலவீடுகள்.
4) நேர் திரவியக்கிரயம் + நேர் ஊழியக்கிரயம் + மேந்தலைக்கிரயம்.

110. தொழிற்சாலை மேந்தலைக்கிரயம் உள்ளடக்கியிருப்பது,
1) நேரில் திரவியங்களை (Indirect Material)
2) நேர் திரவியங்களையும் நேரில் திரவியங்களையும்.
3) நேரில் திரவியங்களையும் நேர் ஊழியத்தையும்.
4) நேர் கிரயங்கள் தவிர்ந்த எல்லா உற்பத்திக்கிரயங்களையும்.

111. வியாபாரம் உரியதான, கொடுக்கப்பட்ட கூற்றுக்களிலிருந்து பிழையான கூற்றினைத் தெரிவு செய்க.
1) செலவீடுகள், சொத்துக்கள் மற்றும் உரிமைகள் (Equities)
2) பொறுப்புக்கள், வருமானம் மற்றும் உரிமைகள்.
3) வருமானம், செலவீடுகள் மற்றும் உரிமைகள்.
4) சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமைகள்.

112. ஐந்தொகைக்கு உரியதான, கொடுக்கப்பட்ட கூற்றுக்களிலிருந்து பிழையான கூற்றினைத் தெரிவு செய்க.
1) கொடுக்கப்பட்ட நாள் ஒன்றில் வியாபார நிறுவனம் ஒன்றினது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களினது பெறுமதியை ஐந்தொகையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
2) குறித்த ஒரு தினத்தில் விளம்பரம் ஒன்றின் நிதி நிலைமையை இது பிரதிபலிக்கின்றது.
3) வியாபாரம் ஒன்றை முகாமைத்துவம் செய்யும்போது முகாமையாளர்கள் அவசியமான கணக்கீட்டுத் தகவல்களை ஒரு ஐந்தொகையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4) ஐந்தொகையானது ஒரு நிதிவருட முடிவின்போது மட்டுமே தயாரிக்கப்பட முடியும்.

113. ஐந்தொகை ஒன்றுக்கான வரைவிலக்கணத்துக்கு மிக அதிக முக்கியத்துவம் கொடுக்கும் மிகப் பொருத்தமான கூற்று,
1) ஐந்தொகை என்பது இறுதிக்கணக்குகளின் தொகுதியில் உள்ளடக்கப்படும் ஒரு கூற்று ஆகும். இது நிலைக்குத்தாகவோ அன்றி கிடையாகவோ தயாரிக்கப்படும்.
2) ஐந்தொகை என்பது இலாபநட்டக் கணக்கைப்போன்ற ஒரு கணக்கல்ல.
3) ஐந்தொகையானது வியாபார இலாபநட்டக்கணக்குகள் தயாரிக்கப்பட்ட பின்னர் பேரேட்டில் எஞ்சியுள்ள மீதிகளைக்கொண்டு தயாரிக்கப்படும் ஒரு வியாபாரத்தின் நிதி நிலைமைகளின் உண்மையான மற்றும் தெளிவான பார்வையைத்தரும் ஒரு கூற்றாகும்.
4) இது வியாபாரம் ஒன்றின் நிதி நிலைமையைக் காட்டுவதற்கான நியமங்கள் மற்றும் எடுகோள்களுக்கு ஏற்றவாறாக சட்டரீதியாகத் தயாரிக்கப்பட்ட ஒரு கூற்றாகும்.

* பின்வரும் கூற்றினைப் பயன்படுத்தி வினாக்கள் 114, 115 ஆகியவற்றுக்கு விடையளிக்குக. விளையாட்டுக்கழகம் ஒன்றில் 50 அங்கத்தவர்கள் உள்ளனர். வருடாந்த சந்தாக்கட்டணம் ரூபா 200 ஆகும். பெற்றுக்கொள்ளப்பட்ட சந்தாப்பணம் ரூபா 10,000 காசுக்கணக்கில் வரவு வைக்கப்பட்டது. செயலாளர் கடந்த வருடத்திற்குரிய சந்தா ரூபா 1,000 ஐயும் அடுத்த வருடத்துக்குரிய சந்தா ரூபா 2,000 ஐயும் தான் பெற்றுக்கொண்டதாக அறிவிக்கின்றார். இத்தொகைகளும் பெற்றுக்கொள்ளப்பட்ட சந்தாக் (கணக்கு)களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

114. வருமான செலவுக்கணக்கில் செலவு வைக்கப்படவேண்டிய தொகை,
1) ரூ.10,000 2) ரூ. 8,000
3) ரூ. 9,000 4) ரூ.13,000

115. சந்தாக்கணக்கில் செலவுப்பக்கத்தில் கீழ் கொண்டுவரப்பட்ட மீதி,
1) ரூ. 1,000 2) ரூ. 2,000
3) ரூ. 3,000 4) மீதி இல்லை.

116. வருமான செலவுக்கணக்கின் பொருளைத்தருகின்ற பொருத்தமான கூற்று,
1) வருடகாலத்தின்போது காசாகப் பெற்றுக்கொண்ட மற்றும் காசாகக் கொடுத்த எல்லாப் பதிவுகளினதும் ஒரு சுருக்கமாகும்.
2) அங்கத்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் ஒரு விவரணமாகும்.
3) இது அங்கத்தவர்களது கொடுப்பனவுகள் தொடர்பாக, ஒவ்வொரு வருட இறுதியிலும் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்படவேண்டிய ஒரு கட்டாயமான கூற்றாகும்.
4) இலாபம் உழைப்பதனை நோக்கமாகக் கொள்ளாமல் உருவாக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் நடவடிக்கைகளின் பெறுபேற்றினைக் கணிப்பதற்கு குறித்த ஒரு காலப்பகுதிக்காக தயாரிக்கப்படும் ஒரு கணக்கு ஆகும்.

117. கடன்பட்டோர் தொகை ரூபா 29,780 ஆகும். அறவிடமுடியாக்கடன் ரூபா 6,250 ஆகும். ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு 5% ஆயின், சரியான கணிப்பீட்டினைக்காட்டும் பிரிவினைத் தெரிவு செய்க.
1) 5/100 x (29,780 + 6,250) 2) [5/100 x 6,250] + 29,780
3) 5/100 x (29,780 - 6,250) 4) 29,780 - [5/100 x 6,250]

118. வியாபாரி ஒருவர் கிரயத்துடன் 25%த்தைக் கூட்டுவதன் மூலம் தனது இலாப எல்லையை அமைத்துக்கொள்கின்றார். விற்பனை மீதான அவரது இலாப வீதம்,
1) 5% 2) 20%
3) 25% 4) 40%

119. இந்த சூத்திரமானது வியாபாரம் ஒன்றில் பிரயோகிக்கப்படுவதன் நோக்கம்,
1) இயக்கப் பெறுபேற்றின் (Operating Results) அனுகூலத்தை மதிப்பிடுவதற்காக.
2) வருமானவரி செலுத்துவதற்காக.
3) இலாபநட்டக்கணக்கு மற்றும் ஐந்தொகை என்பவற்றிடையேயான உள்ளார்ந்த தொடர்பினைத் தெரிந்துகொள்வதற்காக.
4) இணைப்பு விகிதத்தினைக் (Gearing Ratio) கணிப்பதற்காக.

* பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினா 120, 121 என்பவற்றுக்கு விடையளிக்குக.
கொள்வனவு - ரூபா 2,000
விற்பனைச் சுழற்சி காசு - ரூபா 20,000
கடன் - ரூபா 10,000
ஆரம்ப இருப்பு - ரூபா 6,000
உட்கொண்டுவரல் செலவு - ரூபா 400
இறுதியிருப்பு - ரூபா 4,000

120. விற்பனைக்கிரயமானது,
1) ரூபா 18,400 2) ரூபா 14,400
3) ரூபா 12,400 4) ரூபா 18,000

121. மொத்தலாபமானது,
1) ரூபா 7,600 2) ரூபா 8,000
3) ரூபா 11,600 4) ரூபா 15,600

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்


நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். பெரிய மனிதர்களின் உதவிகளை பெறலாம். கலைஞர்கள் எதிர் பார்த்த வாய்ப்புகளை பெற்று மகிழ்ச்சியடைவர். உங்களின் வேலை ஒன்றை சக ஊழியர்கள் மூலம் முடிப்பீர்கள். சந்தோஷமான அனுபவங்களால் சங்கடங்களை மறக்கும் நாள்.

### இடபம்

எதிர்பாராத செலவுகளை சந்திக்கலாம். உடன் பிறப்புக்கள் வழியில் உருவான தொல்லைகள் குறையும். யாருக்கும் [illegible] அவசரப்பட்டு வாக்குக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். பெண்கள் கணவரின் அன்பை பெறுவர். பிள்ளைகளின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகச் சொல்வீர்கள்.

### மிதுனம்

லாப நஷ்டக் கணக்குப் பார்த்து சில விடயங்களில் ஈடுபடுவீர்கள். உறவினர்களின் வேண்டுகோள்களை நிறை வேற்றி வைப்பீர்கள். நிலம், பூமி வாங்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறலாம்.

### கடகம்

உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். கடன் மிகுதி, கட்டண மிகுதி ஒன்றை செலுத்துவீர்கள். பல நாள்களுக்கு முன் சந்திக்க நினைத்த ஒருவரை இன்று திடீரென சந்திக்கலாம். தொழில் ரீதியான அலைச்சல்களுக்கு ஆள்படலாம்.

### சிங்கம்

திட்டமிட்ட வேலை ஒன்றை திடீரென மாற்றி அமைக்கலாம். சக ஊழியர்களிடம் உங்களின் பெருமையான செயற்பாடுகளைப் பற்றி பேசுவீர்கள். வாக்குக் கொடுத்த உறவினர்கள் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

### கன்னி

சிலர் உங்களிடம் கோபமாக நடந்து கொள்ளலாம். கடுமையாக முயற்சித்தும் சில காரியங்கள் முடியாமல் போகலாம். மற்றவர்கள் விவகாரங்களில் தலையிடுவதால், மன உளைச்சல்களுக்கு ஆளாகலாம். உல்லாசமாய்ப் பேசி சில விடயங்களில் வம்பல் மாட்டிக் கொள்வீர்கள். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருந்துவீர்கள்.

### துலாம்

காலை முதல் மாலை வரை பரபரப்பாகச் செயற்படும் நாள். வெளியூர் பயணங்களின் போது, பால்ய நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம்.

உங்களின் சில வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைப்பீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எதிர்பாராத பணவரவு களைப் பெறலாம்.

### விருச்சிகம்

எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கும். உறவினர்களுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் கூடும். தேக ஆரோக்கிய [illegible] விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். ஆதாயகரமான நாள்.

### தனுசு

ஏமாற்றங்களைத் தவிர்க்க எச்சரிக்கை அவசியம். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களை பெறலாம். உங்களிடமிருக்கும் பணத்தை மற்றவர்களுக்குக் கொடுத்து விட்டு நீங்கள் சிலரிடம் உதவி கேட்கலாம். வயிறு, வாயு உபாதைகளால் அவதிப்படலாம். ஆலய வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். மறதியால் அவதியுண்டு.

### மகரம்

மன உறுதியை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். உங்களிடம் உதவிகள் பெற்ற உறவினர்களே உதாசீனமாக நடந்து கொள்ளலாம். மிகுதி பாக்கி ஒன்றை கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். அரசு காரியங்கள் தடையின்றி முடியும்.

### கும்பம்

மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். சிலரை வெறுப்பேற்றும் வகையில் பேசி, அதில் இன்பம் காண்பீர்கள். பல நாள்களாக செல்லாத உறவினர் ஒருவரின் வீட்டிற்கு செல்லலாம். எதிர்பாராத ஒரு வேலையால் பணிபுரிவோர் திடீர் விடுமுறை எடுக்கலாம்.

### மீனம்

சில வேலைகளை செய்ய மறப்பதன் மூலம் சிரமங்கள், தண்டச் செலவுகளுக்கு ஆள்படலாம். பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். பல நாள்களாக செல்ல நினைத்த ஒரு இடத்திற்குச் செல்வீர்கள். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். சோர்வு, சோம்பல் அதிகரிக்கும் நாள். வாக்குவாதம் தவிர்க்கவும்.

---

# உலக வங்கிக்கு அடிபணிந்து தயாரிக்கப்பட்டதல்ல பட்ஜட்

## ஐ.தே.கவின் குற்றச்சாட்டுக்கு கெஹலிய பதில்

கொழும்பு, ஜூலை 7

எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவது போல அரசு உலக வங்கிக்கோ அல்லது சர்வதேச நாணய நிதியத்துக்கோ அடிபணிந்து வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்கவில்லை. மக்களைத் திசை திருப்பும் வகையில் ஐ.தே. கட்சியினர் விஷமப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தகவல்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று முன்தினம் குற்றம் சாட்டினார்.தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இந்த வரவு - செலவுத் திட்டம் 2010 ஆம் ஆண்டுக்கானது. தேர்தல்கள் காரணமாக உரிய நேரத்தில் முன் வைக்கவில்லை. 2010 ஆம் ஆண்டில் முன் வைக்கப்பட்ட குறை நிரப்பு பிரேரணைகளை முறைப்படுத்தவும் எஞ்சியுள்ள காலப் பகுதிக்குமாகவே இந்த வரவு - செலவுத் திட்டம் முன் வைக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி நாட்டின் பணவீக்கத்தைக் குறைக்க உதவியது. இதேவேளை, 7.5 வீத பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த ஐந்து வருடங்களில் தனிநபர் வருமானம் 2053 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. இது எமது பொருளாதார அபிவிருத்தியின் பலனாகும்.கல்வி, நீர்ப்பாசனம், சுகாதாரம் உட்பட இன்னும் பல அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதல்ல என அமைச்சர் விமல் வீரவன்ஸ உட்படப் பலர் விமர்சனம் செய்திருந்தனர். அவர்கள் வரவு - செலவுத்திட்டத்தை முறையாக வாசிக்கவில்லை என்றேஎண்ணுகிறேன்.

அனைத்து அமைச்சுகளுக்கும் தாம் போதுமான நிதியை ஒதுக்கியுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார். (சி)

---


# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

## கேள்வி அறிவித்தல்

### கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி - 07.07.2010-15.07.2010 பி.ப.2 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி - 16.07.2010 நண்பகல் 12 மணி வரை
கேள்வி திறந்து பார்க்கும் திகதி - 16.07.2010 பி.ப 1.30 மணி
கேள்விப் பத்திரம் வழங்கப்படும் இடம் - தலைமை அலுவலகம், சுன்னாகம்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 1.கொத்தியாலடி திண்மக் கழிவகற்றல் தொட்டியமைத்தல் | 19000.00 | 560.00 | M8/C9 |
| 2.கொத்தியாலடி உள்ளக வீதி திருத்தம் | 9000.00 | 560.00 | M9/C10 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட "இக்ராட்" தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

தேசத்தைக் கட்டியெழுப்பும் (NBT)வரியாக மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்துடன் மேலதிகமாக 3% அறிவிடப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்தின் மூலப்பிரதி "செயலாளர், வலிகாமம் தெற்குப் பிரதேசசபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும் அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப் பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி சு.முருகநேசன்
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேசபை,
சுன்னாகம்.
05.07.2010 [சி/568860]



# கண்ணீர் அஞ்சலி

## திருமதி விஸ்வநாதன் லட்சுமிஅம்மா

எமது நிர்வாக சபையின் பொருளாளரான
திரு.வி.சிவஞானசேகரம் அவர்களின் அன்புத் தாயார் திருமதி விஸ்வநாதன் லட்சுமி அம்மா 06.06.2010 அன்று இறைபதம் அடைந்தார். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது சபையின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்
வட இலங்கைச் சங்கீத சபை,
யாழ்ப்பாணம்.



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்:
10★01★1942
மறைவு:
07★06★2010

அமரர்
மயில்வாகனம்
**பரமேஸ்வரி**
(பாமா அக்கா)

பாசத்தின் ஊற்றாய் பண்பின் சிகரமாய் குடும்பத்தின் குலவிளக்காய் அன்புக்கோர் இலக்கணமாய் எமையெல்லாம் ஆதரித்து அரவணைத்து வளம் சேர்த்த எங்கள் அன்புத் தெய்வமே! குடும்பத்தின் மூத்த குலக்கொழுந்தே! உங்கள் மறைவால் நாம் திக்கற்றவர்களாகிவிட்டோம். உங்கள் ஆத்மா சாந்திபெற எங்கள் குலதெய்வம் புதரங்குளி வைரவரைப் பிரார்த்திக்கின்றோம்.


07.06.2010 திங்கட்கிழமையன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் மயில்வாகனம் பரமேஸ்வரி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசிவாயிலாகவும் கடித மூலமாகவும் ஆறுதல் கூறிய உள்நாட்டு, வெளிநாட்டு, உறவினர், நண்பர்களுக்கும் சகல வழிகளிலும் உதவிகள், ஒத்தாசைகள் புரிந்தோருக்கும் எமது குடும்ப வைத்தியர் Dr.இ.செல்வநாயகம் (கருணா கிளினிக்) அவர்களுக்கும் அன்னார் நோயுற்று யாழ்.போதனா வைத்தியசாலை இல.4 விடுதியில் சிகிச்சைபெற்றபோது அவரை அன்புடன் கவனித்த வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தேவாலய வீதி, சங்கானை. (சி-568764) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இதயத்துக்கு ஒவ்வாத உணவு வகைகள்

இதய நலம் பற்றிப் பேசும் போது, உடல் ஆரோக்கியத்தோடு மிக மிக நெருக்கமான தொடர்புடைய உணவுப் பழக்கம் பற்றியும் நாம் விரிவாகத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. நமது உடல் நலமும், மனநலமும் நாம் அன்றாடம் சாப்பிடும் உணவின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன. நாம் சாப்பிடும் உணவின் தன்மை மற்றும் அளவை அடிப்படையாகக் கொண்டுதான் நம்முடைய வாழ்க்கை அமைந்துள்ளது.

நாம் சாப்பிடும் உணவுப் பொருள்களை புரதம், கொழுப்புச்சத்து, உயிர்ச்சத்து, தாது உப்புகள் என பலவகைகளாகப்பிரிக்கலாம். இவை ஒவ்வொன்றைப் பற்றியும் இனி விளக்கமாகப் பார்க்கலாம். கொழுப்புச்சத்து என்பது நீரில் கரையும் இயல்புடையது. அதே சமயம் ஆல்கஹால், ஈதல் போன்றவற்றிலும் கரையக் கூடியது.

கொழுப்புச்சத்துகள்தான் நமது உடலுக்குத் தேவையான ஆற்றலை அளிக்கின்றன. எனவேதான் கொழுப்புச் சத்தை ஆற்றலின் பெட்டகம் என்று சொல்கிறார்கள். ஒரு கிராம் கொழுப்புச் சத்தானது 9 கலோரிகள் வெப்ப ஆற்றலைத் தருகிறது.

நமது ஒரு நாளைக்கான கொழுப்புச்சத்து தேவையானது நம் வயது, உடல் அமைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு கணக்கிடப்படுகிறது. தினசரி ஒரு தனி மனிதனுக்கான மொத்தக் கலோரிகள் தேவையில் 10 முதல் 15 சதவீதம், கொழுப்புச்சத்துகளில் இருந்து கிடைக்க வேண்டும். தனி மனிதனின் அன்றாட உணவில் கொலஸ்ட்ராலின் அளவு 150 மில்லி கிராமுக்கு மேல் கூடாமல் இருக்க வேண்டும்.

அளவுக்கு அதிகமாகக் கொழுப்புப் பொருள்களை நம் அன்றாட உணவில் சேர்ப்பதால் நமது இதயம் பாதிக்கப்படுவது பற்றியும் மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாவது பற்றியும் ஏற்கெனவே பார்த்தோம். குருதிக்குழாய்களில் கொழுப்புப் படிவங்கள் சேர்வதன் மூலமாக மூளைக்குப் போகும் இரத்தத்தின் அளவு குறைந்து ஸ்ட்ரோக் போன்ற ஆபத்தான பாதிப்புகளும் ஏற்படக்கூடும்.

கொழுப்பு வகை உணவுகளைத் தேர்ந்தெடுக்கும்போது மூன்று அம்சங்களைக் கவனத்தில் வைத்திருக்க வேண்டும். இந்த வகையான கொழுப்பு முதலில் தேவைதானா என்பதை யோசிக்க வேண்டும். நாம் சாப்பிடப்போகும் கொழுப்பின் தன்மையைப் பார்க்க வேண்டும். இறுதியாகக நாம் சாப்பிடப் போகும் கொழுப்பின் அளவைக் கவனிக்க வேண்டும். தினசரி உணவில் கொழுப்பு வகை உணவுகளைச் சேர்க்கும்போது, செறிவற்ற கொழுப்பையும், செறிவுற்ற கொழுப்பையும் 2: 1 பங்கு என்ற விகிதத்தில் பயன்படுத்துவது நல்லது.

அன்றாட உணவில் செறிவுற்ற கொழுப்பு அதிகம் உள்ள உணவு வகைகளான ஆட்டு இறைச்சி, மாட்டு இறைச்சி, பன்றி இறைச்சி, தேங்காய் எண்ணெய், வெண்ணெய், நெய், முட்டை மஞ்சள் கரு, பால், பால் சார்ந்த பொருள்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தும்போது உங்கள் இதய நலனைப் பாதிக்காத வகையில் மிகவும் குறைவான அளவில் சேர்த்துக் கொள்வது மிகவும் பாதுகாப்பானது.

தாவர எண்ணெய்களில் ஹைட்ரஜன் அணுக்களைச் செயற்கையாகச் செலுத்தி, அவற்றைச் செயற்கையாக உறையவைத்து உருவாக்கப்படும் கெட்டியான எண்ணெய் வகைதான் வனஸ்பதி. ஆனால் வனஸ்பதியை அதிகம் சேர்த்துக் கொள்வது நம் ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல.

எனவே உலகெங்கும் வனஸ்பதியைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகளை விளக்க ஒரு இயக்கத்தையே தொடங்கியுள்ளார்கள். இதய நலத்தைக் காக்க விரும்புபவர்களும், ஏற்கெனவே இதய நோய் உள்ளவர்களும், அன்றாட உணவில் டிரான்ஸ் கொழுப்பு வகையில் வருகிற வனஸ்பதியைப் பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்ப்பது இதயத்தக்கு நல்லது.★★★

# விண்டோஸ் 7: உலகில் அதிகமாகப் பயன்படுத்தும் இயங்குதளம்!



விண்டோஸ் 7 இயங்குதளம் கடந்த அக்டோபர் மாதம் 22 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்டது. விண்டோஸ் 7 வெளியிடப்பட்ட 6 மாதங்களில் உலகத்தில் கணனியில் பயன்படுத்தும் இயங்குதளமாக மாறியுள்ளதாக மைக்ரோசாப்ட் நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

இயங்குதள வரலாற்றில், விண்டோஸ் 7 தான் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்ட மற்றும் செய்யபட போகும் இயங்குதளமாக இருக்கும் என மைக்ரோசாப்ட் நிறுவனம் கருதுகிறது. பெரும்பாலான முன்னணி கணினி நிறுவனங்கள் விண்டோஸ் 7 ஐ தங்கள் கணனிகளுக்கு இயங்கு தளமாக்கத் திட்டமிட்டுள்ளனர். விண்டோஸ் 7 வேகமாக இயங்கும் தளமாக இருப்பதே இதன் வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கலாம்.★ *(நன்றி:-தொழில்நுட்ப இணையம்)*



# புன்னகைப் பூ

எனது அன்புக்குரியவளே...!
நட்பின் இலக்கணத்தை
எனக்கு உணரவைத்தவளே!
அன்பு கொள்ள
அளவு கோல்கள் இல்லை என
அடையாளம் காட்டியவளே...!

நான் நாஸ்திகம் பேசிய போது
கடவுளையே என் முன்
காட்டியவளே....!

துன்பம் என்ற கடலிலே
நான் மூழ்கிய போது - எனக்கு
துடுப்பாக இருந்தவளே...!


பீனிக்ஸ் பறவையின்
பரம்பரை நான்
எனக்கே....
துன்பம் என்ற சுமையிலிருந்து
உயிர்த்தெழும் இரகசியத்தை
உணரவைத்தவளே....!

என்னவளே....!
இந்த ஆத்மாத்தமான நட்பு
என் உயிருள்ள வரை
என் உயிரோடு உறவாட வேண்டும்

என்னோடு நீயிருந்தால் - அதுவே
என் வசந்த காலம்.
உனக்காக இந்த உலகையே
உயில் எழுதி வைக்கிறேன்
உன்னுடன் வாழ்ந்த காலங்களை
எனக்கு மீண்டும் தந்துவிடு.

த.தர்சினி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

# உலகின் மிகப்பெரிய டெலஸ்கோப்



சிலி நாட்டில் உள்ள அடகாமா பாலை வனத்தில் இருக்கும் மலை உச்சியில் உலகின் மிகப் பெரிய டெலஸ்கோப் அமைய உள்ளது. கடல் மட்டத்தில் இருந்து சுமார் 3060 மீற்றர் உயரத்தில் இந்த டெலஸ்கோப் அமைகிறது.பூமி போன்ற பெரிய கோள்கள் முதல் சிறிய கோள்கள் வரை ஆராயும் சக்தி கொண்டதாக இந்த டெலஸ்கோப் இருக்கும். கருந்துளைகள் மற்றும் விண்வெளியில் நிலவும் பாதிப்புகளையும் இந்த டெலஸ்கோப் மூலம் விஞ்ஞானிகள் ஆராய முடியும்.★★★★★★

# புத்திசாலிக் குழந்தைகள்...



ஆங்கள் குழந்தைகள் புத்திசாலிகளாக ஆக வேண்டும் என்று எல்லாப் பெற்றோர்களும் விரும்புகிறார்கள். முதல் பெறுபேறு வாங்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்.

இதற்காக குழந்தைகளுக்கு ஆர்வத்துடன் பாடம் சொல்லிக்கொடுப்பது, கூடுதல் நேரம் படிக்க வைப்பது, ரியூசன்அனுப்புவது, யோகா வகுப்பிற்கு செல்லச் சொல்வது, தியானம் செய்ய வலியுறுத்துவது, ஆரோக்கியமான உணவுகளை தயாரித்துக் கொடுப்பது என விதவிதமான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள்.

இவற்றைவிட வீட்டில் சிறு நூலகம் இருந்தாலே குழந்தைகளின் ஆர்வம் இயல்பாகவே கல்வியின் பக்கம் திரும்பவிடும் என்கிறது புதிய ஆய்வு. அமெரிக்காவின் நெவேடா பல்கலைக்கழகம் இதைக் கண்டுபடித்துள்ளது.

20 ஆண்டு காலம் இதற்கான ஆய்வு நடந்தது. அப்போது ஒரு வீட்டில் குறைந்தபட்சம் 500 புத்தகங்கள் இருப்பின் குழந்தைகளின் ஆர்வம் புத்தகத்தின் பக்கம் திரும்புவது தெளிவானது. இதன் மூலம் பெற்றோர் சிறந்த கல்வியாளர்களாக இருந்தால்தான் பிள்ளைகளும் சிறப்பாகப் படிப்பார்கள் என்ற நம்பிக்கை மாறி உள்ளது.

3 வருடம் மட்டுமே படித்த பெற்றோர் மற்றும் 16 ஆண்டு காலம் படித்த பெற்றோர் இருவரது வீடுகளிலும் சிறு நூலகம் ஏற்படுத்தி ஆய்வு செய்தபோது குழந்தைகளின் கல்வியில் பெறும் மாறுதல்கள் காணப்பட்டது. அதாவது நூலகம் இருக்கும் வீடுகளில் குழந்தைகளின் 3 1/4 வயதிலேயே புத்தகங்களின் பக்கம் கவனம் திரும்புவது கண்டு பிடிக்கப்பட்டது. கல்வித்தரமும் சராசரியாக உயர்ந்தது.

இல்லம்தோறும் அறிவு விளக்கு ஒளிர வீட்டுக்கொரு நூலகம் வேண்டும் என்ற அண்ணாவின் வாக்கு உண்மையென நிரூபிக்கப்பட்டிருக்கிறது.★★★

*(நன்றி:- அறிவியல் இணையம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ⟷ கொழும்பு

## அதிசொகுசு பஸ்சேவை

இதோ... யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பயணிகளுக்காக




★மிகக் குறைந்த கட்டணத்தில் சௌகரியமான பயணம்
★பாதுகாப்பான விரைவான களைப்பற்ற பயணம்
★யாழ்ப்பாணத்திலிருந்தும் கொழும்பிலிருந்தும் தினமும் மாலை 7.15 மணிக்குச் சேவைகள் ஆரம்பம்.
★கிளிநொச்சி மக்களும் சொகுசாகப் பயணிக்க வசதி
★அரச, தனியார் வங்கி உத்தியோகத்தர்களுக்கும் யாழ்.வணிகர் கழகத்தின் நிரந்தர உறுப்பினர்களுக்கும் விசேட கட்டணங்கள்.
இவர்கள் 3 தினங்களுக்கு முன் ஆசனப் பதிவைமேற்கொள்ளவேண்டும்.
(உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களை எடுத்துவரவேண்டும்.
இச்சலுகை ஜூலை 31 வரை மட்டுமே..!)

ESWARRAN
Traders & Transport Service

இல.115, 69,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212222813/2224317

இல.01, கரடிப்போக்கு,
கிளிநொச்சி. (செலான் வங்கிக்கிளை அருகில்)
தொ.பே: 0212285306
பக்ஸ்: 0212285307

இல.201B, டாம் வீதி,
கொழும்பு-12
தொ.பே: 0112433889
பக்ஸ்: 0112435247




ஈஸ்வரன் போக்குவரத்துச் சேவையின்
அதிசொகுசுப் பயணத்திற்கு முந்துங்கள்...!


## வெங்காயத்தை விரும்பும் வலி.கிழக்கு விவசாயிகள்

கோப்பாய், ஜூலை 7

வலி.கிழக்கு பிரதேசத்தில் என்றுமில்லாத அளவில் இவ்வருடம் வெங்காயப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பார்க்கும் இடமெங்கும் விவசாய நிலங்களில் வெங்காயப் பயிர்களைக் காணக்கூடியதாக இருக்கிறது.

தற்போது வலி.கிழக்குப் பிரதேசத்தில் வாழை, வெங்காயம் ஆகிய பயிர்களே பிரதான இடத்தைப் பிடித்துள்ளன.

ஏனைய பயிர்ச்செய்கையில் விவசாயிகள் நாட்டம் குறைவடைந்து வருவதாகவும் இவற்றின் பராமரிப்பு மற்றும் செலவுகளோடு ஒப்பிடுகையில் தமக்கு வாழை, வெங்காயம் மூலம் அதிக நன்மை கிடைத்து வருவதாகவும் விவசாயிகள் தரப்பில் மகிழ்ச்சி வெளியிடப்பட்டு கிறது. (50-72)

## மரண அறிவித்தல்



### திரு. கந்தசாமி அருளானந்தசிவம்

(ஆசிரியர் D.S. Senanayake College, Colombo 07.
முன்னாள் யாழ். இந்து ஆசிரியர்)

காரைநகர் கருங்காலியை பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தசாமி அருளானந்தசிவம் அவர்கள் 06.07.2010 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி, இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், கமலாதேவி, நந்தகுமாரன் (கலைமகள் ஸ்டோர்ஸ்), செல்வமலர் (ஆசிரியை யாழ். இந்துமகளிர் கல்லூரி), சரஸ்வதி, காலஞ்சென்ற கிருபாகரனின் அன்புச் சகோதரனும், நல்லையா, பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் தாரணியின் அன்புக் கணவரும், அருள்தரன் (JDC Printing); தனரூபி (ஆசிரியை Mt Lalith Aththula), சுகந்தன் (QS - Moratuwa university) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமாரசாமி, ஐஸ்வரியராணி, சற்குணராஜா, பேரம்பலம், சறோஜினிதேவி, குலமணி, நகுலநாதன், பாலசுப்பிரமணியம், பூங்குன்றன் அகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 07.07.2010 புதன்கிழமை அஞ்சலிக்காக கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, 08.07.2010 வியாழக்கிழமை காலை 08.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்
91, Veluvanarama Flats, Colombo-06
தொ.பே: 0112367978

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை7

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் தூயஒளி வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதும். (50-23)

## கோப்பாய் வைத்தியசாலைக்கு மதில் அமைக்கப்படுகிறது

கோப்பாய் பிரதேச வைத்தியசாலை வளாகத்தைச் சுற்றி மதில் அமைக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வேலிகள் சிதைவடைந்து காணப்பட்டதால் இவற்றினூடாக நுழையும் கட்டாக்காலிகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்பட்டது.

இதனால் நோயாளர்கள், மருத்துவமனைப் பணியாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (50-72)


### கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No-1 தரமான Broiler கோழிக்குஞ்சுகள் (விசேட விலையில்) 19.07.2010 காலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.
T.P: 021 222 6944

சூட்டிபாம் வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம்.
T.P: 021 321 6290

திருப்பிக் கோழி கொள்வனவு செய்யப்படும்.


## மாதாந்த ஒன்றுகூடல்

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமை புரியும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் அதுணை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ஆகியோருக்கான மாதாந்த ஒன்றுகூடல் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவிலில் அமைந்துள்ள முதியோர் பேரவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட சமூக சேவைத் திணைக்கள அலுவலர் ஆ. ஞானவேல் அறிவித்துள்ளார்.

மேற்படி கூட்டம் முன்னைய காலங்களில் கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெற்று வந்தது என்றும் தவிர்க்க முடியாத காரணத்தால் இடம்மாற்றப்பட்டுள்ளது என்றும் சமூக சேவைத் திணைக்கள அலுவலர் தெரிவித்தார். (50-201-288)

## ஆண்டு ஐந்தின் அழியாத நினைவுகள்

ஆண்டு ஐந்து ஆனாலும் - எம்
அன்புச் செல்வமே சோபா - உன்
அழகுமுகம் அழியா ஓவியமாய் - எம்
அகக் கண்களில் ஆடுதம்மா!
ஆறாத்துயரில் நாம் இங்கே
அரனடியில் நீ அங்கே
அணையாத் தீபமாய் ஒளிவீசுவாய்.

பிறப்பு:
28.11.1982

இறப்பு:
01.07.2005

திதி: 07.07.2010

குடும்பத்தினர்
'பழவீடு'
இளவாலை.



### செல்வி சோபனா திருபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**01.10.1992**

★ இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஜனாதிபதி பிரேமதாஸ நிராகரித்தார் என கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றில் செய்தி பிரசுரிப்பு.

★ ஜனாதிபதி பிரேமதாஸ தமது இந்திய விஜயத்தின் போது தமக்குக் கிடைக்கும் நேரம் முழுவதையும் சார்க் விவகாரங்கள் குறித்து பேச்சு நடத்தவே பயன்படுத்துவார் என ரூபவாகினி அறிவிப்பு.

**02.10.1992**

★ மன்னார் மாவட்டத்தில் 'வேக அடித் தாக்குதல்' என்ற பெயரில் பெரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை அரச படைகள் நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிப்பு.

★ வன்னி மாவட்டம் - பதவியாப் பகுதியில் அமைந்திருந்த இலங்கை இராணுவத்தின் மினி முகாம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற் கொண்ட தாக்குதலில் 15 க்கும் அதிகமான படையினரும் 5 ஊர்காவல் படையினரும் கொல்லப் பட்டதாகத் தெரிவிப்பு.

**03.10.1992**

★கட்டைக்காட்டில் நேற்று இலங்கை இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற் கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்றில் படையினரின் ஆயுதக் கிடங்கொன்றைக் கைப்பற்றியதுடன், இடம் பெற்ற மோதலில் 30 க்கும் அதிகமான படையினர் உயிரிழந்ததாகவும் தெரிவிப்பு.

★ பிரபாகரனை நாடு கடத்துவது வேறு; தீவிர வாதத்தை அடக்குவது வேறு; இரண்டும் வெவ்வேறு பிரச்சினைகள். அவை குறித்து தேவைப்படும் நடமுறைகள் பின்பற்றப்படும் என இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் ஜனாதிபதி பிரேமதாஸ அங்கு வைத்துத் தெரிவிப்பு.

**04.10.1992**

★ வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் தொடரப்படும். அங்கு வாழும் மக்களைக் காப்பாற்றுவதற்கு இராணுவ நடவடிக்கைகள் அவசியம் என ஜனாதிபதி பிரேமதாஸ புதுடில்லியில் வைத்து பத்திரிகையாளர்களுக்குத் தெரிவிப்பு.

★ விடுதலைப் புலிகளின் திடீர்த் தாக்குதல்களினால் பாரிய இழப்புக்களை இராணுவத்தினர் சந்திக்க நேர்ந்தமையாலேயே அரசு பேச்சுவார்த்தைக்கு முன் வந்துள்ளது என வெரித்தாஸ் வானொலி விமர்சிப்பு.

**05.10.1992**

★வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு ஏற்படுவதையே நான் பெரிதும் விரும்புகிறேன் என்று வட பகுதிக்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா தெரிவிப்பு.

★அரசியல் தீர்வு ஒன்றின் மூலமே இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பீற்றர் கெனமன் தெரிவிப்பு.

**06.10.1992**

★ ஆனையிறவு - கட்டைக் காட்டில் படையினரின் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 5 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய ஆயுதங் களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிச் சென்றுள்ளதை இராணுவத் தரப்பு இப்போது ஒப்புக் கொண்டுள்ளதாகத் தெரிவிப்பு.

★இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் படி நிறுவப்பட்ட மாகாண சபையைக் கலைத்துவிட்டு, அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட பிரதேச செயலாளர்களின் அலுவலகங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் நடைமுறையை அமுலுக்குக் கொண்டுவர அரசு ஆர்வம் காட்டிச் செயற்படுவதாக சிங்கள பத்திரிகை தெரிவிப்பு.

**07.10.1992**

★ தான் பார்த்த நாடுகளில், இலங்கையிலேயே மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படுவதாக கொழும்பு வந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் குழு கண்டனம் தெரிவிப்பு.

★ இந்திய முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஏ.எஸ்.வைத்தியாவின் படுகொலை தொடர்பான வழக்கில் எதிரிகளான இருவருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனை இன்று நிறைவேற்றப்பட இருப்பதாக அறிவிப்பு.

**08.10.1992**

★ கிளாலிக் கடலில் பொதுமக்கள் பயணம் செய்த படகுகள் மீது கடற் படையினர் மேற் கொண்ட தாக்குதலில் 5 பொது மக்கள் உயிரிழந்ததாகவும் இருவரைக் காணவில்லை என்றும் தெரிவிப்பு.

★ ஆனையிறவுப் பாதையை 'தாக்குதல் தவிர்த்த வலய' மாக அரசு பிரகடனம் செய்திருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவிப்பு.

**09.10.1992**

★ கடந்த 28 மாதங்களில் 2 ஆயிரத்து 800 படையினர் பலியானமை, காயமுற்ற 5 ஆயிரம் பேர் களத்திலிருந்து அப்புறப் படுத்தப்பட்டமை, 4 ஆயிரம் படையினர் தப்பி யோடியமை போன்றவற்றால் இலங்கை அரச படைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமது போர் நடவடிக்கைகளில் சிரமத்தை எதிர்நோக்குவதாக ஜேர்மன் வானொலி விமர்சிப்பு.

★ விடுதலைப் புலிகள் தாம் அறிவித்த படி தமிழீழ மீட்பு நிதியை எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் சேகரிக்கத் திட்டமிட்டிருப்பதாக அறிவிப்பு.

**10.10.1992**

★ வாழைச்சேனையில் தேநீர் விடுதி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நேரங்குறித்து வெடிக்க வைக்கும் குண்டு வெடித்ததில் ஒருவர் உயிரிழந்ததாகவும் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிப்பு.

★ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே வைத்தால் மட்டுமே அவர்களுடன் இனப்பிரச்சினை குறித்து பேச இயலும் என ஜனாதிபதியின் வெளி விவகார ஆலோசகர் பிரெட்மன் வீரக்கோன் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு.

**11.10.1992**

★ ஆயுதப் படையினர் விடுதலைப் புலிகளிடம் தோல்விமேல் தோல்வி கண்டு வருவதையடுத்து இராணுவக் கட்டமைப்பு மாற்றம் செய்யும் விதத்தில் கூட்டுப் படையினிடமே மீண்டும் அனைத்து அதிகாரங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

★ விடுதலைப்புலிகள் பிரமுகர் கிட்டு இன்னமும் ஐரோப்பாவில் தான் தங்கியிருப் பதாகவும் அவர் இலங்கைக்குச் சென்று விட்டதாக வெளியான தகவல் தவறானது எனவும் பி.பி.ஸி. சிங்கள சேவை தெரிவிப்பு.

**12.10.1992**

★ இலங்கை ஆயுதப் படைகளின் தலைமை மற்றும் அதிகாரக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் அளவுக்கு நிலைமை உருவாகியிருப்பது விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு கிடைத்த வெற்றியாகும் என கொழும்பில் அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவிப்பு.

★ இலங்கையில் கடந்த சில ஆண்டுகளில் காணாமல் போனதாகக் கூறுப்படும் ஆள்கள் குறித்து இதுவரை 14 ஆயிரம் முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்திருப்பதாக அந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்தும் ஐ.நா.மனித உரிமை செயற்குழு தெரிவிப்பு.

**13.10.1992**

★ இலங்கையின் முப்படைகள் மற்றும் பொலிஸ் தரப்பின் தலைமைப் பீடத்தில் உள்வீட்டுச் சண்டை நெருக்கடியான கட்டத்தை அடைந்துள்ளதாகவும் இதனால் விமானப்படைத் தளபதி தமது பதவியை இராஜினாமாச் செய்யவுள்ளார் எனவும் முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ஹரிகுண திலக பி.பி.ஸிக்குத் தெரிவிப்பு.

★ வடக்கு - கிழக்குக்குப் பொதுவான பிராந்திய சட்டசபையையும், அதன் கீழ் இயங்கக் கூடியதான இரண்டு மாகாண சபைகளையும் நிறுவும் ஒரு திட்டத்தை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான தமது புதிய யோசனையாக தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்க முன்வைத்திருப்பதாகத் தெரிவிப்பு.

**14.10.1992**

★ சிங்களப் பெற்றோர் தமது பிள்ளைகள் இராணுவத்தில் சேருவதை விரும்புகிறார்கள் இல்லை. இராணுவத்தில் சேர வேண்டாம் என அவர்களை அதைரியப் படுத்துகிறார்கள் என சிங்களப் பாதுகாப்புச் சங்கத்தின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான காமினி ஜெயசூரிய பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவிப்பு.

**15.10.1992**

★ வலி.வடக்குப் பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது அளவெட்டியில் இராணுவத்தினரிடம் சிக்கி இளவாலையில் தங்க வைக்கப் பட்டிருந்த 36 பொதுமக்கள் நேற்று விடுவிக்கப் பட்டதாகத் தெரிவிப்பு.

★ இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கென 11கோடியே 40 லட்சம் டொலர்களை சர்வதேச நாணய நிதியம் கடனாக வழங்கியுள்ளதாகத் தெரிவிப்பு.

# இம்மாத இறுதிக்குள் வாக்காளர் பட்டியல் விநியோகம் சாத்தியம் - தேர்தல் செயலகம்

கொழும்பு, ஜூலை 07

இம்மாத இறுதிக்குள் அனைத்து மாவட்டங்களுக்குமான 2009 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல்களை விநியோகிக்க முடியும் - என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா உள்ளிட்ட சில மாவட்டங்களுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல்கள் இதுவரை விநியோகிக்கப்படவில்லை என பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கூறினார்.

இந்த மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் தம்மைப் பதிவு செய்துள்ளமையால் சிக்கல்நிலை ஏற் பட்டுள்ளது.

பல இடங்களில் பதிவு செய்துள்ளவர்களின் பெயர்களை ஓரிடத்தில் பதிவு செய்வதற்கான சீராக்கல் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன எனப் பிரதித் தேர்தல்கள் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சில மாவட்டங்களில் வாக்காளர் பெயர்ப் பட்டியல்கள் அடங்கிய இறுவட் டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார். (சி)

# மாணவர்கள் தெளிவாகவும் இலகுவாகவும் கற்க தமிழ் இலக்கணப் பூங்கா பெரிதும் உதவும்

## நூல்வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சிவலிங்கராஜா

யாழ்ப்பாணம்,ஜூலை7

மாணவர்கள் இலக்கணத்தை இலகுவாகவும் தெளிவாகவும் கற்க பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தின் தமிழ் இலக்கணப் பூங்கா உதவும். மிக எளிமையான நடையில் இலக்கணக் கருத்துக்களை இந்நூல் எடுத்துக் கூறுகின்றது. - இவ்வாறு தெரிவித்தார் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா.

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தின் நூல் வெளியீட்டு விழாவில் அவர் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எழுத்துப் பிழை, வாக்கியப்பிழை என்பன இன்று ஆசிரியர் மத்தியிலும் காணப்படுகின்றன. ஆசிரியர்கள் நிறைய விடயங்களைப் படிக்கவும் வேண்டும் ரசிக்கவும் வேண்டும்.

ஒரு காலத்திலே தமிழாசிரியர்கள் கற்பித்த விடயங்கள் அவர்கள் கற்பித்த முறையால் எங்கள் மனதிற் பதிந்து எம்முடன் கூடவே வந்தன. அவர்கள் தமிழைத் தமிழாகவும் கவிதையைக் கவிதையாகவும் கற்பித்தனர். அந்த மரபில் வந்தவர் தான் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம். வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை, குமாரசுவாமிப்புலவர் முதலியவர்களிடம் ஊற்றெடுத்த மரபின் ஓட்டம் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் ஊடாக இன்றும் தொடர்கின்றது என்றார்.

இந்த நிகழ்விற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தனது தலைமையுரையில் ஈழத்தின் புகழ்பூத்த கவிஞர்களில் ஒருவரான பண்டிதர் ச.வே.ப. சிறுவயதிலிருந்தே கவிதை எழுத ஆரம்பித்தவர். நகைச்சுவையாகப் பேசுவது மட்டுமல்லாமல் நகைச் சுவை வாய்ந்த கவிதைகளையும் எழுதியுள்ளார். 'கல்லைக் கடலையிற் கலந்து விற்றவன் செல்லாக்காசையும் சேர்த்துப் பெற்றனர்' என்னும் கவிதை அவரது கவித்துவத்திற்குச் சிறந்த சான்றாகும். இணுவிலிலே பண்டிதர் பாரம்பரியம் செல்வாக்குடன் திகழ்ந்த காலப் பகுதியிலே மிக இளம் பண்டிதராக அவர் இருந்தவர் எனக் கூறினார்.

இந்த விழாவிலே வாழ்த்துரைகளை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, இணுவில் மத்திய கல்லூரி அதிபர் அ. சதானந்தன் ஆகியோர் வழங்கினர். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர் ச.மார்க் கண்டு, கிளிநொச்சி முருகானந்தா மகா வித்தியாலய ஆசிரியர் சி.ரமேஷ் ஆகியோர் ஆய்வுகளை நிகழ்த்தினர். முதற்பிரதியை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவிடமிருந்து ஓய்வுபெற்ற அதிபர் க.சிவாஜி பெற்றுக் கொண்டார்.

(50-55)

# குடாக்கடலில் தங்கூசி வலைக்குத் தடை; பாதிக்கப்படுவதாக மீனவர்கள் முறைப்பாடு

வண்ணை,ஜூலை7

குடாக்கடல் நீரேரியில் தங்கூசி வலை கொண்டு மீன்பிடித் தொழில் செய்வதற்கும் மீன்பிடி இலாகாவால் தடை விதிக்கப்பட்டிருப்பதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இதனால் அந்தத் தொழிலில் ஈடுபட்டு வந்த நூற்றுக் கணக்கான மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பெருந்தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட வலைகளும் முடக்கப்பட்டுக் கிடப்பதாகக் கவலை வெளியிடப்பட்டுள்ளது. (50-160)

# மாணவர் ஊக்குவிப்பும் பரிசளிப்பு விழாவும்

காரைநகர்,ஜூலை7

காரைநகரில் அமைந்துள்ள காரை மத்தி மேம்பாட்டுக்கழகம் நடத்தும் மாணவர் ஊக்குவிப்பு நிகழ்வும் பரி சளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை பிற் பகல் 2 மணிக்கு யாழ்ற்ரன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மேம்பாட்டுக்கழகத் தலைவர் ந.கிருஸ்ணபவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வ. இராதாகிருஸ்ணன் ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அதிகாரி ச.பாஸ்கரன், யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் தி.சோமசேகரம், கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய அதிபர் பொ.சிவானந்தராசா, மெய்கண்டான் வித்தியாலய அதிபர் திருமதி.பு.சந்திரராசா உள்ளிட்ட பலர் கலந்துகொள்ள உள்ளனர்.

இந்த நிகழ்வில் கடந்த ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 17 மாணவர்கள் கௌரவிக்கப்பட உள்ளனர். நிழற்பிரதி இயந்திரமும், கணனி கையளிப்பு நிகழ்வும் இடம்பெற உள்ளது.

அமரர் கணபதிப்பிள்ளை கமலானந்தன் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் நிழற்பிரதி இயந்திரமும் கணனி என்பன காரை மத்தி மேம்பாட்டுக்கழகத்துக்கு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (50-250)

# திறந்த வாகனங்களில் கழிவுப் பொருள்கள்; மூக்கைப் பொத்தியபடி பயணிக்கும் பொதுமக்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ்.மாநகர சபையின் திறந்த வாகனங்களில் கழிவுப் பொருள்கள் ஏற்றிச் செல்லப்படுவதால் வீதிகளில் செல் லும் மக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபைத் தொழிலாளர்கள் திறந்த உழவு இயந்திரங்களின் மூலமே கழிவுப் பொருள்களை எடுத்துச் செல்கின்றனர். இவற்றிலிருந்து சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுவதால் இவற்றை எதிர்கொள்ளும் மக்கள் மூக்கைப் பொத்தியவாறு செல்கின்றனர். சிலர் வாந்தி யும் எடுக்கின்றனர்.

யாழ்.மாநகரசபை நிர்வாகம் மூடிய பாதுகாப்பான வாகனங்கள் மூலமாக இந்தக் கழிவுகளைக் கொண்டுசெல்வதன் மூலமாக பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கலாம் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.செயலாளரின்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை முறையாக வழிநடத்தாத் காரணத்தாலேயே பான் கீ - மூன் இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்க நிபுணர் குழுவை நியமித்தார்.''

- இவ்வாறு ஐ.தே.க.குற்றம் சாட்டி வெளிவிவகார அமைச் சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிக்கவுள்ளது.

இதேவேளை, இலங்கை அரசு மனித உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கத் தவறியமையே ஐ.நா. நிபுணர் குழுவை அமைக்கக் காரணம் என ஜே.வி.பி. குற்றம் சாட்டியிருந்தது.

''ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது இடம்பெற்ற படுகொலைகளுக்கு நீதி கேட்டு அன்று ஜெனிவா சென்ற ஜனாதிபதி, ஐ. நாவின் நிபுணர் குழுவினால் நாட்டின் இறைமைக்குப் பாதகம் எனக் கூறுவது அர்த்தமற்றது. மேலும் அரசுப் பக்கம் நியாயம் இருக்குமாயின் நிபுணர்கள் குழு தொடர்பில் அச்சம் கொள்வது எதற்கு?'' - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நல்லதொரு கேள்வியைத் தொடுத்துள்ளார்.

''யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் இராணுவத் தரப்பினரால் மனித உரிமைகள் மீறப்படவில்லை என்றும் அதேநேரம் மனிதப் படு கொலைகள் இடம்பெற வில்லை என்றும் திட்டவட்டமாகக் கூறி வரு கின்றது. அதுமட்டு மல்லாது சர்வ தேசத்துக்கும் கூறி வருகின்றது''

''இவ்வாறு தமது பக்கத்தில் நியாயம் இருப்பதாகக் கருத்துகளை வெளியிட்டு வருகின்ற அரசு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தினால் அமைக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழு தொடர்பில் கலவரமடைவதற்கோ அல்லது அச்சமடைவதற்கோ அவசியமே கிடையாது.

''1989மற்றும் 90ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் ஜே.வி.பியின் கிளர்ச்சிகள் காரணமாக மனிதப் படுகொலைகள் இடம்பெற்றமை தொடர்பில் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அன்று மேற்குறிப்பிட்ட மனிதப் படுகொலைகள் தொடர்பிலான தகவல்களைத் திரட்டிக் கொண்டு ஜெனிவாவின் மனித உரிமைகள் காப்பகத்துக்குச் சென்று அப்போதைய நிலைவரம் தொடர்பில் சர்வதேச மனித உரிமைகள் தாபனத்தின் தலையீடு இலங்கைக்கு அவசியமானது என்பதை வலியுறுத்தியிருந்தார்.

''அப்போதைய கால கட்டத்தில் இலங்கையின் இறைமை குறித்து அலட்டிக் கொள்ளவில்லை. ஆனாலும் தற்போது நடந்து முடிந்துள்ள யுத்தத்தில் இடம்பெற்ற அசாதா ரணம் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தத்தின் பின்னரான நாட்டின் நிலைமைகள் குறித்த விடயங்களை ஆராய்வதற் கென்றே ஐக்கிய நடுகளின் சார்பில் இந்த நிபுணர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

அரசிடம் நியாயங்கள் காணப் படுமாயின் அந்தக் குழு வின்நடவடிக்கைகளுக்கு இடம ளிப்பதில் இடையூறுகள் தேவை யற்றவை. ஐ.நாவின் நிபுணர்கள் குழு இலங் கையின் இறை மைக்கு பங்கம் எனக் கூறப்ப டுமானால் அதனை ஜனா திபதி 1989 - 90களிலும் சிந் தித்திருக்க வேண்டும்.''

இதேசமயம், ஐ.நா. நிபுணர் குழுவின் நியம னத்துக்கு அமெரிக்கா தனது ஆதர வைத் தெரிவித் துள்ளது.

யுத்தக் குற் றங்களுக்கு யார் பொறுப்பு என் பதைக் கண்டு பிடிப் பதற்கான முன் னெடுப்புக ளைச் செய்வ தன் மூலமே நீண்டகால யுத் தத்தில் இருந்து மீண்டிருக்கும் இலங்கையில் தேசிய நல்லி ணக்கம், சட்ட ஆட்சி இரண் டுக்குமான அத் திபாரம் அமைக்க முடி யும். எனவே, ஐ.நா. செய லாளர் நாயகத் தின் இந்த நிபுணர் குழுவை வரவேற்கிறோம்.''

- இப்படி அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பிரிட்டன், நோர்வே, பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

ஐ.நா. செய லாளர் இந்த நிபுணர் குழு நியமனத்தை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றிருந்தது.

''வன்னியில் இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் குறித்த விசாரணைகளை நடத்தவும் இது தொடர்பாக ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ - மூனுக்கு ஆலோசனை வழங்கவும் ஐ.நா.நிபுணர் குழு நியமிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.''

- இப்படி ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி கெத்தரின் அன்ரன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தெற்காசியாவில் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக சீனாவும் இந்தியாவும் இலங்கையைத் தளமாகப் பயன்படுத்தும் நோக்கில் போட்டி போட்டுக்கொண்டு இலங்கையின் அந்த நிலைப்பாட்டுக்கும் ஆதரவு தெரிவித்து வருவதும் தெரிந்ததே.

இதேவேளை, ரஷ்யா, அணிசேரா நாடுகளும் இந்த நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இலங்கை அரசின் கெஞ் சல்கள்- தாரை வார்ப்புகள் - ஒப்பந்தங்களுக்கு - அமையவே இந்த நாடுகள் நிபுணர் குழு வுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன என எண்ணத் தோன்றுகின்ற தல்லவா?

இவை எல் லாவற்றுக்கும் மேலாக இலங் கைப் படை யினரை சர் வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தி விசாரணை மேற்கொள் வதற்கான சர்வதேச ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத் திடவில்லை. எனவே யுத்தக்குற்றம் தொடர்பாக இலங் கைப் படையினரை சர்வதேச நீதிமன்றத்துக்கு முன்னால் நிறுத்தத் தேவையில்லை.

ஆனால், தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய இவற்றைத் தெரிந்து வைத்துக்கொண்டு ஏன் தம்பட்டம் அடிக்கின்றன.

இந்தத் தம்பட்டங்களின் ஊடாக யுத்தத்தில் உயிரிழந்த இராணுவத்தின் தாயகத்துக்கு ஈடாகத் தமக்கு தேசப்பற்று அதிகம் என்பதைப் பறை சாற்றுவதற்காகவா?

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரின் எச்சரிக்கைகள் ஊடாக ஐ.நா. செயலரின் நிபுணர் குழுவின் விசாரணைகள் மூட்டை கட்டப்பட்டுவிடுமா?

இலங்கை விடயத்தில் ஐ.நாவின் நிலைப்பாட்டில் மாற்றம் வரும் பட்சத்தில் இதே போன்றொரு விடயத்தில் பிறி தொரு நாட்டில் ஐ.நா. ஈடுபடும் போதும் இலங்கையில் ஏற்பட்ட நிலையை சந்திக்க நேரிடும் என்பது ஏற்றுக்கொள்ள வேண்டிய விடயமாகிவிடுமல்லவா?

இலங்கை விடயத்தில் ஐ.நா. என்ன செய்யப்போகிறது? இலங்கை அதற்கு எவ்வாறு ஈடு கொடுக்கப் போகிறது என்பதை அடுத்த கட்டங்களில் பார்ப்போம்.

## கண்ணீர் அஞ்சலி



இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை வலி.கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் வைத்தியசாலைகளில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் Dr. வ.அனவரதன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி வெல்லிபுரம் அன்னலெட்சுமி B.A.**


ஆசிரியர் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த ஆனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(100366) **வைத்தியசாலை ஊழியர்கள்.**

## மரண அறிவித்தல்

**வைத்திய கலாநிதி துரையப்பா சண்முகராசா**

(இளைப்பாறிய ஆயுள்வேத வைத்திய அதிகாரி)



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாக வும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா சண்முகராசா நேற்று முன்தினம் (05.07.2010) திங் கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான துரையப்பா - நல்லம்மா தம் பதியரின் அன்பு மகனும் கந்தையா-தங்கம்மா அவர்களின் மருமகனும் சுதிராகமணியின் பாசமிகு கணவ ரும் கஜனன் (ஆசிரியர், வ/ மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம்), கஜவதனி (ஆசிரியர், மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), கஜவதனன் (நில அளவையா ளர், சவுதி அரேபியா), கஜரூபன், கஜந்தி ஆகியோரின் பாச மிகு தந்தையும் தேவராஜா காலஞ்சென்றவர்களான சற்குண ராஜா, ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சண் முகலிங்கம், மகேந்திரராஜா, பரமேஸ்வரி, கமலாதேவி, காலஞ் சென்றவர்களான மகேந்திரலிங்கம், கணேசலிங்கம், முத்துக் குமாரலிங் கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.07.2010) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளானை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

*பிரதான வீதி, இளவாலை,*
*தொ.பே.: 021 3211530,*
*0773545288*

## முக்கிய அறிவித்தல்

**வடமராட்சி கிழக்கு க.கூ. சங்கங்களின் சமாசம்**

31.12.2009 ஆம் திகதியில் மேற்படி எமது சமாசத்தின் கணக்குகளை ஒழுங்கமைத்து நிதிக்கூற்றுத் தயாரிக்க வேண்டி உள்ளதால் சமாச நடவடிக்கையுடன் தொடர்பு கொண்டுள்ளவர்களிடம் இருந்து 31.12.2009 இல் உள்ள மீதிகளை உரிய ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தி உறுதிப் பத்திரத்தை 20.07.2010 ஆம் திகதிக்கு முன் சமாசத் தலைவர்/ பொது முகாமையாளர், வடமராட்சி கிழக்கு க.கூ.ச. சமாசம், பொற்பதி என் னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1) வியாபார வருமதிகள் (சமாசத்துக்கு)
2) வியாபார சென்மதிகள் (சமாசத்திடமிருந்து)
3) சமாசத்தில் பெற்றுக்கொண்ட கடன்
4) சமாசத்துக்கு வழங்கிய கடன்
5) சமாசத்துக்கு வழங்கிய ஏனைய (சென்மதிகள்)
6) சமாசத்திடம் பெற்றுக்கொண்ட ஏனைய வருமதிகள்
7) மற்றும் வரவேண்டிய செலுத்த வேண்டிய முற்பணங்கள்
8) வைப்புகள்
9) நிதி, வியாபார நடவடிக்கையோடு தொடர்பான ஏனைய விடயங்கள்

L.P.P.மரியதாஸ்
தலைவர்,
வடமராட்சி கிழக்கு க.கூ.ச.ச.
பொற்பதி.

த.பாலசிங்கம்,
பொதுமுகாமையாளர்,
வடமராட்சி கிழக்கு க.கூ.ச.ச.

## பயிலுநர்கள் தேவை

கொழும்பு முல்லேரியாவ புதிய நகரிலுள்ள புடைவைத் தொழிற்சாலைக்குப் பயிலுநர்கள் தேவை.

கவர்ச்சியான கொடுப்பனவு, சம்பளம், வருகை ஊக்கத் தொகை, அடைவு மட்ட ஊக்கத்தொகை முதலியவை உண்டு.

தங்குமிட வசதி மற்றும் காலை உணவு நிறுவனத்தால் வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் (கீழ்மாடி) 2010 ஜூலை 10 ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரை நேர்காணல் இடம்பெறும்.

தயவுசெய்து முழுமையான சுயவிவரக் கோவை, தொடர்பு இலக்கம், தே.அ.அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழுடன் வருகை தரவும்.

**SIGIRI EXPORT (PVT) LTD,**
No 61, Ambathale, Mulleriyawa New Town.
Tel: 0112- 414 521 / 0112- 414 522
Fax: 0112- 414 510

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண தடகளப் போட்டிகளில் சாதனைகள் நிலைநாட்டியோர் விவரம்

வலி.வடக்கு,ஜூலை7

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் தடகளப் போட்டிகள் சிலவற்றின் முடிவுகள் வெளியாகியுள்ளன. அந்த முடிவுகள் வருமாறு:-

**ஆண்கள்**

13 வயதுப் பிரிவு - 200 மீற்றர் ஓட்டம் - எல்.அபயதீசன் (மன்னார் சென்.சேவயர் ஆண்கள் கல்லூரி), வை.டிலக்சன் (மன்னார் முருங்கன் மகா வித்தியாலயம்), த.செந்தூரன் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), இ.மோகனபிரசாத் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி).

**15 வயதுப் பிரிவு**

உயரம் பாய்தல்- இ.செந்தூரன் - 1.59 மீற்றர் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), எஸ்.வெல் லோடன் மார்க் (மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயம்), எஸ்.கோவர்த்தன்ன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), இ.நிரூசன் (நெல்லியடி மத் திய மகா வித்தியாலயம்)

நீளம் பாய்தல் - மே.லிவடியன் சூசை - 5.35 மீற்றர் (மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயம்), சி.டினேசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இ.அருளன்பன் (மன்னார் முருங்கன் மகா வித்தியாலயம்), சி.பிரதீபன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

ஈட்டி எறிதல் - த.செந்தூரன் - 37.91 மீற்றர் (கிளிநொச்சி கிரான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), எஸ்.டிபன் கிறிஸ்ரி (மன்னார் கருக்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை), ஜே.பபிரிஸ் டயஸ் (மன்னார் பாத்திமா மத்திய மகா வித்தியாலயம்), ஜே.ஜெவியன்ஸ் (மன்னார் அல் அசார் மகாவித்தியாலயம்).

100 மீற்றர் தடை தாண்டல்- ம.ஸ்ரீசான் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ஜே.அன்ரனி கஸ்ரோ (மன்னார் சென். சேவயர் ஆண்கள் கல்லூரி),ஜெ. நிலுஜன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), எஸ். றொபின்சன் (மன்னார் சென். சேவயர் ஆண்கள் கல்லூரி).

**17 வயதுப் பிரிவு**

200 மீற்றர் ஓட்டம்- சி.மாட்டின் எல்ஜீஸ் (யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி), அ.எட்வின் ஜோய் ( யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஜெ.ஜெனார்த்தனன் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), தே. தேவதயாபரன் (மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயம்)-

800 மீற்றர் - அ.அனோஜன் (யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி), எஸ். டினோசன் (மன்னார் பரிகரி கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.சுவேந்திரன் (வவுனியா நெலுக்குக் குளம் மத்திய மகா வித்தியாலயம்), தே.சிந்துஜன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

1500 மீற்றர்- அ.அனோஜன் (யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி), எஸ். டினோ சன் (மன்னார் பரிகரி கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ரி.ஜக்சன் (மன்னார் பாத்திமா மத்திய மகா வித்தியாலயம்), நே.அன்ரனிரதன் (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி)

400 மீற்றர் தடை தாண்டல் - எஸ். அருணன் (மன்னார் பரிகரி கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), பி.பிரசாத் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), கு.குலசீலன் (யாழ்.வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்),இ.விவேக் (மன்னார் அரிப்பு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலை)

முப்பாய்ச்சல் - வ.ஜஸ்மினன் - 12.22 மீற்றர் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), ம.டக்சன் (மல்லாகம் மகா வித்தியாலயம்),ஜோ.அன்ரூ டிலக்சன் (மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம்), எஸ். அன்சலன் (மன்னார் பரிகரி கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை)-

ஈட்டி எறிதல் - வா.லாவூஸ் லிவிங்டன் (யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி), க.சுலோஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), செ.சசிகரன் (மன்னார் வட்டக்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை), ரி.தயீசன் (வவுனியா வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம்)-

19 வயது - 200 மீற்றர் -ஜி.கஜந்தன் (வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம்), கு.சிலேந்திரன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி),ஆ.நாகராசா (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி), எ.பிலிப் ஆனந்தகுமார் (முல்லைத்தீவு ஆனந்த குமாரசுவாமி உள்ளக இடம் பெயர்ந்தோர் பாடசாலை),

400 மீற்றர் தடை தாண்டல்- எ.அமிர்திலன் - வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயம், ர.திவாகர் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சி.நந்தலாவன் - அளவெட்டி அருணோதயக் கல்லூரி, எஸ்.றெமோஸ்ட் கிளின்ரர் - மன்னார், நானாட்டான் மகா வித்தியாலயம் -

உயரம் பாய்தல்-மு.கிருஷ்ணா - 1.80 மீற்றர் (தெல்லிப்பழை, மகாஜனாக் கல்லூரி), வி. ஆரூரன் - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், ர.வதுசனன் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)-

5000 மீற்றர்- த. ஜெயதீபன் (மன்னார் முருங்கன் மகா வித்தியாலயம்), ப. தயாகரன் ( நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), பொ. ருஜிந்தன் ( கிளிநொச்சி, பூநகரி மகா வித்தியாலயம்), அ.பகீரதன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி). (1-86)

(தொடரும்)

# வங்கிகளுக்கிடையிலான துடுப்பாட்டம்; மக்கள் வங்கி நான்கு ஓட்டங்களால் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 7

மக்கள் வங்கியின் 49 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள் வங்கியின் விளையாட்டு அவை நடத்திய வங்கிளுக்கு இடையே 12 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் மக்கள் வங்கி அணி நான்கு ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் மக்கள் வங்கி அணியை எதிர்த்து இலங்கை வங்கி அணி மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மக்கள் வங்கி அணியின் தலைவர் முதலில் துடுப்பெடுத்தாட முடிவுசெய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மக்கள் வங்கி அணியினர் 12 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டினையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ராஜராம், கமலலக்சன், பிரதீபன் ஆகியோர் முறையே 14:14:11 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் இலங்கை வங்கி அணி வீரரான போரழகன் இரண்டு ஓவர் பந்து வீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு 85 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய இலங்கை வங்கி அணி 12 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டினை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் றெஜிமன் ஆறு, ஆறு ஓட்டங்கள், ஒரு நான்கு ஓட்டம் அடங்களாக 40 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

பந்து வீச்சில் மக்கள் வங்கி அணி வீரர்களான கஸ்சன், மூன்று ஓவர்கள் பந்து வீசி எட்டு ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் கஜேந்தி ரன் மூன்று ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக மக்கள் வங்கி அணி வீரன் கஸ்சன், சிறந்த தொடர் ஆட்ட நாயனாக மக்கள் வங்கி அணி வீரன் கஜேந்திரனும் தெரிவுசெய்யப்பட்டனர். (1- 23)

# தீவகரீதியிலான போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 7

தம்பாட்டி காந்திஜீ சனசமூக நிலையத்தின் 59 ஆவது ஆண்டு நிறைவையொட்டி தீவக ரீதியில் உதைபந்தாட்டம், கரப்பந் தாட்டம், மென்பந்துத்துடுப்பாட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப் போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக் கழகத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (எ-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ். இந்து, இராமநாதன் கல்லூரிகள் வெற்றி

வலி.வடக்கு,ஜூலை 7

வடமாகாண கல்வித் திணைக்களம் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்கள், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும், மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியும் மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்ட மைதானத்தில் போட்டிகள் நடைபெற்றன.

ஆண்களுக்கான போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமும் யாழ். இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் ஒரு அணிக்கு மற்றைய அணி சளைத்தவர்கள் இல்லையென்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக் கொண்டன.

நான்கு கால்பாதிகள் கொண்ட இப் போட்டியில் இரண்டாம் கால்பாதி ஆட்ட நிறைவில் யாழ்.இந்துக் கல்லூரி 29:28 புள்ளிகள் என்ற நிலையில் காணப்பட்டது. அடுத்த இரண்டு கால்பாதி ஆட்டங்களிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னிலைக்குச் சென்று புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது.

ஆட்ட இறுதியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 55:44 புள்ளிகள் என வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

பெண்களுக்கான போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியும் மன்னார் சென்.சேவயர் பெண்கள் கல்லூரியும் மோதிக்கொண்டன.

ஆட்ட இறுதியில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி 78:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (1-86)

# வடக்கு மாகாண பாடசாலைகள் தடகளப் போட்டி; இறுதிநாள் மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை 7

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே கடந்த 4 ஆம் திகதி முதல் நடைபெறும் தடகள விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வுகளும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொள்ளவுள்ளார்.

இன்றைய நிகழ்வில் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை, அளவெட்டி அரு ணோதயாக் கல்லூரி ஆகியவற்றின் மாண வர்கள் முன்னூறு பேர் பங்கு பற்றும் இடைவேளை நிகழ்ச்சி இடம்பெறும்.

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் பாண்ட் வாத்திய இசையும் இடம் பெறவுள்ளது. (1-86)





இலங்கை உதை பந்தாட்ட சம்மேளத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 13 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சம்பியனான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வீரர்களையும், இரண்டாம் இடத்தைப் பெற்ற இளவாலை புனித ஹென் றியரசர் கல்லூரி வீரர்களையும் அந்தந்தக் கல்லூரி பிரமுகர்களுடன் படங்களில் காணலாம்.

*(படங்கள் :நேசன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் ஏனைய பகுதிகள் போன்று கருதாமல்

# வடக்கு, கிழக்கின் கல்விச் செயற்பாடுகளுக்கு விசேட திட்டத்தை செயற்படுத்த வேண்டும்

## நாடாளுமன்றத்தில் விஜயகலா தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஜூலை7

கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கின் கல்விச் செயற்பாடுகளை முன்னேற்றவேண்டுமானால் விசேட திட்டம் ஒன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும்.

இதனைவிடுத்து நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்று வடக்கு, கிழக்குப் பகுதியையும் அரசாங்கம் கணிப்பிட்டால் அது மாற்றானதாய் மனப் போக்காகவே அமையும்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

கடந்த 30 வருட கால யுத்தத்தினால் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் கல்வி முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. கல்வியில் முன்னேற்றம் கண்டிருந்த யாழ்.மாவட்டம் இன்று பின்னடைவைக் கண்டு வருவது வேதனைக்குரிய விடயமாகும். யுத்தத்தினால் வடக்கு, கிழக்கு பெருமளவு பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. அதி உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் பல பாடசாலைகள் சிக்குண்டு சின்னா பின்னமாகியுள்ளன.

கல்வியைப் பொறுத்தவரை வன்னி மாவட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மடு ஆகிய வலயங்கள் கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளன. இதேபோல் வவுனியா வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு பகுதிகளிலும் பாடசாலைகள் பல சேதமடைந்துள்ளன. யுத்தம் தமிழ்மக்களின் அழியாத சொத்தான கல்வியையும் அழித்துள்ளது.

யுத்தம் முடிவடைந்துள்ள தற்போதைய நிலையில் வடக்கு, கிழக்கின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். யுத்தத்தினால் பல பாடசாலைகள் அழிவடைந்தும் சேதமடைந்தும் உள்ளமையினால் கல்வியை உரியவகையில் தொடர முடியாது தமிழ் மாணவர்கள் அவலப்படும் நிலை வன்னியில் தொடர்ந்து வருகிறது. பாடசாலைகள் அழிவடைந்துள்ளமையினால் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்று சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் என்பனவும் அழிந்துள்ளன. இதேபோல் ஆசிரியர்களின் பதிவேடுகள், கோவைகள் என்பனவும் இல்லாது போயுள்ளன.

இதனால் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து அவலங்களைச் சந்தித்த வன்னிப்பகுதி மாணவர்கள் பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ்கள் மற்றும் பாடசாலை விடுகைப் பத்திரங்கள் என்பவை இல்லாத நிலையில் வேறு பாடசாலைகளில் சேர முடியாத அவலத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த மக்களில் பெருமளவானோர் மீள்குடியேற்றம் என்ற பெயரில் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் மாணவர்கள் கல்வி கற்பதற்கான உரிய சூழல் அங்கு இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை. இதேபோல் முகாம்களில் தங்கியுள்ள மாணவர்கள் பெரும் கஷ்டத்தின் மத்தியிலேயே கல்வியினை தொடரும் நிலை காணப்படுகின்றது. எனவே இடம்பெயர்ந்து அல்லற்பட்ட மாணவர்களுக்கு இனியாவது உரிய கல்வி வாய்ப்பினை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பில் உயர்கல்வி அமைச்சரும் கல்வி அமைச்சரும் உரிய கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

யுத்தத்தினால் வடக்கில் கல்வி பின்னடைவை கண்டதையடுத்து வன்னியிலும் குடாநாட்டிலும் கல்வி பெறுபேறுகள் கடந்த பல வருடங்களாக குறைவடைந்து வருகின்றது. யாழ்.குடாநாட்டிலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு புலமைப் பரிசில் பெற்று தெரிவாவோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது. குடாநாட்டு பாடசாலைகளில் தளபாடங்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது.

யுத்தத்தினால் சேதமடைந்த கிளிநொச்சி மகாவித்தியாலயம், பளை மகாவித்தியாலயம் உட்பட பல பாடசாலைகளில் மாணவர்கள் உரிய கட்டட வசதிகள் இன்மையால் மர நிழலில் இருந்தே கல்வி கற்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் யுத்தத்தினால் சேதமடைந்த பாடசாலைகளை உடனடியாகப் புனரமைக்க அரசாங்கம் நிதியொதுக்க வேண்டும். வடக்கு, கிழக்கில் யுத்தத்தினால் சேதமடைந்த பாடசாலைகளை புனரமைக்கவும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தவும் அரசாங்கம் உரிய நடவடிக்கைகைகளை எடுக்காமை எமக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கின் கல்வி நடவடிக்கைக்கான உரிய நிதி ஒதுக்கபடாமை கவலைக்குரிய விடயமாகும்.

### பொறியியல் பீடம் ஆரம்பிக்கவேண்டும்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றை நிவர்த்திசெய்ய உயர் கல்வி அமைச்சரான எஸ்.பி.திஸநாயக்கா நடவடிக்கை எடுக்கவேண்டும். யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும். இதற்கான முன்முயற்சிகளை உயர் கல்வி அமைச்சர் மேற்கொள்ளவேண்டும். யாழ். குடாநாட்டு மக்கள் உயர் கல்வி அமைச்சரான எஸ்.பி.திஸநாயக்கா மீது நம்பிக்கை வைத்துள்ளனர். தனது பதவிக் காலத்துக்குள் யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை அமைச்சர் ஆரம்பிப்பார் என்ற எதிர்பார்ப்பு அவர்கள் மத்தியில் காணப்படுகின்றது. எனவே இதுகுறித்து அமைச்சர் நல்லதொரு முடிவினை அறிவிக்கவேண்டும்.

பம்பை மடுவில் அமைக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமும் திறக்கப்படவில்லை. அதேபோல் வவுனியா கல்வியியற் கல்லூரியும் 2 வருடங்களாக மூடப்பட்டுள்ளது. வவுனியா கல்வியியற் கல்லூரியை திறக்குமாறு அதன் பீடாதிபதி பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதிலும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே இவற்றைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் எடுக்க வேண்டும்.

### தொண்டர் ஆசிரியர் பிரச்சினை

வடக்கு, கிழக்கில் ஆயிரக்கணக்கான தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் வழங்கப்படாத நிலையில் வாழவழியின்றி பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். யாழ்.குடாநாட்டிலும் வன்னியிலும் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி பல போராட்டங்களை நடத்தியபோதிலும் அதற்குரிய பயன் கிடைக்கவில்லை. இந்தத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு கல்வி அமைச்சர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

யுத்தத்தின்போதும் பின்னரும் இடம்பெயர்ந்து முகாம்களிலும் வெளியிலும் தங்கியிருக்கும் முன்னாள் புலிப் போராளிகளில் பெருமளவானோர் ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும் ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இவர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்குளை நடத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் அவசியாகும். இதனைவிட இந்த மாணவர்களை குடும்பத்தாருடன் இணைத்து அவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கு கல்வி அமைச்சு திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த வேண்டும். இதன் மூலம்தான் அவர்களை நாட்டின் நல்ல பிரஜைகளாக மாற்ற முடியும். இதேபோல் இடம்பெயர்ந்து தமது கல்வியைத் தெடரமுடியாத நிலையில் உள்ள மாணவர்களுக்கும் கல்வியைத் தெடர்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (22 ஆம் பக்கம் பார்க்க)

யுத்தத்தில் அவயவங்களை இழந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு;

# வலது குறைந்தோருக்கான வேலைவாய்ப்பு 2 வீதத்திலிருந்து 5 வீதமாக உயர்த்த வேண்டும்

## நாடாளுமன்றத்தில் பொன்.செல்வராசா வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 7

கடந்தகால யுத்தத்தினால் அவயவங்களை இழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனவே வலது குறைந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வீதத்தை 2 வீதத்தில் இருந்து 5 வீதமாக உயர்த்த வேண்டும்.

வரவு-செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது :-

இங்கே சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திற்குப் பலரும் பலவிதமான வடிவங்களைக் கொடுத்துக் கொண்டிருப்பதை நாங்கள் அறிகின்றோம். என்னைப் பொறுத்த மட்டில் இந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு இந்த வகையில் வடிவம் கொடுக்க வேண்டுமென்றால் அதனை ஆலம்பழத்திற்குத்தான் நான் ஒப்பிடலாம். ஆலம்பழம் ஓர் அழகான பழம். பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கும். ஆனால், அதனுள்ளே இருப்பதெல்லாம் என்னவென்று நான் சொல்ல வேண்டியது அவசியமில்லை. உங்களுக்குத் தெரியும்.

வேலையின்மை 2005ஆம் ஆண்டில் இருந்து 2010ஆம் ஆண்டு வரையிலே ஏறக்குறைய 3.3 வீதம் குறைவடைந்து இப்பொழுது 5 சதவீதமாகக் காணப்படுகின்றது என்று இந்த வரவு-செலவுத் திட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், 2005ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பட்டதாரிகளுக்கு இன்னும் வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதை கௌரவ அமைச்சர் அறிவார்கள் என்று நான் நினைக்கின்றேன்.

2005ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய பட்டதாரிகள் வேலைவாய்ப்புக் கோரி மட்டக்களப்பு பஸ் நிலையத்திலே இருந்து சத்தியாக்கிரகம் செய்தபோதிலும் இதுவரையிலே வேலை வழங்கப்படாத பட்டதாரிகள் ஏறக்குறைய ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் இருக்கின்றார்கள். மட்டக்களப்பில் மட்டுமல்ல, இலங்கையின் சகல மாவட்டங்களிலேயும் இது நடந்திருக்கின்றது. அப்படியாக இருந்தால் எப்படி 2010ஆம் ஆண்டிலே இந்த எண்ணிக்கை 3.3 வீதத்தால் குறைந்தது என்று நான் கௌரவ அமைச்சரிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவேதான் இந்த வரவு செலவுத்திட்டத்தை ஓர் ஆலம் பழத்திற்கு ஒப்பிடலாம் என்று நான் கூறுகின்றேன்.

''கடந்த சில வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட 23 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் தற்போதைய குடும்ப சனத்தொகையில் ஏறக்குறைய 15 சதவீதமாக வறுமைச் சுட்டி வீழ்ச்சியடைந்துள்ளது'' என்றும் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த வறுமைச்சுட்டி எப்படிக் குறைவடையும் என்று நான் கேட்கின்றேன்? காலத்திற்குக் காலம் அதிகமாக வரவு-செலவுத் திட்டத்தின் பின்புதான் பொருள்களின் விலைகள் ஏறும்.

ஆனால், இன்று இலங்கையிலே வரவு - செலவுத் திட்டத்திற்கு முன்பே பொருள்களின் விலைகள் ஏறிக்கொண்டு போகின்றது என்பதை இலங்கை மக்கள் அறிவார்கள் என்று நான் நினைக்கின்றேன். இப்படியாக இருக்கின்றபொழுது எப் படி வறுமைச்சுட்டி 23 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது என்று நாங்கள் கூறலாம். இந்த [illegible] பல விடயங்கள் காணப்படு கின்றபோதிலும் கூட, உண்மையிலே வடக்கு, கிழக்கிலே மீள்குடியமர்ந்த மக்களுக்காக அல்லது அகதி முகாம்களிலே பரிதவித்துக் கொண்டிருக்கின்ற மக்களுக்காக ஒதுக்கப் பட்ட நிதி ஒதுக்கீடுகள் போதாமையாக இருக்கின்றது. அதேநேரத்திலே பாதுகாப்பு அமைச்சுக்கு கூடுதலான நிதி ஒதுக்கப்பட் டிருக்கின்றது.

### பொதுமக்களுக்கும் விசேட திட்டம் தேவை

கடந்த காலத்தில் வடக்கு, கிழக்கிலே ஏற்பட்ட யுத்தத்தின்பொழுது அனேகமான அப்பாவி மக்கள் தங்களது அவயவங்களை இழந்து இப்பொழுது வலதுகுறைந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். வலதுகுறைந்த இராணுவ வீரர்களுக்கு இந்த வரவுசெலவுத் திட்டத்தில் விசேடமான திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று நாங்கள் வாசித்து அறிந்தோம். அப்படியானால் இந்த யுத்தத்திலே கோரமாகத் தாக்கப்பட்டு வலது குறைந்தவர்களாகத் தவிக்கின்ற அந்த அப்பாவி மக்களுக்கும் ஏன் ஒரு விசேட திட்டத்தை ஏற்படுத்த முடியாது என்று நாங்கள் கேட்கின்றோம். அதுமட்டுமல்ல இலங்கையிலே வேலைவாய்ப்புக்களை வழங்குகின்ற பொழுது வலதுகுறைந்தவர்களுக்கு 2 வீத வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இப்பொழுது இந்த நாட்டிலே வலதுகுறைந்தவர்கள் கூடுதலாக இருக்கின்ற காரணத்தினால் இந்த வீதத்தை 5 வீதமாக மாற்ற வேண்டும். அப்பொழுதே அந்த ஜீவன்களுக்கு நாங்கள் உதவி செய்யலாம். அதன்மூலம் அவர்களும் இந்த நாட்டிலே நல்ல முறையில் வாழலாம். எனவே, அந்த 2 வீதத்தை 5 வீதமாக மாற்றி அவர்களுக்கும் கூடுதலான தொழில் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் [illegible] கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம்.

அதேநேரத்தில், நீங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தையும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். உதாரணமாக யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்கள் எல்லோரும் தற்பொழுது, மீள்குடியமர்த்தப்பட்டு விட்டார்கள் என்று அரசாங்க அறிக்கை கூறுகின்றது.

ஆனால், அதேநேரத்தில் இன்னும் இரண்டாயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என்பதை, அண்மையில் நடைபெற்ற மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்திற்கு வருகைதந்த அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அறிந்தார்கள்.

அதுமட்டுமல்ல, நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் மீளக்குடியமர்த்தப்பட்டவர்களுக்கு கொடுக்கப்படவேண்டிய அமெரிக்க உதவிக் கொடுப்பனவு எனும் மீள்குடியமர்வுப் பணம் 747 மில்லியன் ரூபா மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வழங்கப்பட வேண்டியிருக்கின்றது என அந்தக் கூட்டத்திலே பிரஸ்தாபிக்கப்பட்டது.

மேலும் 5,047 மில்லியன் ரூபா, வீடுகள் திருத்தப்படுவதற்குக் கொடுக்கப்பட வேண்டியிருக்கின்றது. இவற்றுக்கெல்லாம் பணம் ஒதுக்கப்பட்டனவா? இல்லை.

அன்றைய கூட்டத்திலே, அமைச்சர்களால் இவ்வாறான கேள்விகளுக்கு மறுமொழி கொடுக்க முடியாமல் இருந்தது. அதற்கு முன்னர் மீள்குடியேற்ற அமைச்சர் கலந்துகொண்ட கூட்டத்தில்கூட இவ்வாறான கேள்விகளுக்கு சரியான பதில்களோ அல்லது ஒரு சதம் கூட இவற்றுக்காக ஒதுக்கப்படவில்லை என்ற துக்ககரமானதொரு செய்தியை நாங்கள் இந்த உயர் சபையிலே கூறிவைக்க விரும்புகின்றோம்.

ஆகவே, தயவுசெய்து இதனைக் கருத்தில்கொண்டு வடக்கு, கிழக்கு என்பன இந்த நாட்டினுடைய ஒருபகுதி என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்து விடைபெறுகின்றேன் - என்றார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவைப்பட்டால் இடதுசாரிகளுடனும் கைகோர்க்கத் தயார் என்கிறது பா.ஜ.க.



சென்னை, ஜூலை 07

மக்கள் பிரச்சினைக்காக இடதுசாரிகளுடன் கைகோர்க்கத் தயாராக உள்ளோம் - என்று பா.ஜ.கவின் தலைவர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.

மத்திய அரசைக் கண்டித்து பா.ஜ.க. மற்றும் கூட்டணிக் கட்சிகள், இடதுசாரிகள் இணைந்து நடத்திய பொது வேலை நிறுத்தம் காரணமாக டில்லியில் இயல்பு வாழ்க்கை முழு அளவில் முடங்கியது. மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகினர். வேலை நிறுத்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பா.ஜ. க. தலைவர் கட்காரி, கட்சியின் தகவல் தொடர்பாளர் ஜாவேத்கர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பா.ஜ.க., சிவசேனா, ஐக்கிய ஜனதா தளம், அகாலிதளம் உள்ளிட்ட கட்சிகள் ஓரணியாகவும், இடதுசாரிகள், சமாஜ்வாதி, தெலுங்கு தேசம், அ.தி.மு.க., மதசார்பற்ற ஜனதா தளம், இந்திய தேசிய லோக்தளம் உள்ளிட்ட பல கட்சிகள் மற்றொரு அணியாகவும்முழு அடைப்பை அறிவித்திருந்தன. இதனால் தலைநகர் டில்லியில் போக்குவரத்து முற்றிலுமாக முடங்கியது.

முக்கிய பகுதிககளில் பா.ஜ.க.வினரும் இடதுசாரிகளும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால், போக்குவரத்து ஸ்தம்பித்தது.

மேற்கு டில்லிப் பகுதியில் பா.ஜ.கவினர் பஸ் மறியலில் ஈடுபட்டதால், மக்கள் அவதிக்குள்ளாகினர். அதேபோல ஜனக்புரி மெட்ரோ நிலையத்தை பா.ஜ.கவினர் இழுத்துப் பூட்டிவிட்டனர். 15 நிமிடங்களுக்கு பின்னர் பொலிஸார் வந்து தலையிட்டதால் மீண்டும் மெட்ரோ ரயில் இயக்கப்பட்டது.

சாந்தினி சவுக்பகுதியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய பா.ஜ.கவின் தலைவர் நிதின் கட்காரி, மக்களின் பிரச்சினைக்காக யாருடன் வேண்டுமானாலும் பா.ஜ.க. கைகோர்க்க தயாராக உள்ளது. தேவைப்பட்டால் இடதுசாரிக் கட்சிகளுடனும் பேசத் தயாராக உள்ளேன் - என்று கூறினார்.

ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்குப் பின்னர் பா.ஜ.கவும் இடதுசாரிகளும் ஒரே நாளில் ஒருங்கிணைந்து முழு அடைப்பு நடத்தியுள்ளன. கடந்த ஏப்ரலில் நடந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் கூட, இடதுசாரிகள் மட்டுமே தனியாகப் பங்கேற்றன.

நேற்றுமுன்தினம் நடந்த வேலை நிறுத்தம் குறித்து மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் நிலோத்பல் பாசு கூறும்போது-

காங்கிரஸ் அல்லாத மாநிலங்களில் வேலைநிறுத்தம் முழு அளவில் வெற்றி பெற்றுள்ளது. வேலைநிறுத்தத்திற்கு முதல் நாள் பிரணாப் முகர்ஜி, ஒரு பைசா கூட விலையைக் குறைக்க மாட்டோம் என்று கூறினார். அவருக்கு மக்கள் சரியான பதிலடியைக் கொடுத்துள்ளனர் - என்று கூறினார்.

டில்லியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற ஐக்கிய ஜனதா தளத் தலைவர் சரத் யாதவும் கைதுசெய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் நடந்த முழு அடைப்புக் காரணமாக வர்த்தகத் துறையினருக்கு டில்லியில் 600 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

## பொது வேலைநிறுத்தத்தால் ரூ. 10 ஆயிரம் கோடி இழப்பு

டில்லி, ஜூலை 07

முழு அடைப்பால், நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 10 ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என இந்திய வர்த்தக மற்றும் தொழில் கூட்டமைப்பு (அசோசம்) தெரிவித்துள்ளது.

முழு அடைப்புக்கு பெரும்பாலான மாநிலங்களில் வரவேற்பு காணப்பட்டது. தமிழ்நாடு உள்ளிட்ட சில மாநிலங்களில் மட்டும் குறைவான ஆதரவு இருந்தது.

நேற்றுமுன்தினம் முழுவதும் உற்பத்தியே நடக்கவில்லை. நடப்பு நிதி யாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 50 லட்சம் கோடி ரூபாவாக நீடிக்கும் என்று வைத்துக்கொண்டால், இந்த முழு அடைப்பால், 10 ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கணிக்கலாம்.

- இப்படி அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியச் செய்திகள்

# பாமர மக்களைப் பற்றி கவலைப்படாது செயற்படுகின்றது ஐ.மு.கூட்டணி அரசு

## சுஷ்மா ஸ்வராஜ் குற்றச்சாட்டு



போபால், ஜூலை 07

பாமர மக்களைப் பற்றிக் கவலைப்படாத அரசாக மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு செயற்படுகிறது - என்று எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் குற்றம்சாட்டினார்.

மத்திய பிரதேச மாநிலத் தலைநகர் போபாலில் இதுகுறித்து செய்தியாளர்களிடம்சுஷ்மாஸ்வராஜ்கூறியவை வருமாறு -

சோம்பலில் திளைக்கும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசைத் தட்டி எழுப்புவதற்காக இந்தியா தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் குறிப்பாக பாமர மக்களைப் பற்றி சிறிதும் கவலைப்படாத அரசாக இது உள்ளது.

பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு போன்றவற்றின் விலை உயர்வால் நடுத்தர, ஏழை மக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்டுவர்ஸ்பதைஇந்தஅரசுஉணரவேயில்லை.

பெற்றோல், டீசல் விலை உயர்வால் அனைத்து அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. இதனால் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணிகள், குடும்ப பட்ஜெட்டைச் சமாளிக்க முடியாமல் திணறுகின்றனர். மத்திய பிரதேசத்தில் உள்ள வணிக நிறுவனங்கள் அனைத்தும் தாமாக முன்வந்து இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்றுள்ளன. தற்போதைய சூழலில் ஐக்கிய முற் போக்குக் கூட்டணி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும் திட்டம் ஏதுமில்லை. இருப் பினும் பல்வேறு எதிர்க்கட்சிகளுடன் இதுதொடர் பாக ஆலோசனை நடத்தப்பட்டு வருகி றது. நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடர் ஜூலை 26 ஆம் திகதி தொடங்குகிறது. அப்போது இது தொடர்பாக தீர்மானிக்கப்படும். - என்றார்.

# போர்க்களமானது திண்டுக்கல் பஸ்நிலையம் தி.மு.க.-கம்யூ. கட்சியினர் பயங்கர மோதல்!

## சரமாரியான கல்வீச்சுத் தாக்குதலில் 10 பேர் படுகாயம்

திண்டுக்கல், ஜூலை 07

தி.மு.க. - கம்யூனிஸ்ட் கட்சியினர் நேருக்கு நேர் மோதிக்கொண்ட சம்பவத்தால், திண்டுக்கல் பஸ் நிலையம் போர்க்களம்போலக் காட்சியளித்தது.

பெற்றோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து, திண்டுக்கல் மாவட்டத்தில் 55 இடங்களில் மறியல் போராட்டம் நடைபெற்றது. திண்டுக்கல் மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திண்டுக்கல் பஸ் நிலையத்தில் மறியல் போராட்டம் நடந்தது.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக அக்கட்சியினர் பேரணியாக வந்தனர். பஸ்நிலையத்தில் உள்ள கலெக்டர் முகாம் அலுவலகம் எதிரே தரையில் உட்கார்ந்தும், நடுவீதியில் படுத்தும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மறியல் செய்தனர். பஸ்நிலையத்தில் இருந்து பஸ்களை வெளியேறவிடாமல்அவர்கள்தடுத்தனர்.

இதற்கிடையே பஸ்நிலையம் எம்.ஜி.ஆர். சிலை அருகே பாரதீய ஜனதா கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து பாரதீய ஜனதா கட்சியினர் கோஷங்களை எழுப்பினர்.

இந்த நிலையில் திண்டுக்கல் நகராட்சி அலுவலகத்தில் இருந்து நகரசபை தலைவர் நடராஜன் தலைமையில், தி.மு.க. மாவட்ட துணைச் செயலாளர்கள் நாகராஜன், மணிமுருகன் மற்றும் தி.மு.க.வினர் பஸ் நிலையத்துக்கு ஊர்வலமாக வந்தனர்.

அப்போது எம்.ஜி.ஆர். சிலை அருகே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பாரதீய ஜனதா கட்சியினருக்கும், தி.மு.கவினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் ஒருவருக்கொருவர் தாக்கிக் கொண்டனர். இந்தத் தாக்குதலில் தி.மு.க. நகரத் துணைத் தலைவர் ராஜா காயம் அடைந்தார். அந்தக் கட்சியைச் சேர்ந்த திண்டுக்கல் நகர பிரதிநிதி ராஜேந்திரனின் ம்ண்டை உடைந்தது.

இதேபோல் பாரதீய ஜனதாக் கட்சியை சேர்ந்த கோட்டப் பொறுப்பாளர் நாகராஜனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. நகரத் தலைவர் தனபாலுவும் காயமடைந்தார். இதைத்தொடர்ந்து தி.மு.கவினர் எம்.ஜி.ஆர். சிலையில் இருந்து கிழக்குப்புறம் நோக்கி நடந்து வந்தனர்.

அதேநேரத்தில் இந்தியக் கம்யூ னிஸ்ட் கட்சியினர், அந்தக் கட்சியின் மாவட்டச் செயலாளர் தலைமையில் பஸ் நிலையத்தில் மறியலில் ஈடுபட ஊர்வலமாக வந்தனர். அப்போது தி. மு.கவினரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினரும் மோதிக்கொண்டனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினருடன், ஏற்கனவே மறியலில் ஈடுபட்டிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரும் சேர்ந்து கொண்டனர். இரு கம்யூனிஸ்ட் கட்சியினரும், தி.மு.கவினரும் மாறி மாறிக் கற்களை வீசித் தாக்குதலில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்த பயணிகள் நாலாபுறமும் அலறி அடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

இந்த மோதல் தொடர்பாக இருதரப்பினரும் நடவடிக்கை எடுக்கக்கோரி தனித் தனியாக மறியலில் ஈடுபட்டனர். இது குறித்து தகவல் அறிந்த மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் முத்துச்சாமி, தனது பொலிஸ் படையுடன் பஸ் நிலையத்துக்கு வந்தார். பின்னர் மோதலில் ஈடுபட்டவர்களுடன் அவர் பேச்சு நடத்திக்கொண்டிருந்தார்.

அப்போது பஸ் நிலையத்தில் உள்ள நகராட்சி விடுதியின் மாடியில் இருந்து கூட்டத்துக்குள் கற்கள் வீசப்பட்டன. இதைத்தொடர்ந்து அங்கு பதுங்கி இருந்த கும்பலை பொலிஸார் விரட்டி அடித்தனர்.

பஸ்நிலையத்தில் இருந்து வெளியே செல்லாமல் பஸ்களும் சிறிது நேரம் நிறுத்தி வைக்கப்பட்டன. இந்த மோதலில் தி.மு.க., பாரதீய ஜனதா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த 10 பேர் படுகாயம் அடைந்தனர்.

# தற்போதைய ஆட்சியாளர்கள் பழையகாலத்து மன்னர்களைப் பார்த்து பாடம் கற்க வேண்டும்

## ஜனாதிபதி பிரதிபா கூறுகிறார்

ஹைதராபாத், ஜூலை 07

தற்போதைய ஆட்சியாளர்கள் நமது பழங்கால மன்னர்களை பார்த்து நிறைய கற்றுக் கொள்ள வேண்டும் - என்று குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் கூறியுள்ளார்.

15 ஆம் நூற்றாண்டில் விஜய நகர பேரரசை ஆண்ட கிருஷ்ண தேவராயர் முடி சூடிக் கொண்ட 500 ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டங்கள் ஆந்திராவில் ஒரு மாதம் நடைபெற உள்ளன. இந்தக் கொண்டாட்டங்களின் தொடக்க விழா திங்கட்கிழமை ஹைதராபாத்தில் நடைபெற்றது. இதை குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் தொடக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் அவர் பேசியவை வருமாறு -

கிருஷ்ண தேவராயர் வீரம் மிக்க அரசர், சிறந்த நிர்வாகி. கிழக்கில் கட்டாக் முதல் மேற்கில் கோவா வரையும், வடக்கில் ராய்ச்சூர் படுகை முதல் தெற்கில் இந்தியப் பெருங்கடல் வரையும் தனது எல்லையை விரிவு படுத்தினார். இந்தியாவில் பயணம் மேற்கொண்ட போர்ச்சுகீசிய அறிஞர் டோமிங்கோ பயஸ், கிருஷ்ண தேவராயர் மிகச் சிறந்த ஆட்சியாளர். அவர் நீதி வழுவாதவர் - அனைவராலும் விரும்பப்பட்டவர் என்று புகழ்ந்துரைத்துள்ளார்.

மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது உள்ளிட்ட பல்வேறு நிர்வாக விடயங்களை நமது பழங்கால மன்னர்களைப் பார்த்து இன்றைய ஆட்சியாளர்கள் கற்றுக் கொள்ள ணேவண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் வெண்கலத்தால் வடிவமைக்கப்பட்ட கிருஷ்ண தேவராயரின் உருவச் சிலையை பிரதிபா பாட்டீல் திறந்து வைத்தார்.

விழாவில் பேசிய ஆந்திர முதல்வர் ரோசய்யா, கிருஷ்ண தேவராயரின் தலைசிறந்த ஆளுமையால் அவரை இன்னமும் மக்கள் நினைத்துப் போற்றுகின்றனர். ஒரு மாத காலம் ஆந்திரா முழுவதும் சிறப்பாக நடைபெற உள்ள இந்தக் கொண்டாட்டங்கள் விஜயநகரப் பேரரசின் இரண்டாவது தலைநகரமாக விளங்கிய பெனுகொன்டாவில் நிறைவுபெறும் - என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதல் சம்பவத்துக்கு மன்னிப்புக் கோரவேண்டும்

## இஸ்ரேலிடம் துருக்கி கோரிக்கை

அங்காரா, ஜூலை 07

காஸாவுக்கு உதவிப் பொருட்களை ஏற்றிச் சென்ற கப்பல் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்திய சம்பவத்துக்கு அது மன் னிப்பு கேட்கவேண்டும். இல்லையேல், இஸ்ரேலுடனான அனைத்து உறவுகளும் துண்டிக்கப்பட்டுவிடும் என துருக்கி அறிவித்துள்ளது.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் கடந்த மே மாதம் காஸா பகுதிக்கு உதவிப் பொருள்களை ஏற்றிக்கொண்டு துருக்கி கப்பலில் சென்றுகொண்டிருந்தனர்.

அப்போது அக்கப்பலை வழிமறித்த இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்தினர். இதில் கப்பலிலிருந்த 16 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் 9 பேர் துருக்கியைச் சேர்ந்தவர்கள்.

இந்தச் சம்பவத்துக்கு இஸ்ரேல் மன்னிப்பு கேட்கவேண்டும் என்று துருக்கி தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. இந்நிலையில், இந்தத் தாக்குதலுக்கு எக்காரணம் கொண்டும் மன்னிப்பு கேட்கப் போவதில்லை என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இதுகுறித்து துருக்கி வெளியுறவு அமைச்சர் அகமது தவுடோகுலு பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ளார். அதில் அவர், ''இஸ்ரேலுடனான உறவு தொடர வேண்டுமானால் மே 31ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு இஸ்ரேல் சம்மதம் தெரிவிக்க வேண்டும்'' எனக் கோரியுள்ளார்.

''இஸ்ரேல் மன்னிப்பு கேட்கவேண்டும் என்பதை வலியுறுத்தி தற்போது துருக்கி வான்வெளியில் இஸ்ரேலிய போர் விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது'' என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

துருக்கி வெளியுறவு அமைச்சரின் கருத்துக் குறித்து இஸ்ரேலிய மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிடுகையில், ''இஸ்ரேல் ஒரு போதும் மன்னிப்பு கோராது'' எனத் திட்டவட்டமாக அறிவித்தார்.

இஸ்ரேலும் துருக்கியும் அரசியல், பொருளாதாரம், வர்த்தகம் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயற்பட்டு வந்தன. காஸா பிரச்சினையால் கடந்த சில ஆண்டுகளாகவே இருநாடுகளுக்குமிடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

மே மாதம் நிகழ்ந்த கப்பல் தாக்குதல் சம்பவத்துக்குப் பின்னர் நிலைமை மேலும் மோசமாகியுள்ளது.

## ருமேனியாவில் விமான விபத்து: 10 பேர் உயிரிழப்பு

புகாரெஸ்ட் (ருமேனியா), ஜூலை 07

ருமேனியாவில் இராணுவ விமானம் திங்கட்கிழமை விபத்துக்குள்ளானது. இதில் பயணம் செய்த 10 பேர் உயிரிழந்தனர். 3 பேர் காயமடைந்தனர்.

ஏ.என்-2 எனப்படும் அந்த இராணுவ விமானத்தில் 9 பாராசூட் வீரர்களும், 4 சிப்பந்திகளும் இருந்தனர். விமானம் தரையிலிருந்து மேலே எழும்பிய சிறிது நேரத்திலேயே, கட்டுப்பாட்டை இழந்து, கீழே விழுந்து தீப்பிடித்தது.

இதில் 3 பாராசூட் வீரர்கள் மட்டும் விமானத்திலிருந்து கீழே குதித்து உயிர் தப்பினர். இருப்பினும், பலத்த காயமடைந்ததால் மூவரும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் சுயநினைவை இழந்துள்ளார். பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் இத்தகவல்களை வெளியிட்டன.



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, வாஷிங்டனில் உள்ள வெள்ளைமாளிகை முன் நாட்டு மக்களுடன் சுதந்திர தின வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்கிறார்.

# தீவிரவாத இயக்கங்களை அடியோடு ஒடுக்கப் பாகிஸ்தானில் அதிரடிப்படை!

இஸ்லாமாபாத், ஜூ 07

பாகிஸ்தானில் செயற்படும் 17 பயங்கரவாத அமைப்புகளை ஒடுக்க அதிரடிப் படை அமைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தீவிரவாதிகளின் சொர்க்க பூமியாக உள்ளது என அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன. இங்கு செயற்படும் ஜமாத்-உத்-தாவா உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகள் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றன.

அல்-குவைதா, தலிபான் அமைப்புகளுக்கு சர்வதேச ரீதியாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த அமைப்புகள் பல்வேறு பெயர்களில் பாகிஸ்தானில் இஸ்லாமிய அமைப்புகள் என்ற போர்வையில் செயற்பட்டு வருகின்றன.

லாகூரில் கடந்த வாரம் வழிபாட்டுத் தலத்தின் மீது தீவிரவாதிகள் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தினர். இதில் 45 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாண அரசு, தீவிரவாதிகளுக்கு ஆதரவாக செயற்படுகிறது என்ற குற்றச்சாட்டு எழுந்ததால் அம்மாநில அரசு, பாகிஸ்தான் அரசுடன் இணைந்து அதிரடிப் படையை உருவாக்கியுள்ளது.

இந்த அதிரடிப் படை பாகிஸ்தானில்

**உலக அரங்கில்**

செயல்படும் 17 பயங்கரவாத அமைப்புகளை ஒடுக்க நடவடிக்கை மேற்கொள்ளும். இந்த பயங்கரவாத அமைப்புகளைச் சேர்ந்தவர்களின் நடமாட்டம் குறித்தும், அவர்களுக்கு நிதி உதவி செய்பவர்கள் குறித்தும் அதிரடிப் படையினர் புலனாய்வு நிறுவனத்துக்கும், பொலிஸ் தலைமையகத்துக்கும் தகவல் கொடுப்பர்.

# சீன இஸ்லாமிய தீவிரவாதிகள் பாக். தலிபான் முகாமில் பயிற்சி

பீஜிங், ஜூலை 07

சீனாவில் தனிநாடு கோரும் இஸ்லாமிய தீவிரவாதிகள், பாகிஸ்தானிலுள்ள தலிபான்களின் முகாமில் பயிற்சி பெற்று வருகின்றனர் என பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

சீனாவின் ஜின்ஜியாங் மாகாணம், ரஷ்ய எல்லையையொட்டி அமைந்துள்ளது. இந்த மாகாணத்தில் வசிக்கும் துருக்கிய வழித்தோன்றல்களான முஸ்லிம்கள், தனிநாடு கோரி கடந்த ஆண்டு போராட்டம் நடத்தினர். இதனால் எழுந்த கலவரத்தில், 200 பேர் கொல்லப்பட்டனர்.

இதுபோன்ற சம்பவம் மீண்டும் நடக்கக் கூடாது என்பதற்காக, சீன அரசு இந்த மாகாணத்தின் தலைநகர் உரும்குய் பகுதியை 40 ஆயிரம் இரகசிய படப்பிடிப்பு கருவிகள் மூலம் கண்காணித்து வருகிறது; கடும் கெடுபிடியும் உள்ளது.

இதற்கிடையே தனிநாடு கோரிய முஸ்லிம்களின் தலைவர்கள், பாகிஸ்தானில் செயற்படும் தலிபான்களின் முகாமில் பயிற்சி பெற்று வருகிறார்கள் என இப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

கிழக்கு துர்கிஸ்தான் முஸ்லிம் இயக்க தீவிரவாதிகள் 320 பேர் தற்போது பாகிஸ்தானில் தலிபான்களின் இயக்கத்தில், 'சீனப்படை' என்ற பெயரில் செயற்பட்டு வருகின்றனர் என்றும் இந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# ஈரானிய விமானங்களுக்கு பெற்றோல் நிரப்ப மறுப்பு

பிரிட்டன், ஜேர்மனி மற்றும் ஐக்கிய அரபு நாடுகளில் ஈரான் விமானங்களுக்குப் பெற்றோல் நிரப்ப மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் தனது அணுசக்தி கொள்கையில் பலமாக உள்ளது. அதனால், அமெரிக்காவின் நிர்ப்பந்தத்துக்கு அது அடிபணியவில்லை. இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா, ஈரான் மீது ஒருதலைபட்சமான சட்டத்தை இயற்றியுள்ளது. அதன்படி ஈரானுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படமாட்டா.

இதைத்தொடர்ந்து அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளிடமிருந்து ஈரான் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது. ஐரோப்பிய நாடுகளுக்கு ஈரான் அரசு விமானங்களும், தனியார் விமானங்களும் சென்று வருகின்றன. இதனால் அங்கு வாழும் ஈரானியர்கள் தங்கள் நாட்டுக்குச் சென்றுவர வசதியாக இருந்து வருகிறது. தற்போது கோடை விடுமுறையாதலால் ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஏராள மானவர்கள் ஈரானுக்கு வருகின்றனர். எனவே, பெருமளவில் ஈரானிய பயணிகள் விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

எனினும், அந்த விமானங்களுக்குப் பிரிட்டன், ஜேர்மனி மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளில் பெற்றோல் நிரப்ப மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரானுக்கு எதிராக அமெரிக்கா எடுத்துள்ள நடவடிக்கைக்குப் பின்னர்தான் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு ஈரான் விமானப் பயணிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடு ஈரானுடன் வர்த்தக ரீதியான தொடர்பு வைத்துள்ளது. ஐரோப்பிய நாடுகளுடன் சேர்ந்து இதுபோன்ற நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் எமிரேட்ஸ் பொருளாதார குற்றம் இழைத்துவிட்டது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

அதன் விளைவை அந்நாடு விரைவில் சந்திக்கும் என ஈரானைச் சேர்ந்த எம்.பி. பெர்வேஷ் சோரோரி தெரிவித்துள்ளார்.

# 6 ஆவது வாழும் புத்தராக திபெத்திய 4 வயதுச் சிறுவன் தெரிவு

பீஜிங், ஜூலை 07

திபெத்தில் 6 ஆவது வாழும் புத்தர் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு வயது நான்கு.

சீனாவிலுள்ள திபெத்தில் புத்தமதத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு சிறுவனை தேர்ந்தெடுத்து அவனை புத்தரின் மறு அவதாரமாகக் கருதி வழிபடுவது வழக்கம். அதன்படி கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு சிறுவன் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

அவனை 5ஆவது வாழும் புத்தராக மதித்து மக்கள் வணங்கி வந்தனர். அந்தச் சிறுவனுக்கு இப்போது 20 வயது ஆகிறது. எனவே புதிதாக ஒரு சிறுவனை வாழும் புத்தராகத் தெரிவு செய்ய முடிவு எடுக்கப்பட்டது.

இதற்காக பல ஆண்டுகளாக தெய்வீக அம்சம் பொருந்திய சிறுவனை சீன அரசும், புத்தமத குருக்களும் தேடி வந்தனர். இந்தத் தேடுதல் முயற்சியில், 2 சிறுவர்கள் இறுதி செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவரை குலுக்கல் மூலம் தெரிவு செய்தனர்.

இதற்கான குலுக்கல் திபெத் தலைநகர் லாசாவிலுள்ள ஜோக்காங் கோவிலில் நடந்தது. இருவருடைய பெயர்களும் 2 தனித்தனிச் சீட்டுகளில் எழுதப்பட்டு அவை ஒவ்வொன்றும் தனித்தனியாக 2 பட்டுப்பைகளில் போடப்பட்டு தங்கப் பாத்திரத்தில் வைக்கப்பட்டது.

தலாய்லாமாவின் வாரிசாக சீன அரசால் அடையாளம் காட்டப்பட்ட 11ஆவது பஞ்சன்லாமா இந்த 2 பைகளில் ஒரு பையை எடுத்தார். அதில் லோசாங் டோஜே என்ற 4 வயது சிறுவனின் பெயர் எழுதப்பட்ட சீட்டு இருந்தது. அவர் 6ஆவது வாழும் புத்தராக தெரிவுசெய்யப்பட்டார்.

## 2 கோடி ரூபா நிர்ணயிக்கப்பட்ட தலிபான் தளபதி சுட்டுக்கொலை

பாகிஸ்தானின் வட வசிரிஸ்தான் பகுதியில் மிரான்ஷா நகரில் பாதுகாப்புப் படையினருடன் நடைபெற்ற மோதலில் தலிபான் முக்கிய தளபதி அமீருல்லா மசூத் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் பாதுகாப்புப் படையினர் மீதான தாக்குதலிலும், பணத்துக்காக ஆள் கடத்தலிலும், இதர தேச விரோத நடவடிக்கைகளிலும் சம்பந்தப்பட்டவர். அதனால், இராணுவத்தால் தேடப்படும் 19 தலிபான் தளபதிகள் பட்டியலில் இவரது பெயர் 11 ஆவதாக இடம்பெற்றிருந்தது.

19 பேரையும் உயிருடனோ, பிணமாகவோ பிடிக்கும் வகையில் துப்பு தருவோருக்கு ரூபா 23 கோடி பரிசு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இவர்களில் அமீருல்லா மசூத் தலைக்கு மட்டும் ரூபா 2 கோடி விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

# வடக்கு, கிழக்கு....

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வன்னிப்பகுதியில் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவது குறித்து கல்வியமைச்சர் தலைமையில் உயர்மட்ட கூட்டம் ஒன்று நடத்தப்பட வேண்டும். அதில் வட மாகாண ஆளுநர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்விப் பணிப்பாளர் ஆகியோர் பங்குபற்றி அப்பகுதியில் கல்விப் பிரச்சினைக்கு உரிய தீர்வினைக் காண முன்வர வேண்டும் இத்தகைய செயற்பாட்டின் மூலம் அங்குள்ள குறைபாடுகளை அறிந்து அதனை நிவர்த்திக்க வழி ஏற்படும்.

வன்னியில் பாடசாலைகள் மற்றும் கல்விப் பணிமனைகளில் இருந்த ஆவணங்கள் அழிவடைந்துள்ளமையால் ஆசிரியர்கள் தமது ஓய்வூதியத்தைக் கூடப் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. யுத்தத்தில் அவயவங்களை இழந்த பல மாணவர்கள் கல்வியைத் தொடரமுடியாத நிலையில் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இவர்களுக்கு விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

கல்வித் துறைகளில் வேலை வாய்ப்புகள் வழங்கப்படும் போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு நான் கல்வியமைச்சரையும் உயர்கல்வியமைச்சரையும் கேட்டுக் கொள்கின்றேன். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வியைத் தொடர்வதற்கான புத்தகங்கள், சீருடைகள் என்பன வழங்கப்பட வேண்டும். இதற்கெனவும் விசேட திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### விளையாட்டுத்துறை

வடக்கு, கிழக்கில் மாணவர்கள் மத்தியில் விளையாட்டுத் திறன் ஓங்கிக் காணப்படுகின்ற போதிலும் தேசிய மட்டப் போட்டிகளிலும் சர்வதேச மட்டப் போட்டிகளிலும் அவர்களுக்குப் பங்குபற்றுவதற்கு உரிய சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதில்லை. இதற்கும் யுத்தம் ஒரு காரணமாக இதுவரை கூறப்பட்டு வந்தது. ஆனால் தற்போது அந்த நிலை மாறியுள்ளது. எனவே யாழ்.குடாநாடு உட்பட வடக்கு, கிழக்கில் விளையாட்டுத் துறையினை ஊக்குவிக்க விளையாட்டுத் துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வடக்கு, கிழக்கில் கல்வியை மேம்படுத்தவும் விளையாட்டுத்துறை அபிவிருத்தி செய்யவும் உரிய நடவடிக்கை அரசாங்கம் எடுப்பதன் மூலம் தமிழ் மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். எனவே வரலாற்றுத் தவறுகளைப் படிப்பினையாகக் கொண்டு அரசாங்கம் இனியாவது செயற்பட வேண்டும். இதன் மூலமே நாட்டில் இன பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும். தமிழ் மக்கள் கல்வியில் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படக்கூடாது - என்றார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் பாதுகாப்பு வலயங்களில் மீளக்குடியமர்வை விரைவுபடுத்தக் கோரி பேரணிகள் நடத்த ஏற்பாடு

## நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் சிவாஜிலிங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 07

வடக்கு, கிழக்குப் பகுதியிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துதலை துரிதப்படுத்தல், அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை மற்றும் காணாமற் போனோர்கள் விவரம் வெளியிடப்பட வேண்டும் போன்ற காரணங்களை வலியுறுத்தி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

தமிழ்த் தேசிய விடுதலை கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகாந்தாவின் ஆனைப்பந்தி இல்லத்தில் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

அங்கு சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தவை வருமாறு:

போருக்குப் பிந்திய காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் விதமாக அரசு ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மீள்குடியேற்றம் என்பது அரசினது கண்துடைப்பு வேலையாகும். இரண்டரை லட்சம் மக்கள் மீளக் குடியேற்றம் என்ற பெயரில் எவ்வித உதவிகளும் இல்லாத நிலையில் விடப்பட்டுள்ளனர். அரசு தானும் உதவாமல் சர்வதேச நிறுவனங்களையும் உதவ விடாமல் செயற்படுகிறது.

வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் புதிது புதிதாக இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்றன. இராணுவத்திற்கென நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவித்தல்களும் மக்கள் பார்வைக்காக பல இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

**மக்கள் குடியேற அனுமதியில்லை**

மாங்குளம்-முறிகண்டி வரையிலும் ஏ-9 வீதிக்கு கிழக்கு பகுதியில் மக்களை குடியேற விடவில்லை. அங்கு 12 ஆயிரம் இராணுவத்தினரின் குடும்பங்களை குடியமர்த்த விடுதிகள் அமைக்கப்படவுள்ளன. தற்போது ஐந்தாயிரம் இராணுவத்தினருக்கு விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன இதை அரசு உறுதிப்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கையானது எமது பகுதி களில் தமிழ் மக்களை சிறுபான்மை இன மாக்கி சிங்களக் குடியேற்றங்களை அமைக்கும் திட்டமாகும்.

அத்துடன் கைதுசெய்யப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், கைது செய்யப்பட்டு காணமற் போனோர் விவரத்தை உடனடியாக வெளியிட வேண்டும்.

இவற்றைத் துரிதப்படுத்தக் கோரி தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு இடது சாரி முன்னனியுடன் இணைந்து ஓகஸ்ட் 2 ஆம் திகதி யாழ்பாணத் தில் ஆர்ப்பாட்ட பேரணி நடத்தஏற்பாடாகியுள்ளது. இதேபோன்ற பேரணிகள் ஏனைய மாவட்டங்களிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்

**தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும்**

மேலும் தற்போது உருவாக்கப்பட்டுள்ள தமிழ்க்கட்சிகளின் ஒன்றியத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் மற்றும் ஏனைய இணையாத கட்சிகளையும் இணையுமாறு கேட்கிறோம்.அந்தக் கட்சிகளுக்கான கதவு திறந்துள்ளது. தமிழ்மக்களின் ஆணை கிடைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த ஒன்றியத்துடன் இணைவதன் மூலமே எமது செயற்பாடுகள் முழுமை பெறும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இதில் இணையாவிட்டால் ஒன்றியத்தால் பெரிதாக எதனையும் சாதிக்க முடியாது. அத்துடன் அரசியல் தீர்வுக்காகவும் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையிலும் உருவாக்கப்பட்ட ஒன்றியம் தேர்தலை இலக்காக கொண்டு அமைக்கப்பட்டது அல்ல.

இதில் தற்பொழுது ஒன்பது கட்சிகள் இணைந்துள்ளன. இதில் கே.பி.யையும் கருணாவையும் சேர்த்துக் கொள்ளுமாறு டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டார் ஆனால் நாம் கூடி கலந்தாலோசித்து அதனை நிராகரித்துவிட்டோம்.

இதேவேளை சர்வதேச விதிமுறைகளை மீறி அடையாளச் சின்னங்களை அழிக்கும் செயலில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. இது தமிழ் மக்களின் மனங்களை நோகடிக்கும் செயலாகும். தீருவிலிலுள்ள பன்னிரு வேங்கைகளின் நினைவாலயம் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல அடையாளச் சின்னங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இது கண்டனத்திற்குரியது-என்றார். (ஒ-14)

# குடாநாட்டின் அபிவிருத்தி தொடர்பாக மலேசியப் பிரதிநிதிகள் நேற்று ஆராய்வு

## யாழ்.நூலகத்திற்கு நான்காயிரம் புத்தகங்களும் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 07

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாக மலேசிய இலங்கை நிறுவனங்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் யாழ்.மாவட்டத்தின் அரச பிரதிநிதிகளுடன்நேற்றுக் கலந்துரையாடினர்.

யாழ்.மாநகர ஆணையாளர் மு.வ.சரவணபவ தலைமையில் நேற்று யாழ்.நுலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மலேசிய பிரதிநிதிகள் குழுவின் தலைவரான பட்டோ எஸ்.குலசேகரன் மற்றும் பிரதிநிதிகளான ஞானராஜ், மகேந்திரன், ஈஸ்வரசர்மா, சற்குணராஜா ஆகியோரும்-

யாழ்.மாவட்டப் பிரதேசங்களின் அரச பிரதிநிதிகள், மதகுருமார்கள், வர்த்தக சங்கப் பிரமுகர்கள் மற்றும் பலர் இக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

இக்கலந்துரையாடலில் ஒவ்வொரு பிரதேசப் பிரதிநிதிகளும் தமது பகுதிகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக மலேசியப் பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறினர்.

இங்கு வருகைதந்த இப்பிரதிநிதிகள் முற்பகல் 10 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் வைத்து ஐந்து பாடசாலைகளுக்குக் கணனிகளை அன்பளிப்புச் செய்தனர்.

தொடர்ந்து, "கல்வி அறிவு மூலமாக சமூகங்களைக் கட்டியெழுப்புதல்" என்ற திட்டத்தின் கீழ் மலேஷியப் பிரதிநிதிகள் கொழும்பு மேற்கு றோட்டறிக் கழகத்துடன் இணைந்து யாழ். பொது நூலகத்துக்கு சுமார் நான்காயிரம் புத்தகங்களை அன்பளிப்புச் செய்தனர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுடன் படை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

நூலகத்துக்கான நூல்களை மலேசியப் பிரதிநிதிகள் குழுத்தலைவர் பட்டோ எஸ். குலசேகரன், யாழ்.பொதுநூலகப் பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கத்திடம் கையளித்தார்.

தொடர்ந்து யாழ். மாவட்ட படையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் மலேஷியப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ஒ-16)



நேற்று நாடாளுமன்றத்தின் முன்பாக 'ஜனாதிபதியின் குடும்ப ஆட்சியை ஒழிப்போம்' என்ற கோஷத்தை முன்வைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய போது...

# அவசரகால நிலைமையை எதிர்கொள்ள செஞ்சிலுவைக்குழு பல்வேறு உதவிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணத்தில் அவசரகால நிலைமைகளை எதிர்கொள்ள வசதியாக உறைவிட மற்றும் நீர் விநியோகத்துக்கான உபகரணங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

யாழ்ப்பாண ஐ.சி.ஆர்.சி. பணியகம் தற்காலிக உறைவிடங்கள் மற்றும் நீர் விநியோகத்துக்கான உபகரணங்களை தனது முதன்மைப் பங்காளியான இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபைக்கும் நன்கொடையாக வழங்கியுள்ளது. எதிர்காலங்களில் யாழ். குடாநாட்டின் அவசரகால நிலைமைகளின்போது இந்நிறுவனங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு இக்கருவிகள் உபயோகமுள்ளதாயிருக்கும்.

இ.செ.சங்கத்துக்கு வழங்கியவைகளில் குடும்பத்துக்கான 225 கூடாரங்களும், 385 தார்பொலின் விரிப்புகளும் அடங்கும். அத்துடன் 1000 கி.சிமெந்து, 925 கி. ஆணிகள் மற்றும் உறைவிடங்கள் நிறுவதற்கு உதவும் அரிவாள்கள், சுத்தியல்கள், அலவாங்கு மற்றும் மண்வெட்டிகள் போன்றனவும் நன்கொடையில் வழங்கப்பட்டன. அவசரகால நிலைமைகளில் உறைவிடங்கள் அமைக்க 250 குடும்பங்களுக்கு இவை உபயோகமளிக்கும். யாழ். குடா நாட்டில் கிணறுகளைச் சுத்தம் செய்வதற்கு உதவியாக இ.செ. சங்கம் ஐந்து நீர்ப்பம்பிகளையும் பெற்றுக்கொண்டது.

நன்கொடையின் ஒரு பகுதியாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபைக்கு மொத்தம் 34,000 லீற்றர் நீரைச் சேமித்து வைக்கக்கூடிய 11 நீர்கொள்கலன்களையும் ஐ.சி.ஆர்.சி. வழங்கியது. இதன் மூலம் ஒருவருக்கு நாளாந்தம் 15 லீற்றர் வீதம், 2500 பேருக்கு குடிநீர் கிடைக்க வசதி கிட்டும். இச்சபை மேலும் 2 நீர்ப்பம்பிகளை ஐ.சி. ஆர்.சி.யிடமிருந்து பெற்றுக்கொண்டது.

''ஐ.சி.ஆர்.சியுடன் நெருங்கிய பங்காளியாகப் பணியாற்றும் இ.செ.சங்கத்தின் அனர்த்த பதிலிறுப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் ஆற்றலை மேம்படுத்த இந்த அவ சரகாலத்துக்கான உபகரணங்கள் பயனளிக்கும்.'' எனவும் ''தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபைக்கு இன்னும் அனேகமானோர்க்கும் அவசரகால நிலைமைகளில் குடிதண்ணீர் வழங்க இது வசதியளிக்கும்'' என்றும் ஐ.சி.ஆர்.சியின் யாழ்ப்பாணப் பணியக முதல்வர் புளோறன்ஸ் கிலேட் அம்மையார் தெரிவித்தார்.

யுத்தம் முடிவுக்கு வந்ததும் உருவான தேவைகளை எதிர்கொண்ட நாடுகளில் பணியாற்றிய விசாலமான அனுபவம் ஐ.சி.ஆர்.சி.க்கு உண்டு. இந்நிறுவனம் இலங்கையில் 1989 முதல் பணியாற்றி வருகிறது. தனிப்பட்டோரதும் சமூகங்களினதும் மனிதாபிமான தேவைகளில் தொடர்ந்தும் உதவிகளை அதிகாரிகளின் சம்மதத்துடன் வழங்க இது காத்து நிற்கிறது - என்றுள்ளது. (1)

# முக்கிய பதவிகளுக்கு போட்டி ஏற்பட்டால் ரகசிய வாக்கெடுப்பு

## ஐ.தே.க. மறுசீரமைப்புக் குழு சிபாரிசு

கொழும்பு, ஜூலை 07

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளுக்கு வாக்கெடுப்பு மூலம் தெரிவு இடம்பெறும்போது ஒருவருக்கு மேல் போட்டியிட்டால் அப்பதவிகளுக்கு இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என கட்சியின் மறுசீரமைப்புக் குழு சிபார்சு செய்துள்ளது என ஐ.தே.கட்சிப் பேச்சாளர் கயந்த கருணாதிலக எம்.பி. நேற்றுத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கட்சியின் முக்கிய பதவிகளுக்கு ஒருவருக்கு மேற்பட்டோர் போட்டியிட முன்வந்தால் அவர்களுடன் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி பதவிக்கு ஒருவரைப் போட்டியின்றித் தெரிவு செய்யலாம். இணக்கப்பாடு ஏற்படாவிட்டால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

பொதுச் செயலாளரைத் தெரிவு செய்யும்போது தலைவர் செயற்குழுவுடன் ஆலோசனை நடத்தி அவர்களின் இணக்கப்பாட்டுடன் செயலாளரைப் போட்டியின்றித் தெரிவு செய்யமுடியும். இதிலும் இணக்கப்பாடு ஏற்படாவிட்டால் இதற்கும் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

ஐ.தே.கட்சியின் செயற்குழுவுக்கு 86பேர் தெரிவுசெய்யப்படுவர். இவர்களில் 20 பேரைத் தலைவர் நேரடியாகத் தெரிவு செய்வார். ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்படவேண்டும். மேலும் பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு இடம்பெறவேண்டும் எனவும் மறுசீரமைப்புக் குழு சிபார்சு செய்துள்ளது.

இதேவேளை, 14 பேரைக் கொண்ட அரசியல் குழுவொன்றும் நியமிக்கப்படும். இதில் ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர்.

இதேவேளை, கட்சியின் தலைவர், செயலாளர், தவிசாளர் உட்பட முக்கியஸ்தர்கள் ஆறுபேரைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் எனவும் மறுசீரமைப்புக்குழு சிபார்சு செய்துள்ளது. ஆலோசனைக் குழுவே முக்கிய முடிவுகளை எடுக்கும்.

ஐ.தே.கட்சியை மறுசீரமைப்பு செய்வது குறித்து சிபார்சுகளை முன்வைக்க ஜோஸப் மைக்கல் பெரேரா எம்.பி. தலைமையில் அறுவரைக் கொண்ட குழு தனது சிபார்சுகளை ஓர் அறிக்கையாக நேற்று முன்தினம் மாலை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வைத்து கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தது.

மறுசீரமைப்புக் குழுவின் சிபார்சுகள் எதிர்வரும் செயற்குழுவில் ஆராயப்படும். அவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என செயற்குழு கருதினால் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் கட்சி மாநாட்டில் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படும். மாநாட்டில் திருத்தங்கள் ஏற்றுக்கொண்ட பின்னர் கட்சியின் யாப்பில் திருத்தங்கள் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதமுனையில் குடும்பத்தவர்களை அச்சுறுத்தி சித்தன்கேணியில் நகைகள், பணம் கொள்ளை

சித்தன்கேணி, ஜூலை 7

ஆயுதமுனையில் குடும்பத்தவர்களை அச்சுறுத்தி நகைகள், பணம், கைத்தொலைபேசி என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றது ஆயுதக் குழு ஒன்று.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணிக்குச் சித்தன்கேணியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

நேற்று அதிகாலை 2 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரின் வீட்டின் கதவுகளை உடைத்துக் கொண்டு வாள், கத்தி, பொல்லுகள் சகிதம் நுழைந்தது ஒரு கும்பல்.

ஆசிரியரின் தந்தையான சிவபாதம் (வயது 65) என்பவரைப் பொல்லால் தாக்கிக் காயப்படுத்திவிட்டு ஆசிரியரையும் அவரின் மனைவி பிள்ளைகளையும் ஆயுத முனையில் மிரட்டிய கும்பல் 31 பவுண் நகை, 2500 ரூபா பணம், கையடக்கத் தொலைபேசி, சைக்கிள் என்பவற்றைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றது.

குடும்பத்தினரை ஆயுதமுனையில் பிடித்து வைத்திருந்த கொள்ளையர் அலுமாரிகள், உடைகள் என்பவற்றையும் ஆராய்ந்த பின்பே சென்றனர்.

தொலைபேசி மூலம் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் கொள்ளையர்கள் விட்டுச் சென்ற கொக்ககோலா போத்தல், அலவாங்கு, ரெஸ்ரர் (மின் பரிசோதிக்கும் கருவி), பொல்லுகள் போன்ற தடயங்களை எடுத்துச் சென்றனர்.

கொள்ளையரின் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்த முதியவர் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (6-119)

## ஐ.தே. கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரைக் கொடுத்தாவது ஜனநாயகத்தைக் காப்போம், ஒரு குடும்பத்தின் நலனுக்காக கொண்டுவரப்படவுள்ள அரசமைப்புத் திருத்தத்தைத் தடுப்போம் என ஒருமித்த குரலில் உறுதியெடுத்துக் கொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இங்கு கூடியிருந்த எம்.பிக்கள் மத்தியில் உரையாற்றினார்.

✱குடும்ப நலனுக்காக ஜனநாயகத்தைப் பலியிடாதே!

✱17ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்து!

✱குடும்பத்தின் எதிர்காலத்துக்காக நாட்டின் எதிர்காலத்தைப் பலியிடாதே!

✱ திருட்டுத்தனமான அரசமைப்புத் திருத்தங்களை வாபஸ் பெறு!

மேற்கண்ட வாசகங்களுடனான சுலோக அட்டைகளை ஐ.தே.கட்சி எம்.பிக்கள் ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்களிடமிருந்த சுலோக அட்டைகளில் தனிச்சிங்கள எழுத்துகள் மாத்திரமே இடம்பெற்றிருந்தன. தமிழ் அல்லது ஆங்கில எழுத்துகள் இடம்பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## ஐ.நா. நிபுணர்குழு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசிவருகின்றோம்.

எனினும் எமது பணியாளர்கள் குறித்து எமக்கு முழுமையான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. எங்களுக்கு தெரிந்தவகையில் இன்றைய (அதாவது நேற்றைய) சம்பவத்தில் எவரும் பாதிக்கப்படவில்லை.

ஆனால் அவர்கள் தற்போது அலுவலகத்துக்கு உள்ளே இருக்கின்றனரா அல்லது வெளியே உள்ளனரா என்பது குறித்து எம்மிடம் முழுமையான தகவல் இல்லை- இப்படி அவர் பி.பி.ஸிக்குச் சொன்னார்.

இலங்கை அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க ஐ.நா நிபுணர் குழு கலைக்கப்படுமா? என்று பி.பி.ஸி செய்தியாளர் அவரிடம் கேட்டபோது இல்லை. அது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது- என்றார்.

அமைச்சர் விமல் வீரவன்ஸ வெளியிட்ட கருத்துத் தொடர்பாக ஐ.நாவிற்கு இலங்கை அரசின் மன்னிப்புக்கோரும் அறிக்கை ஏதாவது கிடைத்ததா? என்று பி.பி.ஸி செய்தியாளர் மீண்டும் ஒரு கேள்வியைக் கேட்டபோது ஆம் நாங்கள் இலங்கை அரசிடம் தெளிவான பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். இதுகுறித்து என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பது தொடர்பாக நேற்று (திங்கட் கிழமை) இலங்கைப் பிரதமர் அலுவலகத்திலிருந்து எமக்கு அறிக்கை ஒன்று கிடைத்தது. ஆனால் அதன் பின்னர் இன்று (அதாவது நேற்று) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது- என்றார்.

## ஐ.நா.செயலரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபுணர் குழு தனது பணிகளை ஆரம்பிப்பதற்காக இம்மாதம் மூன்றாவது வாரத்தில் கூடவுள்ளது எனத் தெரிவித்துள்ள மர்சுகி தருஸ்மன் இதற்கான சரியான திகதிகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் கூறினார்.

மேற்படி நிபுணர் குழுவை மூன்று முட்டாள்கள் என அமைச்சர் விமல் வீரவன்ஸ விமர்சித்துள்ளமை குறித்து தருஸ்மனிடம் கருத்துக் கேட்டபோது, தற்போது இது குறித்து கருத்து எதனையும் தான் கூற விரும்பவில்லை எனவும், விடயங்கள் எவ்வாறு நகருகின்றன எனப் பார்ப்போம் எனவும் அவர் பதிலளித்தார். (சி)

## தமிழருக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும், இதனால் வெளிநாடுகளில் தஞ்சம் கோரும் இலங்கையர்களுக்கு உடனடி அகதி அந்தஸ்து வழங்கப்பட முடியாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தனிப்பட்ட நபர்களின் நிலைமை மற்றும் பின்னணியை கருத்தில் கொண்டு எதிர்வரும் காலத்தில் புகலிடம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், யுத்தம் நிறைவடைந்துள்ள போதிலும் நிலைமைகள் இன்னமும் முழுமையாக வழமைக்குத் திரும்பவில்லை என்பதையும், சிலர் இன்னமும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்பதையும் ஐ.நா. நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள், சில ஊடகவியலாளர்கள், ஓரினச் சேர்க்கையாளர்கள், சில சிறுவர்கள் மற்றும் பெண்கள் இவ்வாறு அச்சுறுத்தலை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் அது தெரிவித்துள்ளது.

முன்னாள் யுத்த வலயத்தில் இப்போதும் தொடர்ச்சியாகப் பாலியல் மற்றும் பால் நிலை சமத்துவம் குறித்த துஷ்பிரயோகங்கள் தொடர்கின்றன எனவும் அது தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையர்களுக்குப் புகலிடம் வழங்கும் நடவடிக்கை களை மீள ஆரம்பிக்குமாறு மனித உரிமை கண்காணிப்பகம் ஆஸ்திரேலியாவிடம்கோரியுள்ளது. (அ-சி)

## முற்றுகையில் . .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குவிக்கப்பட்ட பொலிஸாரின் பாதுகாப்புடன் ஐ.நா. அலுவலக அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

பொலிஸாரின் அந்தச் செயற்பாட்டைக் கண்டித்து அவர்களுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் தர்க்கம் புரிந்து மோதலில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவத்தில் தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பியசிறி விஜயநாயக்க உட்பட ஆறு பேர் காயமடைந்தனர்.

அலுவலகத்தில் இருந்த பணியாளர்கள் எல்லோரும் பாதுகாப்பாக வெளியேற ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி நீல் புஹுனேயும் மற்றும் உயர் அதிகாரி ஒருவரும் மட்டும் அலுவலகத்தில் இருந்தனர்.

இந்த நிலையில் அங்கு வந்த வெளிவிவகார அமைச்சின் செயலாளர் றொமேஸ் ஜயசிங்க, ஐ.நா. அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி அவர்களது இருப்பிடங்களுக்குச் செல்ல உதவுவதாகத் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்களின் பயனாக ஐ.நா. அதிகாரிகள் இருவரும் அலுவலகத்தை மூடிக் கொண்டு இரவு 7.30 மணியளவில் வெளியே வந்து தமது வாகனத்தில் ஏறிய சமயம் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடனம் ஆடி, 'பைலா' அடித்து அதனை நகர அனுமதிக்கவில்லை.

றொமேஸ் ஜயசிங்க, விமல் வீரவன்ஸவுடன் கலந்துரையாடியதை அடுத்து அந்த அதிகாரிகள் இருவரும் பாதுகாப்பாக வெளியேறி தமது இல்லங்களுக்குச் சென்றனர்.

இதற்கிடையில்-

ஐ.நா.பணியாளர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றப் பொலிஸார் முயன்ற வேளை ஆர்ப்பாட்டக்காரர்களுடன் முறுகல் ஏற்பட்டு, அது மோதலாக மாறியது. அவ்வேளை, விமல் வீரவன்ஸ, பாதுகாப்பு அமைச்சுச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும்-

அந்த தொலைபேசி உரையாடலை அடுத்து கோத்தபாய விடுத்த அறிவுறுத்தலுக்கு அமைய பொலிஸார் அங்கிருந்து அகன்றுச் சென்றுவிட்டதாகவும் - செய்தி ஏஜென்ஸிகள் நேற்றிரவு தெரிவித்தன. (ஒ-1)

## ஐ.நா. அலுவலகம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமல் வீரவன்ஸ தலைமையில் ஆயிரக்கணக்கானோர் பொலிஸ் பூங்கா மைதானத்தில் இருந்து ஐ.நா. அலுவலகத்தை நோக்கி நேற்று ஊர்வலமாக வந்தனர். ஐ.நா. அலுவலகம் முன்பு பொலிஸாரால் அமைக்கப்பட்டிருந்த தடைகளை உடைத்தெறிந்துவிட்டு ஐ.நா. அலுவலகம் முன்பாகக் கூடினர். பொலிஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்காது மௌனமாக பார்த்துக்கொண்டிருந்தனர்.

ஐ.நா. அலுவலகத்தின் இரு வாயில்களையும் மறிக்கும் வகையில் மேடைகள் அமைக்கப்பட்டு சத்தியாக்கிரகமும் நடைபெற்றது.

இலங்கையின் யுத்தக்குற்றங்கள் குறித்து தமக்கு ஆலோசனை வழங்க ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் நிபுணர் குழுவை அமைத்துள்ளதை எதிர்த்தே இந்த முற்றுகைப் போராட்டம் நடத்தப்பட்டது.

இரு வாயில்களையும் மறிக்கும் வகையில் காலை தொடக்கம் சத்தியாக்கிரகம் நடைபெற்றதால் ஐ.நா. அலுவலகத்துக்குள் இருப்போர் வெளியே செல்ல முடியாத நிலைமையும், வெளியே உள்ளோர் அலுவலகத்துக்கு உள்ளே செல்ல முடியாத நிலைமையும் ஏற்பட்டது.

அமைச்சர் விமல் வீரவன்ஸ சில தினங்களுக்கு முன்னர், ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் நிபுணர் குழுவை வாபஸ் பெறாவிட்டால், கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகம் முற்றுகையிடப்படும் எனவும், நிபுணர் குழு வாபஸ் பெறும்வரை இந்த முற்றுகைப் போராட்டம் தொடரும் எனவும் அறிவித்திருந்தார்.

இதேவேளை, அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல இது அரசின் நிலைப்பாடல்ல. அமைச்சர் விமல் வீரவன்ஸவின் சொந்தக் கருத்து எனத் தெரிவித்திருந்தார்

இந்த நிலையிலேயே அமைச்சர் விமல் வீரவன்ஸ திடீரென நேற்றுக் காலை ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களுடன் கொழும்பு பொலிஸ் பூங்கா மைதானத்திலிருந்து ஊர்வலமாக ஐ.நா. அலுவலகம் நோக்கிச் சென்றனர்.

அங்கு அலுவலகத்தின் இரு வாயில்களையும் மறிக்கும் வண்ணம் சிறுமேடை அமைக்கப்பட்டது. அதில் சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது.

ஐ.நா. அலுவலகத்துக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதா? என்று 'உதயன்' பொலிஸ் பேச்சாளர் நிஷாந்த ஜெயக்கொடியிடம் கேட்டபோது, "வழமையான பாதுகாப்பே வழங்கப்பட்டுள்ளது. விசேட பாதுகாப்பு எதுவும் வழங்கப்படவில்லை. மக்களுக்கு ஆர்ப்பாட்டங்கள், சத்தியாக்கிரகங்கள் நடத்த உரிமை உள்ளது. இதை பொலிஸாரால் தடுக்க முடியாது" எனத் தெரிவித்தார்.

நேற்று நள்ளிரவு வரை போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. குறைந்த எண்ணிக்கையானோர் மட்டும் அங்கு அமைக்கப்பட்டிருந்த மூன்று மேடைகளில் அமர்ந்திருந்தனர்.

இன்றும் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று விமல் வீரவன்ஸ நேற்றிரவு ஊடகங்களுக்குத் தெரிவித்தார். (அ-1-சி)


**Clock Tower Road, Jaffna.**

மாபெரும் தொடர் கருத்தரங்கு

**இந்துநாகரிகம்**

காலம் : 07.07.2010-13.07.2010 வரை

நேரம் : 9-11 am

கே.எஸ்.ரமணன் B.A. (Hons)



**வேலையாள் தேவை**

பேக்கரி வேலையில் அனுபவமுள்ளவர்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:- புதியதுர்க்கா வெதுப்பகம். கலைவாணிலேன், பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.



**அவசரமாக குருதி தேவை**

O (-) ve (O நெகட்டிவ்) குருதி அவசரமாக நோயாளி ஒருவருக்குத் தேவை.

தொடர்பு:- வி.ஆர்.கே.இரத்தினபாரதி,ஜே.பி., விவசாயிகள்,532.பலாலிவீதி. பரமேஸ்வராசந்தி, திருநெல்வேலி. தொ.பே.: 0212225919



**வாடகைக்குத் தேவை**

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீடு அல்லது களஞ்சியம் உடன் வாடகைக்குத் தேவை.

தொடர்பு:- 0773583879



**Projector & Laptop for Rent**



Call on 0773963282, 0112361003

Also available Screen Sound System & Mic

Rs. 3500/- per day

MICRO PC SYSTEMS



பாதுகாப்பான அமைதியான சூழலில்,
புதிய இடத்தில் ....... புதிய பொலிவுடன் ........

பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

எமது வழமையான அனுபவம் வாய்ந்த
முன்னணி ஆசிரியர் குழுவின்வழி நடத்தலில் -

**A/L - 2011, 2012**

கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்

**ஆரம்பம் :- 10/07/2010 சனிக்கிழமை**


## மரண அறிவித்தல்

### பேரம்பலம் ஜெயச்சந்தர்

(தினக்குரல் பணியாளர்)



திருநெல்வேலி அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் இளவாலை கல்லூரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் ஜெயசந்தர் நேற்று (06.07.2010) செவ்வாய்க்கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னார் பேரம்பலம் சரஸ்வதி மணஇணையரின் அன்பு மகனும், நாகலட்சுமியின் அன்புக்கணவரும், கவிப்பிரியாவின் பாசமிகு தந்தையும், ஜெயந்தன், ஜெயம், ஜெயரஞ்சன், ஜெயராஜ், நிமல்ராஜ் ஆகியோரின் சகோதரனும், லட்சுமணன், சந்தராணி தம்பதியினரின் மருமகனும், தயாநிதி, திலகவதி, செல்லக்குமார், இராஜ்குமார், சசிக்குமார், விஜயலட்சுமி, நிசாந்தினி, பிரதாப்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2010) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளவும்

கல்லூரிவீதி,
இளவாலை.
தொ.பே.0772882178

தகவல் :
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதி நாளங்களில் அடைப்பு ஏற்படுவது ஏன்?

இதயத்திற்குச் செல்லும் குருதி நாளங்களில் அடைப்புகள் ஏற்படும்போது அது மாரடைப்பாக மாறுகிறது. மூளைக்குச் செல்லும் குருதி நாளங்களில் அடைப்புகள் ஏற்படும்போது அது பக்கவாதமாகப் பரிமாணமெடுத்து மனி தனை முடக்கி விடுகிறது. துடிக்கும் மனித இதயம், மனிதனுக்கும் வாழ்வை வழங்குகிறது.

மனிதன் வாழ வேண்டுமானால், அவனது இதயம் நிமிடத்திற்கு 72 முறை துடித்தே ஆகவேண்டும். இவ்வாறு துடித்து துடித்து மனிதனுக்கு வாழ்வை வழங்கும் இதயம் துடிப்பதற்குச் சக்தி தேவை. அந்தச் சக்தி இதயத்திற்குச் செல்லும் குருதிக் குழாய்கள் மூலம்தான் இதயத்திற்குக் கிடைக்கிறது. இந்த குருதி நாளங்களில் அடைப்புகள் ஏற்படும்போது இதயத்திற்குச் செல்லும் குருதி தடைப்படுகிறது. இதனால், நெஞ்சுவலி, மாரடைப்பு ஏற்படுகிறது. இதனைப் போல் மூளைக்குச் செல்லும் குருதிக் குழாய்களில் அடைப்புகள் ஏற்படும்போது அது பக்கவாதமாக, பரிமாணம் எடுத்து மனித வாழ்வை சீர்குலைக்கிறது.

இதயத்திற்கும் மூளைக்கும் குருதி மற்றும் தேவையான சத்துக்களைக் கொண்டு செல்லும் குருதி நாளங்கள் இதயத்தைப் போலவே சுருங்கி விரியும் தன்மை உடையன. அதனால்தான் அவற்றில் குருதி ஓட்டம் நடைபெறுகிறது.

குருதிக் குழாய்கள் சுருங்கி விரிய நைட்ரிக் ஒக்சைட் என்ற இரசாயனப் பொருள் உதவுகிறது. இது நமது உடலிலேயே உற்பத்தி ஆகும் பொருள். இதுதான் குருதி குழாய்களுக்குள் சென்று அவற்றைச் சுருங்கி விரிய உதவுகிறது. உயர் குருதி அழுத்தம் காரணமாகவும், குருதியில் கொழுப்புச் சத்து மற்றும் குருதியில் குளுக்கோஸ் அளவு அதிகமாகும்போது நைட்ரிக் ஒக்சைட் சுரப்பது குறைகிறது. மேலும் மன இறுக்கமும், மனக்கவலையும் கூட நைட்ரிக் ஒக்சைட் சுரப்பதைக் கெடுக்கிறது. புகைப்பிடிப்பது, மது அருந்துதல், அசைவ உணவுகளை அதிகளவு உட்கொள்வது போன்றவை கூட இந்த நைட்ரிக் ஒக்சைட் சுரப்பதைக் குறைக்கிறது.

நைட்ரிக் ஒக்சைட் உற்பத்தி குறையும்போது குருதிக் குழாய் சுருங்கி விரிவது குறையும். அப்பொழுது குருதிக் குழாய்களில் கொழுப்புப் படியத் தொடங்கும். கொழுப்புச் சேர்ந்து குழாயை அடைத்துவிடும். இதனால் மாரடைப்பு, பக்கவாதம் ஏற்பட வாய்ப்புண்டு. ★★★★★★★★★★★









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யுத்தத்தால் மூடப்பட்டிருக்கும்

# மட்டு. தாந்தாமலை வீதியைத் திறக்குக

### படையினரிடம் கூட்டமைப்புக் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 07

யுத்த சூழ்நிலை காரணமாக நீண்ட காலமாக மூடப்பட்டிருக்கும் மட்டக்களப்பு - வவுணதீவு பிரதேச செயலகத் திற்குட்பட்ட தாந்தாமலை மாவடி முன்மாரி சந்திவீதியை மீண்டும் மக்களின் பாவனைக்காகத் திறந்து விடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் படைத் தரப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ள வரலாற்றுப் பிரசித்திப் பெற்ற தாந்தா மலை முருகன் ஆலய வருடாந்த உற் சவத்தில் மக்கள் கலந்துகொள்ளும் பொருட்டு இப்பாதையைத் திறக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இப்பாதை மூடப்பட்டுள்ளதால் நீண்ட தூரம் சுற்றியே மக்கள் ஆலயத்தைச் சென் றடைய வேண்டிய சிரமங்களுக்குள்ளா கின் றனர் என்றும் அவர் விளக்கியுள்ளார். (ளி)

# மட்டு.மாவட்டத்தில் சிறந்த உள்ளூராட்சி மன்றத் தேர்வு

மட்டக்களப்பு, ஜூலை 07

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்க ளுக்கு சிறப்பான முறையில் சேவைகளை ஆற்றிவரும் சிறந்த உள்ளூராட்சி மன் றத்தை தெரிவுசெய்து விருது வழங்குவ தற் கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு பிராந் திய உள்ளூராட்சித் திணைக்களம் மேற் கொண் டுள்ளது.

இந்த வருடத்திற்கான உள்ளூராட்சி வார நிகழ்வுகள் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடைபெற வுள்ளன. இதை முன்னிட்டு மாவட்டத் தின் சிறந்த உள்ளூராட்சி மன்றம் தெரிவு செய்யப்பட வுள்ளது என பிராந்திய உள் ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி. ந.சத்தியானந்தி தெரிவித்துள்ளார்.

திண்மக் கழிவகற்றல், முகாமைத் துவம், உள்ளூராட்சி மறுசீரமைப்பு வேலைத்திட் டங்களின் அமுலாக்கம், டெங்கு ஒழிப்பு நட வடிக்கை, பொதுமக் களின் பிரச்சினைக ளைக் கேட்டறிந்து அவற்றை தீர்த்து வைத் தல், பிரஜைகள் பிரகடன வேலைத்திட்ட அமுலாக்கல் ஆகியவை தொடர்பான மதிப் பீடும் மேற்கொள்ளப்படவுள்ளது. (ளி)

# ஏறாவூர் பிரதேசத்தில் மூடப்பட்ட 5 வீதிகளைத் திறக்கக்கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 07

ஏறாவூர் பிரதேசத்தில் சுமார் 20 வரு டங் களுக்கும் மேலாக மூடப்பட்டுள்ள 5 வீதிகளை பொதுமக்களின் பாவனைக் காக திறந்து விடுமாறு ஏறாவூர் பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதேச செயலாளர் எம்.சி.அன்சாரி யால் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யிடம் இந்த வேண்டு கோள் விடுக்கப் பட்டது.

ஏறாவூர் புதிய சந்தை வீதி, ஜிப்ரி தைக்கா வீதி, கட்டுப்பள்ளி குறுக்குவீதி, தாமோதரம் வீதி, கிராம நீதிமன்ற வீதி ஆகிய 5 வீதிகளும் பாதுகாப்புக் காரணங் களுக்காக மூடப்பட்ட நிலையில் உள்ளன என இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

எனினும், தற்போது நிலவும் அமை தியான சூழ்நிலையிலும் இந்த வீதிகள் தொடர்ந்தும் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளன. இதனால் இப்பகுதி மக்கள் தமது போக்குவரத்துக்களை மேற்கொள்வதில் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். இந்த வீதிகளைப் புனர மைப்புச் செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது என் றும் இதில் விவரிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பொலிஸ் அதிகாரிகள் இதையடுத்து வீதிகளை மக் களின் போக்குவரத்துக்காக திறந்து விடு வது குறித்து சாதகமான முடிவு எடுக்கப் படும் என உறுதி அளித்துள்ளனர்.

இதேவேளை, பிரதேசத்தின் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின்போது, பொலி ஸாரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள் வது பற்றியும் ஆராயப்பட்டது. (ளி)

### அனுமதியின்றி மதில்; கட்டடம் அமைக்கத் தடை

குடாக்கரை உப அலுவலகப் பிரிவில் அனுமதியின்றி கட்டடங்கள் நிர்மாணிப் பதற்கும், மதில்கள் அமைப்பதற்கும் தடை விதிக் கப்பட்டுள்ளது.

பிரதேச சபைச் செயலாளரால் இதுதொடர் பான முன்னறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சிலர் அனுமதியின்றி கட்டடங்களை யும், மதில்களையும் அமைக்கின்றனர் என செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ளி)




# காரைதீவு விபுலானந்த ம.வி.யில் 19இல் தமிழ் மொழித் தினவிழா

அம்பாறை, ஜூலை 07

கிழக்கு மாகாண தமிழ்மொழித்தினப் போட்டிகள் இம்முறை கல்முனையிலும் தமிழ்மொழித்தினவிழா காரைதீவிலும் நடைபெறும் என கிழக்கு மாகாண கல் விப் பணிப்பாளர் அல் -ஹாஜ் எம்.ரீ.ஏ.நிஸாம் தெரிவித்தார்.

எதிர்வரும் 18, 19ஆம் திகதிகளில் தமிழ்த்தினப் போட்டிகள் கல்முனை கார்மேல் பத்திமா கல்லூரி, உவெஸ்லி கல்லூரி, இராமகிருஷ்ண மகாவித்தியால யம் ஆகிய 03 பாடசாலைகளில் நடை பெறும் என்றும் அவர் விவரித்தார்.

19ஆம் திகதி மாலை தமிழ் மொழித் தின விழா காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் நடைபெறும். பிரதம அதிதி யாக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவ னேசதுரை சந்திரகாந்தன் இதில் கலந்து கொள்வார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடி களாரின் 63ஆவது சிரார்த்த தினமான ஜூலை 19ஆம் திகதி அவரது பிறந்த ஊரான காரை தீவில் விழாவை நடத்து வது தமக்கு மகிழ்ச்சி யளிக்கிறது என்றும் மேலும் அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிட் டவை வருமாறு:-

50 தமிழ் மொழித்தினப் போட்டி நிகழ்ச்சிகளில் 14 எழுத்தாக்கப் போட்டி கள் கடந்த மாதம் நடைபெற்று முடிந்துள் ளன. எனவே, மீதி 36 போட்டிகளும் 18ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

போட்டி நிகழ்ச்சிகளுக்கான மத்திய ஒருங்கி ணைப்பு நிலையமாக கல்முனை உவெஸ்லிக் கல்லூரி இயங்கும். விழா ஒருங்கிணைப்பு நிலையமாக காரைதீவு விபுலானந்தா கல்லூரி இயங்கும்.

பிறமாவட்டங்களிலிருந்து வரும் போட்டியா ளர்கள் கல்முனையின் பிரதான பாடசாலைகளி லும் போட்டி நடுவர்களாக வரும் 70 பேரா ளர்கள் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியிலும் தங்கவைக்கப் படுவர்.

இதேவேளை, அகில இலங்கை தமிழ் மொழித்தினப் (2009) போட்டியில் பதக்கங்கள் வென்ற கிழக்குமாகாண 25 வெற்றியாளர்கள் காரைதீவு விழாவில் பதக்கங்களும், சான்றி தழ்களும் வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்படு வர்.

விழாவைச் சிறப்பிக்க வேண்டிய தார்மீக பொறுப்பு காரைதீவு மக்களைச் சார்ந்தது. (ளி)

# 14 பேரைக் கொன்று புதைத்த நபர் எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் கைது

### இறுதிக்கொலையில் ஏனையவை அம்பலம்

கொழும்பு, ஜூலை 07

பெண்ணொருவர் உட்பட 14 பேரைக் கொலை செய்து புதைத்தார் என்ற சந்தே கத்தின்பேரில் 51 வயதுடைய நபரொரு வர் கடந்த 3 ஆம்திகதி எம்பிலிப்பிட்டிய பொலி ஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

1989 ஆம் ஆண்டுமுதல் இதுவரை இவரால் கொலை செய்யப்பட்ட 14 பேரின் சடலங்கள் எம்பிலிப்பிட்டிய விலும், தங்காலையிலும் புதைக்கப்பட் டுள்ளன என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என எம்பிலிப்பிட் டிய பொலிஸ் நிலையைப் பொறுப்பதிகாரி நிரோஷன அபேகோன் தெரிவித்தார்.

எம்பிலிப்பிட்டிய மோதரவான பிரதேச வாசி யான சந்தேகநபர் ஆறு பிள்ளைக ளின் தந்தை யாவார்.

இவரால் கொலைசெய்யப்பட்டவர் எனக் கூறப்படும் இளைஞர் ஒருவரின் சட லம் மீட்கப்பட்டு, சந்தேகத்தின் பேரில் இவர் கைதுசெய்யப்பட்டதையடுத்தே ஏனைய கொலைகள் அம்பலமாகியுள் ளன.

ஊறுபொக்க வாசியான இந்திக ரங்க ஜீவ எனும் 22 வயதுடைய இளைஞர் ஹெல்பது ஆர பிரதேச வீடொன்றின் பின் பகுதியி லிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

எம்பிலிப்பிட்டிய நீதிவான் பந்துல குணரத்னவின் முன்னிலையில் சடலம் தோண்டியெடுக்கப்பட்டது. இதையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். தொலை பேசி அழைப்பொன்றை அடிப் படையாக வைத்தே சந்தேகநபர் மடக்கப் பட்டுள்ளார்.

கடந்த ஜூன்மாதம் 18 ஆம் திகதி காட் டுக்கத்தியால் வெட்டிக்கொல்லப்பட்ட இந்த இளைஞரின் சடலம் புதைக்கப்பட்ட இடத் தில் வாழைக்கன்று நடப்பட்டிருந்த தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எம்பிலிப்பிட்டிய பொலிஸார் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ளி)

# கண்டி எசல பெரஹரவில் ஆறாயிரம் பொலிஸார் பணி

கண்டி, ஜூலை 07

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை எசல பெரஹ ராவை முன்னிட்டு சுமார் ஆறா யிரம் பொலி ஸார் பாதுகாப்புக் கடமை களில் ஈடுபடுத்தப் படவுள்ளனர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின் றன.

பெரஹரா இடம்பெறும் நாள்களில் கண்டி மற்றும் அதனை அண்டிய பிர தேசங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வுள்ளது. கண்டி நகரம், கண்டி பொலிஸ் பிரிவு, கண்டி மாவட்டம் என மூன்று பாதுகாப்பு வலயங்களாக பிரிக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

சரித்திர பிரசித்தி பெற்ற கண்டி எசல பெர ஹரா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம்திகதி ஆரம்பமாகும்.

கண்டி நகர வீதி உலா செல்லும் 5 நாள் கும்பல் பெரஹரா எதிர்வரும் ஓகஸ்ட் 14 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரையும், அதி விசேட 5 நாள் பெரஹரா ஓகஸ்ட் 20 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதிவரையும் நடைபெறும்.

25 ஆம் திகதி அதிகாலை கெட் டம்பே, மாகாவலி கங்கையில் தீர்த்தோற் சவம் நடைபெற்றது. பகல் பெரஹ ராவுடன் கண்டி எசல பெரஹரா முடி வடையும்.

இதேவேளை, பெரஹரா உற்சவத்தில் விசேட போக்குவரத்து சேவைகளில் 400 முதல் 700 பஸ்களை ஈடுபடுத்துவது என தனி யார் மற்றும் இலங்கை போக் குவரத்துச் சபை கள் கூட்டாக முடிவெடுத் துள்ளன. அத்துடன், மேலதிக ரயில் சேவைகளும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் ஓகஸ்ட் 10 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை ஸ்ரீ தலதா மாளி கைக்கு மூன்று கிலோ மீற்றர் சுற்று வட் டத்தில் உள்ள அனைத்து இறைச்சி, மது பான விற்பனை நிலையங்களும் மூடப் படவுள்ளன என கண்டி மாவட்டச் செய லாளர் தெரிவித்தார்.

பெரஹராவை முன்னிட்டு கண்டியில் திரளவுள்ள பொதுமக்களுக்குத் தேவை யான சுத்தமான குடிதண்ணீர், சுகாதார மான உணவு, கழிவறைகள், வைத்திய சேவைகள் ஆகிய வற்றை கண்டி மாநகர சபையும், மத்திய மாகாண சபையும், அரச திணைக்களங்களும் இணைந்து செயற் படுத்தும் என மாவட்டச் செயலாளர் தெரி வித்தார். (ளி)

### புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பம் கோரல்

நுவரெலியா, ஜூலை 07

நுவரெலியா மாநகரசபையால் மாண வர்களுக்கு வழங்கப்படும் புலமைப் பரி சில் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நுவரெலியா மாநகரசபை எல்லைக் குட்பட்ட - பொருளாதார ரீதியாக வசதி யற்ற - உயர்தரம் கற்கும் மாணவ, மாண விகளுக்கே இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என நுவரெலியா மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.

மேற்படி புலமைப் பரிசிலுக்கு விண்ணப் பிக்க விரும்புவோர் பின்வரும் தகைமை களைக் கொண்டிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர் நுவரெலியா மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நிரந்தர வதி வினைக் கொண்டிருத்தல் வேண்டும். விண் ணப்பதாரியின் குடும்ப வருமானம் மாதமொன் றிற்கு 10 ஆயிரத்திற்கும் மேற்படாதிருத்தல் வேண்டும்.

அரச பாடசாலையொன்றில் அல்லது கட்டணம் அறவிடப்படாத தனியார் பாட சாலை யொன்றில் கல்வி பயின்றவராக இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. (ளி)

# தம்புள்ள பகுதியில் தாதியை தாக்கிய கான்ஸ்டபிள் கைது

கொழும்பு, ஜூலை 07

தம்புள்ள அரச வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர் ஒருவரைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ் டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என தம்புள்ள பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ள கம் உதாவ பூமியில் நடை பெற்ற படையினரின் கண்காட்சியை ரசித்துக் கொண்டிருந்த தாதியே இவ்வாறு தாக்கப் பட்டுள்ளார்.

மைதானத்தில் நின்றிருந்த பிக்கு ஒரு வரைக் கிண்டல் செய்தமை தொடர்பான முறைப் பாட்டையடுத்து அவ்விடத்துக்கு வந்த கான்ஸ்டபிள், தாதிமீது தாக்குதலை நடத்தி யுள்ளார்.

இதன்போது குறுக்கிட்ட பிக்கு இவ் விடயத்தில் தாதிக்கு சம்பந்தமில்லை எனக் கூறியுள்ளார். அதன்பின்னர் தாக்கு தல் நிறுத்தப் பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான தாதி வைத் திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேசமயம் இந்த விவகாரத்தில் சம்பந் தப்பட்டதாகக் கூறப்படும் இளை ஞர் கோஷ்டி தலைமறைவாகி விட்டது.

கைது செய்யப்பட்ட கான்ஸ்டபிளை நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. (ளி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org